"குடி அரசு" பதிப்பக வெளியீடு 19.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 JUN 1933
MADRAS

மதமும், லெனினும்

—:O:—

இஃது,

ருஷிய தேசத்தில் மதத்தை ஒழித்து, முதலாளித்தன்மையை அழித்து, தேச மக்கள் யாவரும் எத்துறையிலும் சமம் என்ற தர்மத்தைப் புகட்டி, ஏழை பணக்காரன் என்கின்ற பாகுபாடே இல்லாததான ஆட்சியை உண்டாக்கி நிலை நிறுத்தி விட்டு காலஞ் சென்ற V. I. லெனின் அவர்களால், ரஷியபாஷையில் எழுதப்பட்ட கட்டுரைத் தொகுதியின் தமிழ் மொழிபெயர்ப்பு.

குடி அரசு பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டது.

இதன் விலை] 1933. [அணா 6.

சந்தாதாரர்களுக்கு விலை அணா 4.

@
N33
113094.

ஒ
N33

892
320

உண்மை விளக்கம் பிரஸ்,
ஈரோடு.

TAMIL NADU ... LIBRARY
MADRAS
113094

பிரசுரிப்போர் முன்னுரை.

——:0:——

இந்த புத்தகமானது மதத்தைப்பற்றி தோழர் வி. ஐ. லெனின் அவர்களால் அவ்வப்போது ரஷிபப்பத்திரிக்கைகளில் வெளிவந்த அபிப்பிராயங்களைத்திரட்டி வெளியிட்ட புத்தகத்தின் தமிழ் மொழி பெயர்ப்பாகும்.

இது முழுவதும் சரியான மொழி பெயர்ப்பு என்று சொல்லலாம். ஆனாலும் சிற்சில இடங்களில் இந்நாட்டு முறைக்கேற்ற பாஷையில் ஆசிரியர் கருத்துக்கள் விளக்கப் பட்டிருக்கின்றன. மத விஷயமான சீர்திருத்தக்காரர்களிலும், மத மறுப்புக்காரர்களிலும் இரண்டு வகுப்புகள் உண்டு. அதாவது ஒரு வகுப்பார் செல்வவான்களுடைய நன்மைக்கு ஏற்ற சீர்திருத்தமும், மறுப்பும், செய்கின்றவர்கள். மற்றொரு வகுப்பார் ஏழை மக்களுடைய நன்மைக்கு ஏற்றவிதமாக சீர்திருத்தமும், மறுப்பும், செய்கின்றவர்கள். ஆனால் இந்த புத்தகமானது மதத்தை அடியோடு மறுக்கும் தன்மையில் விளங்குவதானாலும் முழுதும் ஏழைகள், கூலிகள், சரீரத்தில் வேலை செய்து கஷ்ட ஜீவனம் நடத்தும் தொழிலாளிகள் ஆகியவர்களுடைய நிலையிலிருந்து மதத்தை ஆராய்ச்சி செய்து அவர்கள் அடையும் கொடுமைக்கும், கஷ்டத்திற்கும் மதம் எவ்வளவு தூரம் நன்மை செய்து வருகின்றது என்கின்றதை கண்டறிந்து விளக்குவதாகும்.

ஆகையால் இப்புத்தகம் சமதர்மத்தொண்டு புரியும் ஒவ்வொரு ஆண் பெண்களிடமும் அவசியமாய் இருக்கவேண்டியதாகும்.

சுயமரியாதைக் காரர்களின் கொள்கை என்ன? அவர்கள் ஆஸ்திகர்களா? நாஸ்திகர்களா? அவர்கள் ஏன் தங்களை நாஸ்

திகர்கள் என்று சொல்லிக்கொள்வதில்லை? அவர்கள் ஏன் நாஸ்திகப்பிரசாரம் செய்கிறார்கள்? ஆஸ்திக நாஸ்திகத்திற்கும், அரசியலுக்கும் என்ன சம்மந்தம்? தொழிலாளிகள் விடுதலை யடைய மார்க்கமென்ன? தொழிலாளிகள் ஆஸ்திகர்களாயிருக்கவேண்டுமா? நாஸ்திகர்களாயிருக்கவேண்டுமா? என்கின்றதுபோன்ற அனேக விஷயங்களுக்கு இதில் சரியான—பொருத்தமான—யாராலும் தட்டிப்பேச முடியாததான பதில்கள் இருக்கின்றன. மற்றும் சுயமரியாதைக்காரர்கள் சாந்தியையும், தேசீயத்தையும் ஏன் தாக்குகிறார்கள்? என்பதற்கும் தக்க சமாதானம் காணப்படுவதுடன், சுயமரியாதை இயக்கத்தின் மீது அரசியல்வாதிகள், தேசீயவாதிகள், மதஇயல்வாதிகள் என்பவர்களாகியவர்கள் கற்பிக்கும் சகல விதமான குற்றங்களுக்கும் பழிசுமத்துதல்களுக்கும், ஆணித்தரமான பதில்கள் இருக்கின்றன. ஆதலால் ஒவ்வொரு சுயமரியாதைக் காரரும் இதை சட்ட புத்தகம்போல் கையாளவேண்டியதாகும். இதைப்படித்துணர்ந்த சுயமரியாதைக்காரர்கள் மதசம்பந்தமான எந்தக்கேள்விக்கும் யாதொருவித யோசனையும் தயக்கமும் இன்றி பதில் சொல்லக்கூடும் என்பதோடு, எவ்விதத்திலும் கலக்கமில்லாத மனத்தெளிவை அடையவும் கூடும்.

குறிப்பு:—மூல புத்தகத்தில் மூன்றாவது (கட்டுரை) அத்தியாயம் ருஷிய டூமா சபை என்னும் பார்லிமெண்ட் சபையில் பாதிரிகளுக்கும், சமதர்மக் கட்சியாருக்கும் வரவுசெலவு திட்டத்தின்போது நடந்த விவாதங்கள் நமக்கு பொருத்தமானதாகக் காணப்படாததால் அதைவிட்டு மற்றவைகள் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன.

குடி அரசு பதிப்பகத்தார், ஈரோடு.

——:0:——

முன்னுரை.

——:0:——

மார்க்சினுடைய போதனைகளில் இருந்து இயற்கையாயும், பிரிக்க முடியாததாயும் உள்ள விஷயம் நாஸ்திகமாகும். விஞ்ஞான (சைன்ஸ்) அறிவுக்கேற்ற மாதிரியில்தான் சமதர்மத்தைப்பற்றிய கொள்கைகளையும், திட்டங்களையும் மார்க்ஸ் போதிக்கிறார். மார்க்ஸ், ஏஞ்சல்ஸ் இருவரும் தங்கள் தங்கள் அடிப்படையான தத்துவ நிலை, பிரகிருதிவாதம் (உலகாயிதம்) தான் என்று சொல்லிக்கொண்டார்கள்.

பிரகிருதிவாத தத்துவத்தைவளர்க்கும்பொழுது மார்க்ஸ், ஏஞ்சல்ஸ் இருவரும் மதத்தை ஒட்டிய தத்துவ ஞானங்களையும் ஆராய்ச்சி செய்யவேண்டி வந்தது. 1844-ம் வருஷத்திலேயே "மதத்தைப்பற்றிய ஆராய்ச்சி மற்ற எல்லா ஆராய்ச்சிக்கும் ஆரம்பம்" என்று மார்க்ஸ் சொன்னார். இந்த ஆராய்ச்சியை இவர்கள் முழுவதும் நடத்திமுடித்துவிட்டதால் பிற்காலத்தில் இவர்களது தத்துவஞானத்தின் நாஸ்திக அம்சத்தை விவரிக்கவேண்டிய அவசியமில்லாமலேயே யாவரும் ஒத்துக் கொள்ளவேண்டியதாயிற்று. மார்க்ஸ் கட்சியைச் சேர்ந்த அனேகரைப்பற்றியும், முக்கியமாக லெனினைப்பற்றியும் இதுவே உண்மையாகும். ஆகையினால் மார்க்ஸ், ஏஞ்சல்ஸ், லெனின் ஆகிய நமது கர்த்தாக்களின் நூல்களில் அவர்களது தொழிலாளவகுப்பு சம்மந்தப்பட்ட நாஸ்திகத்தைப்பற்றி அதிக விரிவான விவரங்கள் எதுவும் இல்லாமலிருப்பது ஆச்சரியமல்ல. ஏனெனில் வெளிப்படையான உண்மையைப்பற்றி வெளியிட்டுப்பேசுவது அனாவசியமேயாகும்.

இதே காரணத்தினால்தான் பொதுவாய் தொழிலாளர் இயக்கத்தில் நாஸ்திகப் பிரசாரம் அவ்வளவு விளம்பரப்படுத்

தப்படவில்லை. தொழிலாளர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட பழய காலத்தில் தொழிலாளமக்கள் யாவரும் மதத்தை விட்டு விட்டார்கள். 1874-ம் வருஷத்தில் ஏஞ்சல்ஸ் அடியில்கண்டவாறு எழுதி இருக்கிறார். அதாவது:—

"ஐரோப்பிய தொழிலாளர் கட்சிகள் எல்லாம் அனேகமாக நாஸ்திகத்தை ஒப்புக்கொண்டு விட்டன" என்பதாகும். 1909ம் வருஷத்தில் லெனின் இம்மாதிரியாகவே "தன் வகுப்பு நிலையை உணர்ந்த சமதர்ம ஜனநாயகக் கட்சியார் இயற்கையாகவே நாஸ்திகர்களாய் இருக்கிறார்கள்" என்று பேசி இருக்கிறார். ஆனால் பிற்காலத்தில் தொழிலாளர் இயக்கத்தின் தீவிர பிரகிருதி வாத கொள்கையானது மாறுபட்டு, சோஷியல் ஜனநாயக கட்சிகள் சிறுபணக்கார வகுப்பாரின் ஆதரவைப் பெறுவதற்காக அவர்களின் மதநம்பிக்கைக்கு இடம் கொடுக்க ஆரம்பித்தன.

1869ம் வருஷத்திய எசெனாஷ் (Eisenach) திட்டம் என்னப்பட்ட ஜர்மன் சமதர்ம ஜனநாயகக் கட்சியின் முதல் திட்டத்தில் விளக்கமாகவும், சரியாகவும் அரசாங்கத்திலிருந்து கோவில் பிரிக்கப்பட வேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கையில், 1875ம் வருஷத்திய சோஷியலிஸ்ட் தொழிலாளர் கட்சியின் கோதா (Gotha) திட்டத்தில் "மதம் என்பது ஒவ்வொருவரையும் பொருத்ததான விஷயம்" என்று கண்டிருக்கிறது. இதன் மூலம் சமயத்திற்குத் தகுந்தாப்போல் வேஷம் போடும் கூட்டத்தாருக்கு இடம் கிடைத்தது. இந்த திட்டத்திற்கு உரை எழுதுகையில் மார்க்ஸ் இந்த மனப்பான்மையைக் கண்டித்து "மதம் என்னும் பேய்பிடித்திருப்பதிலிருந்து மக்களை விடுவிக்க வேண்டியதே தொழிலாளர் கக்ஷியின் கடமை" என்று குறிப்பிட்டு, "ஆனால் இந்தக்கூட்டத்தார் பணக்கார

வகுப்பாரின் கட்டுப்பாட்டிற்கு மீறி நடப்பது கூடாதென நினைக்கிறார்கள்" என்று கோபத்துடன் கூறுகிறார். 1891ம் வருஷத்தில் தயாரிக்கப்பட்ட இர்புர்ட் (Erfurt) திட்டத்திலும் ஜர்மன் சோஷியல் ஜனநாயகக் கட்சியார் இதே எண்ணங்களேயே சொல்லிக் கொண்டிருந்தார்கள். அத்திட்டத்தின் ஆருவது பாகத்தில் "பாதிரி மதக்கூட்டங்கள் தனித்த மனிதர்களின் சபையாகத்தான் கருத வேண்டும்" என்று கண்டிருக்கிறது.

இந்தப் பாகம் எப்படி அமைக்கப்பட வேண்டும் என்று எஞ்சல்ஸ் எழுதுகின்ற காலத்தில் "எல்லா மத கூட்டங்களும் ஒன்று கூட விடப்படாமல் தனிப்பட்ட நபர்களின் சபையாக அரசாங்கத்தாரால் பாவிக்கப்பட வேண்டும். அவைகளுக்கு பொதுப்பணங்களில் இருந்து ஆதரவு அளிக்கக்கூடாது. அவைகளுக்கு பொதுக்கல்வி விஷயத்தில் எவ்வித ஆதிக்கமும், சம்மந்தமும் இருக்கக் கூடாது" என்று குறிப்பிட்டிருக்கிருர். எஞ்சல்சுடைய இந்த அபிப்பிராயத்தை சோஷியல் ஜனநாயகக் கட்சியார் நிராகரித்ததோடு, அதை, கட்சி அங்கத்தினர்களுக்கு 1901 வருஷம் அக்டோபர் மாதம் வரை தெரிவிக்கவும் இல்லே. கட்சியின் இவ்வித மனப்பான்மை அனுபவத்திற்கு எவ்வித அருத்தம் கொடுத்ததென்ருல் "மதம் என்பது ஒவ்வொருவருக்கும் சொந்த விஷயம், அதாவது கட்சியின் அங்கத்தினர்களில் ஒருவர் மதத்தில் நம்பிக்கை வைத்திருப்பதும் வைக்காமல் இருப்பதும் கட்சிக்கு சம்மந்தப்பட்டதல்ல" என்பதாகும்.

இதே மாதிரியாகவே மற்ற தேசங்களில் உள்ள சோஷியல் ஜனநாயகக் கட்சிகளும் நடந்து கொண்டன வாகையால், மார்க்ஸ் உடைய கொள்கை மதத்திற்கு விரோதமான தல்ல

வென்கின்ற எண்ணம் சோஷியல் ஜனநாயகக் கட்சியாரிடம் பரவியது. மேலும் சோஷியலிஸ்ட் இயக்கத்தின் அனேக பிரிவுகள் தங்களுடைய கொள்கைகள் மதத்திலிருந்தே உதித்ததாக சொல்லிக் கொண்டன. உதாரணமாக அமெரிக்க சோஷியலிஸ்ட்டு கட்சியின் தலைவர்களையும், இங்கிலாந்து தேசத்து சுயேச்சை தொழிலாளர் கட்சியையும் சொல்லலாம். இந்த மாதிரி சோஷயலிஸ்ட்டு கொள்கைகளை திரித்து, இவைகளையே மதமூட நம்பிக்கைகளை தொழிலாளிகளிடம் பரப்புவதற்கு ஏற்ற ஆதாரமாக சமய வேஷதாரிகள் உபயோகித்தனர். மகாயுத்தத்திற்கு பிறகு சோஷியலிஸ்ட்டு ஜன நாயகக் கட்சியார் வெளிப்படையாகவும் உறுதியாகவும் மார்க்ஸ் உடைய கொள்கைகளை நிராகரித்து விட்டு மத ஆதரவைத் தேட ஆரம்பித்தனர். ஆகையால் பொது உடமை கட்சிக்காரர் மதத்தைப் பற்றிய தங்கள் அபிப்பிராயத்தை மறுபடியும் எடுத்துக்காட்ட வேண்டியது மிகவும் அவசியமாகி விட்டது. இந்த அபிப்பிராயம் லெனின் கட்டுரைகள் அடங்கிய இச்சிறு புத்தகத்தில் தெளிவாக விளங்குகின்றது. இவற்றினின்றும் தொழிலாளர்களை மதம் என்னும் போதையில் மயங்காமல் தடுப்பதற்கு என்னென்ன வழிகளைப் பின்பற்ற வேண்டுமென்பதாக லெனின் அபிப்பிராயப்பட்டார் என்பது விளங்கும்.

1902-ம் வருஷம் முதல் 1922-ம் வருஷம் வரை உள்ள காலத்தில் மதம் என்னும் விஷயத்தைப்பற்றி லெனின் எழுதிய கட்டுரைகள், கடிதங்கள் ஆகியவற்றில் முக்கியமானவைகள்மட்டும் இச்சிறு தொகுப்பில் வெளியிடப்பட்டிருக்கின்றன. 1908-ம் வருஷத்தில் லெனின் எழுதிய "பிரகிருதிவாதமும் விஞ்ஞான சோதனையும்" என்ற புத்தகத்தில் மத

எண்ணங்களைக் கற்பிக்கும் ஆன்மவாதம் பரிசீலனை செய்யப்பட்டிருப்பதோடு, பிரகிருதிவாத தத்துவமும் நன்ருய் விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது.

இத்தொகுதியில் உள்ள முதல்கட்டுரை 1905-ம் வருஷத்திலும், இரண்டாவது கட்டுரை 1909-ம் வருஷத்திலும் எழுதப்பட்டவை. தற்காலம் தொழிலாளர் இயக்கம் மதத்தைப்பற்றி என்ன மனப்பான்மையைக் கொண்டிருக்கிறது என்ற விஷயத்தைப்பற்றி மார்க்ஸ் கட்சித்தலைவர் ஒருவர் எழுதிய விசாரணைக்கட்டுரைகள் ஏதாவது வேண்டுமென்ருல் இவற்றைத்தவிர வேறு ஒன்றும்கிடையாது.

மூன்ருவது கட்டுரையில், இரண்டாவது கட்டுரையில் போலவே சார் சக்கரவர்த்தி காலத்தில் டூமா சபையில் (பார்லிமெண்டில்] மதத்தைப்பற்றி நடந்த விவாதங்களை ஆராய்ச்சி செய்து பிற்போக்கான கோவில் விஷயத்தைப்பற்றி தாராள நோக்கமுள்ள பணக்கார வகுப்பாரின் மனப்பான்மை எவ்வளவு தூரம் பலஹீனமாகவும் பிற்போக்கானதாகவும் இருந்ததென்று விளக்கிக்காட்டப்பட்டிருக்கிறது. (இந்தக் கட்டுரை மொழி பெயர்க்கப்பட வில்லை. மொ—ர்)

நான்காவது கட்டுரையில் 1902-ம் வருஷத்தில் வைதீக நம்பிக்கையுடையவர்களுக்கும், தாராள நோக்கமுடைய ஒரு பிரபுவுக்கும் நடந்த வாக்குவாதத்தின்போது எழுதப்பட்டது. அந்த சமயம் வைதீகர்கள் "மதம் பிரயோஜன மற்றது" என்று ஒப்புக்கொண்டது முக்கிய விஷயமாகும்.

இந்த தொகுதியின் ஐந்தாவது கட்டுரை 1922ம் வருஷத்தில் "மார்க்ஸ் கொடியின் கீழ்" என்னும் விஞ்ஞான பால்ஷ்விக் பத்திரிகையின் முதல் இதழில் முன்னுரையாக லெனின் எழுதியது. இதில் கட்சிக்கு உள்ளும், கட்சிக்கு வெளியிலும்

இடைவிடாமல் நாஸ்திகத்தைப் பரப்புவதற்கு பாடுபடவேண்டிய அவசியத்தை லெனின் வற்புறுத்துகிறார். நிறந்தரமாக நாஸ்திகத்தைக்கொண்டவர்களும், பிரகிருதிவாதிகளும் ஒன்று சேர்ந்து ஒரே முகமாக வேலை செய்யவேண்டுமென்று லெனின் தூண்டுவது முக்கியமானது.

ஆறுவது கட்டுரை, டால்ஸ்ட்டாயைப் பற்றியது, 1908-ம் வருஷத்தில் எழுதப்பட்டது. இது மேற்கு ஐரோப்பிய தேசத்திலுள்ள படித்த வகுப்பாரைத் திடுக்கிடச் செய்யும். ஏனென்றால் இதுவரை அவர்கள் படித்த பெரிய பெரிய நூற்களில் எல்லாம் டால்ஸ்ட்டாயைப்பற்றி அறியாத விஷயங்களை சில வாக்கியங்களில் லெனின் குறிப்பிட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். சரித்திர பூர்வமான பிரகிருதவாதம் என்னும் ஆதாரத்தைக்கொண்டு ஆராய்ச்சி செய்து டால்ஸ்ட்டாயின் கொள்கைகளுக்கு ஆதாரமாக விளங்கும் மத எண்ணங்களின் வேர்களைத் தோண்டி எடுக்கிறார். இதே சமயத்தில் புரட்சி இயக்கத்திற்கு குடியானவர்களின் உதவி எவ்வளவு அவசியம் என்பதையும் விளக்கிக்காட்டுகிறார்.

1913ம் வருஷத்தில் மாக்சிம்கார்க்கி என்ற நூலாசிரியருக்கு லெனின் எழுதிய இரண்டு கடிதங்களும் இந்தத்தொகுதியில் சேர்க்கப்பட்டிருக்கிறன. அவைகள் மிக முக்கியமானவை என்பதோடு கடவுளைப்பற்றி விவரிக்கப்பட்டிருப்பதுமாகும். அன்றியும் மதச்சார்புடனுடனும் ஆவேச, எழுச்சியுடனும் தோன்றும் ஒரு விதமான சோஷியலிஸ்ட் கட்சியை புதுப்பிப்பதை இக்கடிதங்கள் கண்டிக்கின்றன. 1905ம் வருஷத்தில் புரட்சி இயக்கம் தோல்வி அடைந்து விட்ட பிறகு "கடவுளைத்தேடும்" கூட்டமொன்று லூனு சார்ஸ்கி, கார்க்கி ஆகிய இவர்களைச்சுற்றி இருந்தது. இந்தக்குற்றம் லெனினுடன் நெருங்கி இருக்கும் சினேகிதர்கள் இடமும், தோழர்கள் இடமும்கா

ணப்பட்டதால் லெனினுடைய கண்டனம் ஆத்திரமாகப் பாய்ந்தது.

கடைசிக்கட்டுரையாக 1920ஆல் கம்யூனிஸ்ட்களுக்கும் ஒழுக்கத்திற்கும்உள்ள வித்தியாசத்தைப்பற்றி கம்சமால் என்ற கம்யூனிஸ்ட் இளைஞர்களுக்கு லெனின் செய்த அறிய பிரசங்கம் ஒன்றின் சில பாகங்கள் இத்தொகுதியின் கடைசியில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆகவே மேற்கண்ட கட்டுரைகள் அடங்கிய தொகுதிகளில் இருந்து லெனினுடைய நான்கு கொள்கள் முக்கியமாக விளங்கும். அவையாவன:—

1. நாஸ்திக மென்பது மார்க்ஸ் கொள்கைகளில் முக்கியமான பாகமாகையால் தனது முதலாளி—தொழிலாளி என்கின்ற வகுப்பு நிலையை உணர்ந்த ஒரு மார்க்ஸ் கட்சியானது நாஸ்திகப் பிரசாரத்தை செய்தே தீரவேண்டும்.

2. கோவில், மதம் ஆகியவைகளை விட்டு அரசாங்கத்தையும், பள்ளிக்கூடங்களையும் அறவே பிரித்துவிட நாம் முயல வேண்டும்.

3. தொழிலாளர்களுடைய ஆதரவை நாம் சம்பாதிக்க வேண்டுமானால் முக்கியமாக நாம் அவர்களோடு தினசரியும் கலந்து அவர்களது பொருளாதார அரசியல் நன்மைகளுக்கு பாடுபட வேண்டும். ஆகையால் தொழிலாளர் நன்மையை பாதுகாப்பதிலிருந்து கிளம்பி அதோடு நெருங்கிய சம்பந்தத்துடன் நாஸ்திகப் பிரசாரம் வளர்ந்து வர வேண்டும்.

4. கஷ்டப்பட்டு உழைக்கும் பொது மக்கள் மதத்திலிருந்து கடைசியாக விடுதலை அடையக் கூடிய காலம் எதுவென்றால் தொழிலாளர் புரட்சிக்கு பிறகு ஏற்படும் பொது உடமைச் சமூகம் ஏற்படும் காலமேயாகும்.

ஆனல் இந்தக் காரணத்தினல் நாம் நாஸ்திகப் பிரசாரம் செய்வதை ஒத்திப் போடக் கூடாது. தொழிலாளர் போராட்டத்தின் பொது அவசியங்களுக்கு உட்பட்டு நாஸ்திகப் பிரசாரம் செய்து வர வேண்டியது மிக அவசரம் என்றே வெளிப்படுகிறது.

மதத்தைப்பற்றி லெனின் கொண்டிருந்த மனப்பான்மையை, 1919-வருஷம் மார்ச்சு மாதம் வெளியிடப்பட்ட ரஷ்ய போதுவுடமைக் கட்சியின் திட்டத்தில் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. அதாவது "பொது ராஜீய பிரச்சினைகள்" என்ற தலைப்பில், 13வது பகுதியில் அடியில் கண்டபடி காணப்படுகின்றது. அதாவது:—

"மதத்தைப் பற்றிய விஷயத்தில் சோவியத் ஐக்கிய நாடுகளின் பொது உடமைக் கக்ஷி ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட கோவிலையும் அரசாங்கத்தையும் பிரித்தல், கோவிலையும் பள்ளிக் கூடங்களையும் பிரித்தல் என்னும் கோரிக்கைகளோடு நிற்க முடியாது. இந்த கோரிக்கைகள் எல்லாம் பணக்கார ஜன நாயகத்திட்டங்களிலும் காணப்பட்டாலும் கூட, மதபிரசாரமும் பணக்காரர்கள் நன்மையும் ஒன்ருேடொன்று பல வழிகளிலும் சம்பந்தப் பட்டு பிணைத்துக் கொண்டிருப்பதால் இந்த கோரிக்கைகள் எந்த விடத்திலும் ஈடேற்றப்படவில்லை."

"சோவியத் ஐக்கிய நாடுகளின் பொது உடமைக் கட்சியாரின் அபிப்பிராயத்தில் பொது மக்களுடைய சமூக பொருளாதார நடவடிக்கைகள் நிதானமாகவும் உறுதியாகவும்திருத்தி அமைக்கப் பட்டால் ஒழிய மத முறண்பாடுகள் மறைய மாட்டா என்று தோன்றுகின்றபடியால் அந்தப்படியே நடக்க வேண்டியவர்களாகிருர்கள். கொள்ளையடிக்கும் கூட்டத்திற்கும்

மதப்பிரசாரத்திற்கும் அதன் நிர்மாணங்களிற்கும் ஏற்பட்டிருக்கும் சம்பந்தங்களை அறவே ஒழிக்கவும், தொழிலாள மக்களை மத முரண்பாடுகளில் இருந்து உண்மையில் விடுவிக்க வழிதேடவும், விஞ்ஞானம், கல்வி, மதவிரோதம் என்ற விஷயங்களைப் பற்றி கூடிய அளவு விசாலமான பிரசாரம் செய்ய நிர்மாணிப்பதும் ஆகிய இந்த வேலைகளைச் செய்ய இக்கக்ஷி முயலும். அதோடுகூட இந்த முயற்சியில் மதத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர்களின் மனதுக்கு ஆத்திர மேற்படுத்தாமல் ஜாக்கிரதையாக பார்த்துக்கொள்ளவேண்டும். இது மிகவும் அவசியமான காரியமாகும். ஏனென்றால் அந்தப்படி அவர்களுக்கு ஆத்திரத்தை மூட்டுவதால் அவர்களுக்கு ஒருவித ஆவேசம் ஏற்பட்டு அவ்வாவேசமானது மதத்தை உறுதிப்படுத்துவதிலேயே கவலை செலுத்தச்செய்யும்."

இதைப் போலவே 1908ம் வருஷம் சர்வதேச பொதுவுடமைக் கக்ஷியார் 6-வது உலக காங்கிரசில் ஏற்படுத்திய திட்டத்தில் அடியில் கண்டவாறு கூறி இருக்கிறார்கள்.

"நமது கல்வி, புரட்சி வேலைகளில் மக்களை மயக்கும் மதத்தோடு போர்புரிவது ஒரு முக்கிய வேலையாகும்.

இந்தப் போர் இடைவிடாமலும், அமைப்புதிட்டத்தோடும் உறுதியாய் நடத்தப்பட வேண்டும். தொழிலாளருடைய ஆதிக்கத்தில் கோவிலுக்கு அரசாங்கம்எவ்வித ஆதரவும் அளிக்கக்கூடாது.

பாதிரி கூட்டங்கள் புரட்சிக்கு விரோதமாகச் செய்து வரும் வேலைகளைக்கண்டிப்புடன் அடக்கவேண்டும்.

ஆனால் அதே சமயத்தில் மதத்திற்கு விரோதமான பிரசாரம் நடத்துவதற்கு சாத்தியமான முயற்சிகள் எல்லாம் செய்யப்படும்.

கோவிலுக்கு ஏற்பட்டிருக்கும் பெருமையும் செல்வாக்கும் ஒழிக்கப்படும்.

விஞ்ஞான பிரகிருதிவாத நோக்கப்படி கல்வி திட்டங்கள் அமைக்கப்படும்." என்றும்,

மற்றும் இந்த திட்டத்திலேயே "முதலாளி தத்துவத்தில் எழுச்சியடையும் விதிகளும், தொழிலபிவிர்த்தி செய்யும் முதலாளிகளின் காலமும்" என்ற தலைப்பின் கீழ் அடியில் கண்டபடி காணப்படுகின்றது.

"விஞ்ஞான ஆராய்ச்சி ஏராளமாகப் பெருகி பலனளித்து வந்த போதிலும், பணக்கார வகுப்பார் இந்த ஆராய்ச்சிக்குத் தக்கவாறு ஒரு தத்துவஞானம் ஏற்படுத்திக்கொள்ள வகையின்றி பழைய பாரமார்த்திகம், யோகம், மதமூடநம்பிக்கைகள் ஆகியவைகளையே வளர்த்து வருகிறார்கள்."

மேலும் இந்த திட்டத்தின் முன்னுரையிலும் அடியிற் கண்டவாறு உறுதியாய் கூறப்படுகிறது "மார்க்ஸ், எஞ்சல்ஸ் இவர்களுடைய பிரகிருதி தத்துவத்தை வாதித்தும் பிரசாரம் செய்தும் வருவதோடு, உண்மையை நிர்த்தாரணம் செய்வதற்கு அதையே ஒரு புரட்சி மார்க்கமாக கொண்டு அந்த உண்மையை புரட்சி வழியாக மாற்றி அமைத்தும் சர்வதேசபொதுவுடமைக்கட்சியார் பணக்கார தத்துவங்களுக் கெல்லாம் விரோதமாய் வெகு தீவிரமாக போராடுவார்கள்" என்பவைகளாகும்.

இந்த முன்னுரையின் ஆரம்பத்தில் மார்க்ஸ் உடைய கொள்கைகளுக்கு நாஸ்திகம் அவசியம் எனக்கூறினோம். மார்க்ஸ் உடைய கொள்கைகளுக்கு ஒத்துவராத நாஸ்திகம் ஒரு முடிவும் காணமுடியாததும், முன்னுக்குப் பின் முரண்பாடாயுமிருக்கநேரிடும் என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிடுகிறோம்.

பணக்கார வகுப்பார் துவக்கிய சுதந்திர அறிவு இயக்கங்கள்எல்லாம் பின்னடைந்து விட்டதே இதற்கு தக்க சான்றாகும்.

விஞ்ஞானத்தில் இருந்து உதிக்கும் பிரகிருதிவாதம் சரித்திர பூர்வமான பிரகிருதி வாதமாக அதாவது, மார்க்ஸ் உடைய கொள்கையாக மாறாத பொழுதெல்லாம் அது பாரமார்த்திகமாகவும், மூடநம்பிக்கை கொள்கையாகவுமே மாறுகிறது.

——:0:——

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 JUN 1933
MADRAS

1-ம் அத்தியாயம்.

சமதர்மமும் சமயமும்.

-0:-

(Socialism and Religion)

வாழ்க்கைத்திட்டம்.

உலக மக்களின் தற்காலத்திய சமூக வாழ்க்கைத் திட்டமானது (சரீரத்தினால் பாடுபட்டுத்) தொழில் செய்துவாழும் பெருவாரியான மக்களை, (சரீரத்தினால் பாடுபடாத ஜமீன்தார், மிராசுதார், முதலாளிமார், குருமார், புரோகிதர், மேல் ஜாதியார், அரசர் என்று கூறப்படும்) ஒரு சிறு கூட்டத்தார் தங்கள் சுயநலத்திற்காக அடக்கி யொடுக்கி ஆண்டு பயன் பெற்றுவரும் முறையையே அஸ்திவாரமாகக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கிறது. இச்சிறு சுயநலக்கூட்டத்தார்கள் தான் உலகின் ஸ்தாவர சங்கமச் சொத்துக்களாகிய, நிலம், பொருள் முதலியவற்றிற்குச் சொந்தக்காரர்களாய் இருந்து வருகின்றார்கள். இப்படிப்பட்ட திட்டத்தை ஒப்புக் கொண்டு வாழ்க்கை நடத்திவரும் மக்கள் அடிமைச் சமூக மக்களாகும்.

ஏனெனில் தொழிலாளிகள் (அதாவது சரீரத்தினால் பாடுபடுகிறவர்கள்) தங்கள் வாழ் நாள் முழுவதும் மிராசுதார்களுக்கும், முதலாளிகளுக்கும் (அதாவது பூமிக்குச்சொந்தக்காரர் என்பவர்களுக்கும்) உழைக்கவே தாங்கள் பிறந்ததாகக் கருதி, அவ்வாறுழைக்கத் தங்களுடைய சரீரத்தில் சக்தியும், ஆயுளும் இருப்பதற்காகவேண்டி, தங்களுடைய ஆகாரத்திற்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவுமாத்திரம், மிராசுதார்

ளிடமிருந்தும், முதலாளிகளிடமிருந்தும் பெற்றுக்கொண்டு, தாங்கள் என்றும் அடிமையாகவே இருக்கும் வண்ணம் தங்களது வாழ்க்கையை நிர்ணயித்துக்கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். தொழிலாளிகள் அனுபவிக்கும் இம்மாதிரியான பொருளாதாரக்கொடுமையின் பயனானது அவர்களுக்கு, அவர்கள் அரசியல் துறையில் சிறிதும் சுதந்திரமில்லாமல் அடிமைத் தன்மையை ஏற்படுத்தியதோடு, சமூகத்துறையிலும் கேவலமான தாழ்ந்த நிலைமையையே கொடுத்திருக்கின்றது. இதனால் தான் தொழிலாளிகள் (சரீரத்தினால் பாடுபட்டு உழைப்பவர்கள்) மனிதத்தன்மை அற்றவர்களாகவும், சமூக வாழ்க்கைக்கு வேண்டிய ஒழுக்க முறைகளில், லக்ஷியமற்றவர்களாகவும் இருக்கவேண்டியவர்களாகிறார்கள்.

தொழிலாளிகள் தாங்கள் அனுபவிக்கும் பொருளாதாரக் கொடுமையை நீக்கிக் கொள்வதற்காக அரசியல் துறையில் தங்களுக்குச் சுதந்திரம் வேண்டுமென்று பாடுபட்டுக்கொஞ்சமாகவோ, அல்லது அதிகமாகவோ சில அரசியல் சுதந்திரங்களைப் பெற்று விட்டாலும்கூட, உலகில் முதலாளித்தத்துவம் வலுவாய் இருக்கும் வரையிலும் அச்சுதந்திரங்களால் தொழிலாளிகளுக்கு யாதொரு பயனும் ஏற்படப்போவதில்லை. அதாவது தங்களுக்கு ஏற்பட்ட கொடுமையையும், தாழ்ந்த நிலையையும் போக்கிக்கொள்ள முடியவே முடியாது.

மதம் (சமயம்)

மதம் என்பது பிறருக்கு உழைத்து வறுமைப்பட்டு, தாழ்த்தப்பட்டு, அடிமைப்பட்டுக்கிடக்கும் மக்களை உற்பத்தி செய்யவும், அவர்களை விடுதலையடைய வொட்டாமலும், தலையெடுக்க வொட்டாமலும், அழுத்திவைக்கவும் ஏற்பட்ட சாதனங்களில் மிக முக்கியமான தொன்றாகும்.

ஆதிகாலத்தில் காட்டில் அலைந்து திரிந்து வாழ்க்கை நடத்திய மக்கள் தங்களின் சாதாரண புத்தியாலறிந்துகொள்ள முடியாதிருந்த இயற்கைக் காட்சிகளையும், அதன் அற்புதச் செயல்களையும், கடவுளென்றும், பேயென்றும், தெய்வீகச் செயலென்றும், ஆண்டவனின் அருளென்றும், அற்புதமென்றும் எப்படி நம்ப நேர்ந்ததோ அதே போன்று மதத்தினால் தற்காலத்தில் தொழிலாளிகள், தங்களை ஏய்த்து அடக்கியொடுக்கி ஆண்டு கொடுமைப்படுத்தும் முதலாளி வர்க்கத்தினர்களின் கொடுமையினின்று மீள்வதற்குச் சற்றும் வகைதேடாமல் இது கடவுள் செயலென்றும், தங்கள் தலைவிதியென்றும் முற்பிறப்பில் தாங்கள் செய்த கர்மத்தின் பலனென்றும் எண்ணிக் கொள்வதோடல்லாமல் இப்பிறப்பில் தம் அறியாமையால் ஏற்பட்டுள்ள கஷ்டங்களையும், பணக்காரவர்க்கம் மனித ஜீவ அபிமானமற்று தமக்கியற்றும் கொடுமைகளையும் பொருமையோடு சகித்துவந்தால் அதற்குவெகுமதியாக அடுத்த பிறப்பில் அல்லது வேறு உலகில் நற்கதியடையலாம், நலம் பெறலாம் என்று எண்ணித் தங்களைத்தாங்களே சமாதானஞ் செய்து கொண்டு விடுதலைபெற எவ்வித முயற்சியும் புரியாதிருக்க நேருகின்றது.

மத உபதேசம்.

ஏனெனில் பாடுபட்டுழைக்கும் மக்களுக்கு மதம் உபதேசிப்பதென்னவென்றால்,

"வாழ்நாள் முழுதும் வறுமையினாலும், அன்னியர்கொடுமையினாலும், துன்பப்படுகிறவர்கள் தங்கள் துன்பத்தை அமரிக்கையாகப்பொருத்துக்கொண்டிருந்தால் அவர்கள் காட்டும் பொறுமைக்குத் தகுந்தவாறே 'அடுத்த பிறப்பில்—அல்லது மேலுலகில் பொன்றாத இன்பவாழ்வை (நற்கதியை) பெ

றுவார்கள்" என்ற நம்பிக்கையை மக்கள் உள்ளத்தில் புகுத்துவதே யாகும். பிறருடைய உழைப்பால் செல்வத்தைப் பெருக்கிப்பிழைக்கும் வஞ்சக முதலாளி கூட்டத்தார்க்கு மதம் உபதேசிப்பதென்னவென்றால்,

"செல்வவான்கள் (ஏழைத்தொழிலாளிகள் தங்கள் உழைப்பிற்குத் தகுந்த பலனையடையவிடாது, அவர்களுக்கு நியாயமாய்க் கிடைக்கவேண்டிய பலனை இப்பொழுதுள்ள முதலாளிகளின் அரசாங்கச்சட்டமாகிய கொடும்முறையால் கொள்ளையடித்து) பலவகைகளிலும் பொருள் சம்பாதித்து அனுபவித்துவரும் தங்கள் செல்வத்தில் ஒரு சிறுபாகத்தை (கோவிலென்றும், குளமென்றும், சத்திரமென்றும் சாவடியென்றும் செலவு செய்தலோடு, குருமார்களுக்கும், புரோகிதர்களுக்கும், பிராமணர்களுக்கும்" ஊரார் உழைப்பில் வாழ்விருக்கும் சோம்பேறிகளுக்கும்) தானதர்மம் செய்து விட்டால் அதுவே அவர்கள் பொருள் திரட்டுவதற்கும், வேறு பலவற்றிற்கும் செய்த கொடுமைகளுக்குத்தக்க பரிகாரமாகும்" என்பதுவாகும். இக்கொள்கையானது (மிராசுதார்,முதலாளிமார் முதலியோர்கள் மற்றவர்களை வாட்டிவதைத்து வஞ்சித்து ஏமாற்றிக்கொள்ளை அடிப்பதை சரியென்று ஒப்புக்கொள்வதோடு) அவர்கள் 'மோக்ஷலோகம்' போவதற்கு வெகு சுலபமான கிரயத்தில் "அனுமதிச்சீட்டு" (டிக்கட்டு)ம் கிடைத்து விடும் என்கின்ற நம்பிக்கையை மக்களுக்குப் புகுத்துவதுமாகும்.

மதம் என்பது ஒரு போதைப்பொருளுக்குச் சமமானது. "அதாவது அபினுக்குச் சமமானது" என்று அறிஞர் மார்கஸ் மொழிந்துள்ளார்.

மேலும் "முதலாளித்துவத்திற்கு அடிமைப்பட்டமக்கள் தங்கள் மனிதத்தன்மையை முற்றிலும்மறந்து, நாகரிகமான

வாழ்க்கை நடத்தவேண்டுமென்ற எண்ணம் சிறிதுமின்றி உழலச் செய்யும் வழியே சமயமாகும்” (மதமாகும்) என்றும் கூறியுள்ளார்.

அடிமை நிலை அறிந்த தொழிலாளி.

ஒரு அடிமை தான் பிறரால் அடிமைப்படுத்தப்பட்ட அடிமை யென்ற உண்மையை உணர்ந்து தனது விடுதலைக்குப் போராட எத்தனிப்பானேயானால் அப்பொழுதே அவனது அடிமைத்தனத்தில் பாதி மறைந்து விடும். தற்காலத்தில் தங்களுடைய அடிமை நிலையை அறிந்த தொழிலாளிகள் பெரிய தொழிற்சாலைகளின் நடுவில் வளர்ந்து வந்ததின் பயனாகவும், பட்டின வாழ்க்கையின் பயனாகவும், அறிவு வளர்ச்சி பெற்று மதத்தின் பெயராலேற்பட்ட பல மூடக்கொள்கைகளை துச்சமெனஎண்ண வேண்டியவர்களாகிறார்கள். பரலோகத்தைப்பற்றிய கவலை பாதிரிகள், முல்லாக்கள், பார்ப்பனர்கள், குருமார்கள் ஆகியவர்களுக்கும், கபடவேடதாரிகளான முதலாளிகளுக்குமே விட்டுவிட வேண்டியவர்களாகின்றார்கள். ஒரு அறிவுள்ள தொழிலாளியானவன் இவ்வுலகில் தனது வாழ்க்கை மேன்மையடைய வேண்டுமெனறுதான் கருதுவான்.

தற்காலத்தில் தொழிலாளிகள் சமதர்மக்கட்சியை (சோஷியலிஸ்ட்பார்ட்டியை) சேர்ந்தவர்கள். சமதர்மமானது விஞ்ஞான (சயின்ஸ்) வெளிச்சத்தின் உதவியைக்கொண்டு மதம் என்ற பேரிருளையகற்றுகிறது. அதன் மூலம் தொழிலாளிகள் இறந்த பின்னர் நிகழப்போகும் வாழ்க்கையில் கவலை கொள்வதை துறந்து விட்டு இந்நிலவுலகில் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் கொடுமை நிறைந்த வாழ்க்கையினின்று மீள்வதற்காகப் போராடுவார்கள்.

மதம் அவரவர்களுடைய சொந்த விஷயம்.

"மதம் என்பது அவரவர்களின் சொந்த விஷயம்" இதுவே மதத்தைப்பற்றி சமதர்மவாதிகளின் (சோஷியலிஸ்ட்ஸ்) அபிப்பிராயமாகும். ஆனால் இறந்துபட்ட வார்த்தைகளைப் பற்றி தப்பர்த்தம் செய்து கொள்ளாமல் ஜாக்கிரதையாயிருக்க வேண்டியது அவசியமாகும். அரசாங்கம் சம்மந்தப்பட்ட வரையில் மதத்தை அவரவர்களுடைய சொந்த விஷயமாகப் பாவிக்கவேண்டுமென்று சொல்லுகின்றோமேயல்லாமல், நம் சமதர்மக் கட்சியார் சம்மந்தப்பட்டவரையில் நம் அங்கத்தினர்களுக்கு மதத்தை அவரவர்களுடைய சொந்த விஷயமாக விட்டுவிட முடியாது.

அரசாங்கமும், மதமும்.

அரசாங்கம் மதத்தோடு சம்மந்தம் வைத்துக்கொள்ள இடம் கொடுக்கக்கூடாது. மதத்தைச்சேர்ந்த ஸ்தாபனங்களை அரசாங்கத்துடன் சம்பந்தப்படவும்விடக்கூடாது. ஒவ்வொருவருக்கும் அவரவர் இஷ்டப்படி ஏதாவது ஒருமதத்தைச்சேரவோ அல்லது தாராளமாய் சமதர்ம வாதிகள் மாதிரி மதமே கூடாது என்றோ,நிரீச்சுரவாதிஎன்றோ வாழச் சுதந்திரமிருக்கவேண்டும். மதத்தின் காரணமாய் எந்த உரிமையும் எவருக்கும் ஏற்படுத்தவிடக்கூடாது. உத்தியோக முறையில் அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்படும் ஆதாரங்களில் எவருடைய மதத்தைப்பற்றியும் எதுவும் காணக்கூடாது. எந்தக் கோவிலுக்கும், எந்த சமயஸ்தாபனத்திற்கும் அரசாங்கத்திலிருந்து மோகினித்தொகை (தஸ்த்தீக் தொகை) யோ, வேறு நன்கொடை (கிராண்டு) முதலிய உதவியோ கொடுக்கக்கூடாது. மதஸ்தாபனங்கள் அரசாங்கத்துடன் எந்தவித சம்பந்தமுமில்

லாமல் அவரவருடைய சொந்த தனிச்சங்கங்களாகவே இருக்க வேண்டும்.

மேற்கண்ட நிபந்தனைகள் அமுலுக்குக் கொண்டு வந்தால் தான் பொது மக்கள் மதஸ்தாபனங்களுக்கு அடக்கம் என்றும், மதஸ்தாபனங்கள், அரசாங்கத்திற்கு அடக்கம் என்றும் ஒன்றுக்கொன்று பிணைத்திருக்கும் பழமையான நிலைமைகள் மாறும். பிறகுதான் தற்காலத்தில் அனுஷ்டானத்தில் இருந்து கொண்டு மனித சுதந்திரத்தைப் பாதிக்கும்படியான அநாகரிக வாழ்க்கை முறைகளை—அதற்காதரவான சட்டங்களை ஒழிக்க முடியும். சட்டத்தின் மூலம் ஒரு மதக்கொள்கைகளின்படி நடப்பதற்கும், நடக்காமல் இருப்பதற்கும் தடைகள் ஏற்பட்டிருக்கின்றன. இவ்விதச்சட்டங்களால் மனச்சாட்சியை அவமதித்து மதத்தினால் ஏற்பட்ட மூடக்கொள்கைகளைப் பரப்புபவர்களுக்கே உத்தியோகமும், ஊதியமும் வெகுமதிகளாக அளிக்கப்பட்டன. மதஸ்தாபனம்வேறு, அரசாங்கம் வேறு என்று பிரிப்பதே சமதர்மவாதிகளின் (சோஷியலிஸ்ட்டின்) முக்கிய கோரிக்கையாகும்.

ருஷியப்புரட்சி.

ருஷிய தேசத்திய புரட்சியில் மேற்கண்ட இக்கோரிக்கையை ஈடேற்றுவதே அரசியல் விடுதலையின் முதற்படியாகக்கருதவேண்டும்; இதற்குச் சாதகமான நிலைமை ருஷியப்புரட்சியால் ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் ருஷியப்பாதிரிகள் கூட ருஷியப்பிரபுக்களின் வெறுக்கத்தக்க ஏதேச்சாதிகாரத்தை எதிர்க்கத்தலைப்பட்டு விட்டார்கள். ருஷியப்பாதிரிகள் அறியாமையாலும், அச்சத்தாலும் பீடிக்கப்பட்டிருந்தபோதிலும் கூட பிரபுக்களின் ஆட்சி வீழ்ச்சியடைகின்றது என்பதைக்கண்டு கொண்டு பொதுமக்களின் சுதந்திர எழுச்சியை

ஆதரிக்கத் தலைப்பட்டுவிட்டார்கள். அதிகாரிகளின் கொடுமைகளைக் கண்டிக்கவும் போலீஸ்காரர்கள் "கடவுளின் வேலைக்காரர்களாகிய" தங்களைக்கூட அவமதிப்பாய் நடத்துவதை எதிர்க்கவும் ஆரம்பித்துவிட்டார்கள்.

சமதர்மக் கட்சிக்காரர்கள் இந்த இயக்கத்தை ஆதரித்துப்பாதிரிமாரின் கோரிக்கைகளின் உண்மையான முடிவுக்கு அவர்களைக்கொண்டு போகவேண்டும். போலீஸ்காரர்களின் அக்கிரமத்துக்குப் பயந்து, இப்போது பாதிரிகள் கூச்சல் போடுகிருர்கள். அக்கூச்சலை நாம் பயன்படுத்திக்கொண்டு அதிற்கலந்து போலீசாருக்கும், மதத்திற்கும் என்றென்றைக்கும் சம்மந்தமில்லாமல் இருக்கும்படி செய்துவிடவேண்டியதோடு, அப்பாதிரிகளிடம் நாம் சொல்லவேண்டியதென்னவென்ருல்,

மதம்வேறு, கல்விவேறு.

"ஓ பாதிரிமார்களே! "உங்களுடைய வார்த்தைகளில் உண்மை இருக்குமானுல் நீங்கள், மதஸ்தாபனம் வேறு, அரசாங்கம் வேறு என்பதாகப் பிரித்துவிடவேண்டும். பாடசாலைகளுக்கும், மதஸ்தாபனங்களுக்கும் கூட எவ்வித சம்மந்தமுமில்லாமல் பிரித்துவிடவேண்டும். மதம் என்பது மனிதனுக்கு தனிமையில் சொந்தமான விஷயமென்று தீர்மானிக்க முழுமனதுடனும் திடமாகவும் ஒப்புக்கொள்ளவேண்டும். நீங்கள் சொல்லளவில் சொல்லும் சுதந்திரத்தின் உண்மையான இந்தக்கொள்கைகளை, முடிவுகளை, நீங்கள் ஒப்புக்கொள்ளமறுத்தால், அவ்வாறு மறுப்பதின் பொருள், பழய கொடுமைகளுக்கு நீங்கள் இன்னும் அடிமைப்பட்டிருக்கிறீர்கள் என்பதும், அரசாங்கத்தின் உத்தியோகத்திற்கும், ஊதியத்திற்கும் நீங்கள் இன்னும் ஆசைப்படுகிறீர்கள் என்பதும், நீங்கள் தற்சமயம்

உபயோகப்படுத்தும் உண்மைச் சக்தியில் நம்பிக்கை வைக்க வில்லையென்பதும், நீங்கள் அரசாங்கத்தாரிடமிருந்து கைக்கூலி (லஞ்சம்) வாங்க இன்னும் ஆசை வைத்திருக்கிறீர்கள் என்பது மாகும். இந்த அருக்தம் மெய்யானால் சுயஅறிவு பெற்று விள ங்கும் ருஷியத்தொழிலாளர்கள் உங்களை ஒழிப்பதற்கு யுத்தம் தொடங்குவார்கள்" என்பதாகக்கண்டிப்பாய்த் தெரிவித்து விடவேண்டும்.

கட்சிக்கோள்கை.

நிற்க தொழிலாளர்களின் சமதர்ம (சோஷியலிஸ்ட்) கட் சியைப்பொருத்த வரையில் மதத்தை எவருடைய சொந்த விஷ யமாகவும் பாவிக்க முடியாது. நம்முடைய கட்சியானது தொழிலாளர் கட்சியேயாகும். அன்றியும், விடுதலைக்குப்போ ராடும் சுய அறிவு (சுயமரியாதைஉணர்ச்சி) பெற்ற முற்போக் காளர்களுடைய சங்கமுமாகும். இப்படிப்பட்ட சங்கத்தார் மத நம்பிக்கை என்னும் அறியாமைக்கும் அந்தகாரத்திற்கும் இடம்கொடுக்க முடியாது. அரசாங்கத்தையும் மதஸ்தாபனங் களையும் வேறுவேறாகப்பிரிக்க நாம் கோருவதின் காரணம், மக்களின் அறிவைப்பத்திரிகைகளாலும், பிரசங்கங்களாலும் பெருக்குவதின் மூலம் மதம் என்னும் இருளை அகற்றி விட லாம் என்னும் எண்ணமே யாகும். நமது ருஷிய சமதர்ம (சோஷியலிஸ்ட்)கட்சியின் நோக்கங்களின் முக்கியமானது மத த்தின் பெயரால் தொழிலாளர்கள் ஏமாற்றப்படுவதைத் தடுத் துப்போர்புரிவதாகும். ஆகையால் நம்மைப்பொறுத்தவரை யிற் மதத்தை எதிர்த்து நிற்கும் அறிவுப்போர் எவனுடைய வும் சொந்த விஷயம் என்று பாவிக்காமல் நம்முடைய கட்சி யையும், தொழிலாளர்கள் விடுதலையையும் பொருத்ததாகவே பாவிக்கவேண்டும்.

அப்படியானால் நம்முடைய வேலைத்திட்டத்தில் நம்மை நாஸ்திகர்கள் என்று ஏன் கூறிக்கொள்ளவில்லையென்ற கேள்வி பிறக்கலாம் கிறிஸ்துவர்களையும் கடவுளிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கும் ஆஸ்திகர்களையும் நம்முடைய கட்சியில் ஏன் சேர்த்துக்கொள்வதில்லையென்ற கேள்வியும் பிறக்கலாம். இந்தக்கேள்விகளுக்குக்கூறப்படும் பதிலில் இருந்துதான் ஜன நாயகத்தை (டிமாக்கரசிக் கொள்கையை) அபேட்சிக்கும் முதலாளிக்கூட்டத்திற்கும், தொழிலாளிக் கூட்டத்திற்கும் மத விஷயத்தில் ஏற்பட்டிருக்கும் முக்கியமான அபிப்பிராயபேதம் தெற்றென விளங்கும்.

வேலைத்திட்டம்.

நம்முடைய வேலைத்திட்டமானது விஞ்ஞானக்கொள்கையில் (சைன்ஸில்) பற்றுக்கொண்டது. அதாவது திடமான பிரகிருதிப்பொருள்களில் மாத்திரம் நம்பிக்கை கொண்டது. ஆகையினால் நம்முடைய வேலைத்திட்டத்தை விளக்கிக்கூறும் முறையில் சரித்திர பூர்வமாகவும், பொருளாதார மூலமாகவும் மதத்திற்கு ஏற்பட்டிருக்கும்வேலைகளை, அஸ்திவாரங்களை விளக்கிக் காட்டவேண்டியது அவசியமாகின்றது. இதிலிருந்து நம்முடைய வேலைத்திட்டத்தில் நாஸ்திகப்பிரசாரமும் அடங்கியிருக்கிறது என்பது வெளியாகும். மேலும் இதுவரையில் பிரபுத்துவத்தையும், எதேச்சாதிகாரத்தையும்மேற்கொண்ட அரசாங்கத்தால் தடைப்பட்டது போலல்லாமல்,இனி விஞ்ஞான (சைன்சின்) ஆராய்ச்சிகளைப்பற்றிய பிரசுரங்கள் வெளியிடுவது நமது கட்சியின் வேலைத்திட்டத்தில் ஒரு அம்சமாகஇருக்கவேண்டும். ஒரு காலத்தில் ஜர்மனியில் சமதர்மக்கட்சியாருக்கு எஞ்சல்ஸ் என்னும் அறிஞர் சொல்லிக்கொடுத்ததுபோல் பதி

ெட்டாவது நூற்றாண்டில் ஏற்பட்ட நிரீசுவர (நாஸ்திக) நூற்களை மறுபடியும் பிரசுரிக்க நேரும்.

தொழிலாளி முதலாளி போரும், மதமும்.

ஆனால் நாம் எந்த முகாந்திரத்தைக்கொண்டும்மதத்தைப் பற்றிய பிரச்சினையை தொழிலாளி-முதலாளிப்போரின் சம்மந்தத்தினின்று பிரித்துவிடக்கூடாது. மதத்தைப்பற்றிய ஆராய்ச்சியை தனிப்பட்ட அறிவிற்கு மாத்திரம் விட்டுவிடக் கூடாது. இம்மாதிரி பிரித்துவிடவேண்டுமென்பதே முதலாளி கூட்டத்தாரின் தந்திரமாகும். தொழிலாளிகளைத்தலையெடுக்கவொட்டாது அடக்கிக்கொடுமைப்படுத்திவரும் ஒரு சமூகவாழ்க்கையமைப்பிலிருந்து கொண்டு மதத்தினால் ஏற்படும் மடமைகளைச் சொல்லளவில் நீக்கிவிடலாமெனக் கருதுவது எண்ணத்தகாத காரியமாகும். மதத்தின் பெயரால் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் கொடுமைகளெல்லாம் பொருளாதாரத்துறையில் ஏற்பட்டிருக்கும் அநியாயத்தின் புரட்டுகளின் பலன் அல்லது எதிரொலி என்ற முக்கியமான உண்மையை மறைத்து வைப்பது முதலாளித்தன்மை கொண்ட மனப்பான்மையின் குறுகிய நோக்கமே யாகும். புத்தகங்களினாலும், பிரசங்கங்களினாலும், தொழிலாளிகள் உண்மையை உணரமாட்டார்கள். முதலாளித்தனத்தின் இருண்டவலிமையுடன் போர்தொடுக்குங்காலத்தில் ஏற்படும் பிரகாசத்தினால் (வெளிச்சத்தினால்) மட்டுமே உண்மைபுலப்படும். தங்களுடைய விடுதலையின்மூலம் இவ்வுலக அமைப்பைமாற்றி "இந்திர" (சுதந்திர போக போக்கியமுள்ள) லோகமாக ஆக்க முயற்சிக்கும் தொழிலாளர்களுக்குள் ஏற்படும் ஒற்றுமையானது இறந்த பிறகும் "தேவலோகத்தை"ப்பற்றித் தொழிலாளர்கள் நினைக்கும் அபிப்பிராய ஒற்றுமையைவிட மேலானது.

நாம் ஏன் நாஸ்திகர் என்று சொல்லிக்கொள்ளவில்லை?

ஆகையால் தான் நம்முடைய வேலைத் திட்டத்தில் நாம் நம்மை நாஸ்திகர்களென்று வெளிப்படையாய் சொல்லிக்கொள்ளவில்லை,—அப்படிச் சொல்லிக்கொள்ளவுங்கூடாது. ஆகையினால் தான் பழைய மூடக்கொள்கைகளில் பற்றுவைத்திருக்கும் தொழிலாளிகளை நம்முடைய கட்சியில் சேரவேண்டாம் என்று நாம் தடை ஏற்படுத்தவில்லை. விஞ்ஞான ஆராய்ச்சியின் மூலம் ஏற்பட்ட அறிவையே நாம் போற்றிவருவோம். கிறிஸ்துவர்களின் முரணான வார்த்தைகளை எதிர்த்துநிற்போம். ஆனால் மதத்தைபபற்றிய பிரச்னையை எதற்கும் முன்னணியில் இழுத்துப் போட்டுக்கொள்ள வேண்டியதில்லை. பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறையிலும் புரட்சியுண்டுபண்ணிவரும் சக்திகளைப்பிரித்த வினைக்கி முக்கியமில்லாததும், அரசியல் துறையில் இடம் பெறாததும் பொருளாதார விருத்தியின்மூலம் தானாக மறைந்துவருவதுமான மதப்பிரச்சினைகளுக்குப் பெருமை கொடுக்கவேண்டியதில்லை.

பிற்போக்காளர்களான முதலாளி வர்க்கத்தினர் இங்கும் மற்ற விடங்களிலும் மத வேறுபாடுகளைப்பெரிதாக்கி, ருஷிய மக்கள் ஈடுபட்டிருக்கும் முக்கியமான பொருளாதார அரசியல் புரட்சி இயக்கத்திலிருந்து பொதுஜனங்களின் கவனத்தைத் திருப்பி, மாற்றி விடுகின்றார்கள். தொழிலாளர்களின் ஒன்றுபட்ட சக்தியைப்பிரித்துவிடும் இச்சூழ்ச்சியானது இன்று புரட்சி இயக்கத்தில் சேர்ந்தவர்களைக் கொலைசெய்ய ஏவுகிறது. நாளை இன்னமும் மோசமான வேலைகளில்இறங்கச்செய்யலாம். இவ்விதமான சூழ்ச்சிகளை எதிர்ப்பதற்குநாம்அமைதியாக,சாவதானமாகத்தொழிலாளர்களின் ஒற்றுமையை விருத்திசெய்ய முயற்சித்து விஞ்ஞான (சயின்ஸ்) முடிவின் மூலமாக அறிவைப்பெருக்கியும் அனுவசியமான வித்தியாசங்களை, நமக்குள் ஏற்

படுத்திக்கொள்ளாமலும் இருக்கவேண்டும். புரட்சியைநடத்தும் தொழிலாளர்கள் மதமென்பது அரசாங்கம் சம்மந்தப்பட்டவரையில் அவரவர்கள் சொந்த விஷயமாக ஆகிவிடுவதற்கு ஏற்பாடு செய்வார்கள். பிறகு பழைய துருப்பிடித்த பழக்கங்களும், கொள்கைகளும் தானுக மறைந்து, மதத்தில் தொழிலாளர்களின் அடிமைத்தனத்தைப் போக்குவதற்குப் பெரும் போர் தொடங்கி, அந்தப் பொருளாதார அடிமைத்தனத்திற்காக ஏற்பட்ட மதமென்ற பித்தலாட்டமானது மனித சமூகத்தைப் பாதிக்காமல் அகற்றப்பட முயலுவார்கள்.

——:0:——

குறிப்பு:—சோஷியலிசம்=சமதர்மம். சோஷியலிஸ்ட் டெமாக்ரசி=சமதர்ம ஜனநாயகம். சையன்ஸ்=விஞ்ஞானம். மெட்டீரியலிசம்=பஞ்சேந்திரியங்களுக்கு எட்டிய பொருள்களே உண்மை. (உலகாயிதம்)

2-ம் அத்தியாயம்.

மதத்தைப்பற்றித் தொழிலாளர் கட்சியின் அபிப்பிராயம்.

—:O:—

(The attitude of the workers towards Religion)

சமதர்ம ஜனநாயகக் கட்சியின் கொள்கை.

சமதர்ம (சோஷியலிஸ்ட்) ஜனநாயகக்கட்சியானது தனது கொள்கைகளை சமதர்மம் (சோஷியலிஸம்) என்னும் விஞ்ஞான முடிவிலிருந்து (சயின்சினிடமிருந்து) பெருகிறது. அதாவது மார்க்ஸின் போதனைகளிடமிருந்து பெருகிறது. மார்க்ஸ், ஏஞ்சல்ஸ் ஆகிய இருவரும் தங்களுடைய கொள்கை டைலேட்டிக் மெட்டீரியலிசம் (Dialeatic Materia-lism) என்பதான—பிரகிருதிப்பொருள்களே உண்மையென்ற தத்துவத்தை அடிப்படையாகக்கொண்டது என்று அடிக்கடி சொல்லிவந்திருக்கிறார்கள். இந்த தத்துவமானது 18-வது நூற்றாண்டில் பிரஞ்சு தேசத்தில் ஏற்பட்ட பிரகிருதவாத இயக்கத்தையும், 19-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜர்மன் தேசத்திலுள்ள பூர்பாக் (Fewrback) என்றவருடைய கொள்கையும் சரித்திர பூர்வமாகத்தழுவியுள்ளது. இக்கொள்கையின் திட்டமானது நாஸ்திகத்தையும், மதத்தை எதிர்க்கவும் போதிப்பதாகும். ஏஞ்சல்ஸ் என்பார் எழுதிய ஆண்டி டூரிங் (Anti Duhring) என்ற நூலை அச்சிடும் முன்னர் மார்க்ஸ் படித்துப் பார்த்தார். அந்நூலில் டூரிங் என்பார் தன்னை ஓர் பிரகிருதிவாதியென்றும், நாஸ்திகர் என்றும் சொல்லிக்கொண்ட போதிலும், மதத்திற்கும், மதக்கொள்கைகளுக்கும் இடங்கொடுத்

திருப்பதற்காக அவரைக் கண்டிக்கப்பட்டிருக்கிறது. லூடிங் பூர்பாக் (Luding Fewrback) என்பவவரைப்பற்றி ஏஞ்சல் எழுதிய கட்டுரையில் பூர்பாக் மதத்துடன் சண்டை யிடுவதின் நோக்கம், மதத்தை ஒழிப்பதற்கல்ல வென்றும் மதத்தைத் தூய்மைப்படுத்துவதற்கே யென்றும் கூறியிருக்கிறார். "மதம் மக்களுக்கு அபினி (போதை) கொடுப்பது" என்பது மார்க்ஸின் கூற்று. இக்கொள்கையே மார்க்ஸ் சித்தாந்தக்காரருடைய கொள்கைக்கு அடிப்படையாகும். தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் பல்வேறு மதங்களும், மதஸ்தாபனங்களும், மதச் சங்கங்களும் முதலாளி வர்க்கத்தின் ஆட்சிக்கு ஆயுதங்கள் என்பதும், அவைகளின் நோக்கம் பொதுமக்களை மயக்கத்தில் ஆழ்த்தி அவர்களை ஆளும் முதலாளி கூட்டத்திற்கு உதவி செய்வதென்பதும் மார்க்ஸினுடைய கொள்கையாகும்.

எஞ்சல்சின் கண்டனை.

ஆனால் அதே சமயத்தில் சோஷியலிஸ்ட் ஜனநாயகக் கட்சியில் தாங்கள் அமிதவாதிகளெனக்கூறிக்கொண்டு தொழிலாளர் கட்சியின் வேலைத்திட்டத்தில் நாஸ்திகப்பிரசாரத்தைப் புகுத்த முயன்று மதத்தோடு யுத்தம் புரிவோம் என்று பறைசாற்றுவோரை எஞ்சல்ஸ் அடிக்கடி கண்டித்து வந்தார்.

1874 ம் வருஷத்தில் பிளாங்கிஸ்ட் Blanguist என்ற கம்யூன் Commune கூட்டத்தைச்சேர்ந்த அக்காலம் லண்டனில் குடியேறியிருந்தவர்கள் விடுத்த அறிக்கையில் மதத்துடன் யுத்தம் தொடங்குவோம் என்று பறைசாற்றியிருந்ததை ஏஞ்சல்ஸ் முட்டாள்தனமெனக்கண்டித்து, அம்மாதிரி யுத்தம் தொடங்குவதின் மூலம் பொது மக்கள் நாளடைவில் மறந்து வரும் மதத்தில் புதிதாய் ருசி காண்பித்து, இறக்கும் தருவாயில் இருக்கும் மதத்திற்கு புத்துயிர் அளிப்பதாகும் என்று விளக்கிக்காண்பித்தார். தொழிலாளர் தங்கள் கூட்ட மக்

கள் சகலரையும் ஒருங்கேதிரட்டி தங்களுடைய விடுதலைக்கு நடத்தும் புரட்சிப்போர் முனையின் நடவடிக்கையில் மாத்திரமே கொடுமைப்படுத்தி தாழ்த்திவைக்கப்பட்ட மக்கள் மதம் என்னும் அடிமை விலங்கை அறுத்தெரிய சாத்தியப்படுமே, ஒழிய சாதாரண காலத்தில் தொழிலாளர் கட்சியின் அரசியல் நோக்கங்களில் ஒன்றாக மதத்துடன் யுத்தம் தொடங்குவது உருப்பட முடியாத வீண் டம்பம் என்பதை உணரவில்லை என்று பிளாங்கு விட்ஸ் Commune கூட்டத்தாரை ஏஞ்சல்ஸ் கண்டித்திருக்கிறார்.

ரிங்குக்கு மறுப்பு.

1877ம் வருஷத்தில் ஆண்டிடூரிங் Anti Duhring என்ற புத்தகத்தில் மதத்திற்கும், பாரமார்த்திக கொள்கைக்கும் இடம்கொடுத்ததற்காக டூரிங்கை கண்டித்ததோடு தன்னைப் புரட்சிக்காரனாக பாசாங்கு செய்துகொண்டு சோஷியலிசம் வெற்றி பெற்ற காலத்தில் சமூகத்தில் மதத்தை சட்ட விரோதமென ஒரே அடியாய் ஒழித்து விடுவோமெனக் கூறியதையும் அழுத்தமாய்க் கண்டித்தார். மேலும் மதத்துடன் யுத்தம் தொடங்குவது பிஸ்மார்க் செய்த தவறை மிகைப்படுத்திச் செய்வதாகும் என்று ஏஞ்சல்ஸ் கூறினார்.

1870ம் வருஷத்தில் ஜர்மனியில் ஏற்பட்டிருந்த கத்தோலிக்மதக்கட்சிக்கு விரோதமாய் பிஸ்மார்க்கு யுத்தம் தொடங்கி அறிவு விர்த்திசங்கங்கள் Culture Camps ஏற்படுத்தி கத்தோலிக் பாதிரிகளை அறைகூவி அழைத்தார். இந்த யுத்தத்தின் பயனாப் கத்தோலிக் பாதிரிகளின் ஆட்சி வலிமையுற்று மக்களின் அறிவுவளர்ச்சி குன்றியது. ஏனென்றால் அந்த யுத்தத்தின் உண்மைப்பயன் அரசியல் கொடுமைகள் ஜனங்களுடைய கண்களுக்குத் தென்படாமல்மறைவுற்று போலிமத வித்தியாசங்கள் மிகைப்படுத்திக் காணப்பட்டன. ஆகையி

ஞல் தொழிலாளர்களுடையவும், பொது ஜனங்களுடையவும் கவனிப்பெல்லாம் தொழிலாளர் விடுதலை யுத்தத்தினின்றும் புரட்சிப்போரினின்றும் இழுக்கப்பட்டு முதலாளிகள் தந்திரமாய் பாதிரிகள் பேரில் தொடங்கிய போலியுத்தத்தில் செலுத்தப்பட்டு வியர்த்தமுமாயின.

அமிதவாதப் புரட்சிக்காரனென்று சொல்லிக்கொண்ட டூரிங், ஏற்கனவே பிஸ்மார்க்கு செய்த தவறுதலை திருப்பிச்செய்வதாக எஞ்சல்ஸ் குற்றங்கூறினர். தொழிலாளர் கட்சி தன்னுடைய முக்கிய வேலையாகிய தொழிலாளர் கூட்டத்தைத் திரட்டி விஷயங்களைக் கொஞ்சம் கொஞ்சமாய் எடுத்துச்சொல்லிப்படிப்பிப்பதன் மூலம் மதம் தானுக மறைந்து போகவேண்டுமே தவிர வீணுக மதத்தின் பேரில் அரசியல் போர் தொடங்கக்கூடாதென எஞ்சல்ஸ் கூறியிருக்கிருர்.

இந்தக் கொள்கையை ஜர்மனி தேசத்து சோஷியலிஸ்ட் ஜனநாயகக்கட்சி சரியானபடி உணர்ந்து கத்தோலிக்க பாதிரிகளுக்கு சுதந்திரம் கொடுக்கவேண்டும் என்றும், அவர்கள் ஜர்மனி தேசத்திற்கு வர அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் எந்த மதத்தையும் போலீஸ் அதிகாரத்தின் மூலம் தடைப்படுத்தக்கூடாதென்றும் வாதாடினுர்கள். இந்த வாதம் "மதம் அவரவருக்குச் சொந்த விஷயம்" என்ற 1891ம் வருஷத்து இர்பூர்ட் Erfurt திட்டத்து பெயர் பெற்ற சோஷியலிஸ்ட் ஜனநாயகக்கட்சியின் அரசியல் திட்டத்தைப் பின் தாங்கி நின்றது.

மார்க்ஸ் கொள்கைக்கு புது அபாயம்.

இந்தத் திட்டங்கள் எல்லாம் இக்காலத்தில் சாதாரண அலுவல்களில் ஒன்ருய்க்கருதப்படுகின்றன. ஆகையால் இப்போது மார்க்ஸ் கொள்கைகளுக்குப் புதுமாதிரியான அபாய

மேற்பட்டிருக்கிறது. அதாவது சம்யோசிதவாதமாகும். (Opportunism) இர்பூர்ட் திட்டத்தில் கண்ட விஷயத்தை விவரித்துச் சொல்லும்போது சோஷியலிஸ்ட் ஜனநாயகக்கட்சியைச் சேர்ந்த நாமும் நம்முடைய கட்சியும் மதமென்பது அவரவர்கள் சொந்த விஷயம் என்று பாவிக்கவேண்டுமென்பதாய் திரித்துக்கூறப்படுகிறது. இந்த மனப்பான்மையைப் பற்றி 1890ம் வருஷத்தில் எஞ்சல்ஸ் கடினமான--அவதூரான வார்த்தைகள் எதுவுமில்லாமல் சாவதானமாய் எதிர்த்து ஒரு அறிக்கை வெளியிட்டார். அவ்வறிக்கையில் "கவர்மெண்ட் சம்மந்தப்பட்ட வரையில் மதம் அவரவர்கள் சொந்த விஷயமாகக் கருதப்படவேண்டுமேயன்றி சோஷியலிஸ்ட் ஜனநாயகக்கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்கள் சம்மந்தப்பட்ட விடத்திலாவது, மார்க்ஸ் கொள்கை சம்மந்தப்பட்ட விடத்திலாவது மதம் எவருடைய சொந்த விஷயமாகவும் விட்டுவிடமுடியாது" என்று எஞ்சல்ஸ் அழுத்தமாகக்கூறினார்.

"முறண்பாடு" காண்பதின காரணம்.

மார்க்ஸ், எஞ்சல்ஸ் இருவரும் மதம் என்ற விஷயத்தைப்பற்றி ஏற்படுத்திக்கொண்ட திட்டத்தின் சரித்திரம் மேற்கண்டவாறாகும். மார்க்ஸ் கொள்கைகளின் அந்தரங்கத்தை ஆராய்ந்து உணராமல் நுனிப்புல் மேய்ந்து வெளித்தோற்றத்தை மாத்திரம் கண்டவர்களுக்கு மேற்கண்ட திட்டத்தின் சரித்திரத்தில் அநேக முறண்பாடுகள் தோன்றலாம். மற்றும் அது ஒரு நிலையில் இல்லாமல் முன்னுக்குப்பின் முறண்பாடுகள் உள்ளதாகத்தோன்றலாம். உண்மை நாஸ்திகக் கொள்கை மதங்களுடன் சலுகை காட்டும் திட்டத்தில் மறைந்து கிடப்பதாகும். கடவுளை ஒழிப்பதற்கு ஏற்பட்ட புரட்சி

யுடன் மதக்குருக்களிடம் நல்ல பிள்ளையாயிருந்து அவர்களை வெறுட்டாமல் இருக்க ஆசைப்படும் கோழைத்தனம் கலந்திருப்பதாகவும் இன்னும் பலவாராகவும் கட்டுக்கடங்காத வாய்ப்பறை சாற்றுகிறவர்கள் மார்க்ஸ் கொள்கையைப்பற்றிக் குறை கூறிஇருக்கிறார்கள்.

ஆனால் மார்க்ஸ் கொள்கைகள் உண்மையை அறியப் பிரயத்தனப்பட்ட எவருக்கும் இந்தத் தத்துவத்தை யோசித்து அறியவும், சர்வதேச சோஷியலிஸ்ட் ஜனநாயகக்கட்சியின் அனுபவத்தை ஆராயவும், முயற்சி எடுத்துக்கொண்ட எவருக்கும் மதத்தைப்பற்றிய நமது திட்டம் முன்னுக்குப்பின் விரோதமில்லாமல் மார்க்ஸ் ஏஞ்சல்ஸ் இருவரும் யோசனை செய்து ஏற்படுத்தியிருக்கும் திட்டமே எனப்புலப்படும்.

அறிவில்லாமல் மேற்போக்காய் நம் திட்டத்தில் சலன புத்தி தோன்றுகிறதென்று குறைகூறப்படுவதெல்லாம் ஆராய்ந்து பார்த்தால் Dialetic Materialism டைலேட்டிக் மெட்டீரியலிசம் என்ற தர்க்கரீதியான பிரகிருதவாதம் நமது தத்துவத்தில் இருந்து கிளம்பும் உண்மைகள் என்று வெளிப்படும்.

மார்க்ஸ் திட்டம் மிதவாதமா?

மார்க்ஸ் திட்டத்தில் மத விஷயத்தில் மிதவாதக்கொள்கை அனுசரிப்பதாகக் காணப்படுவதற்குக் காரணம் நாம் ஏதோ தந்திரமாக நடந்து கொள்வதாக நினைப்பது தவறு. மதக்குருக்கள்மாரை வெறுட்டி விடாமல் அவர்களை நம்முடன் சேர்த்துக்கொள்ள சூட்சிசெய்வதாக நினைப்பதும் தவறு. இவ்விஷயத்தில் மார்க்ஸினுடைய அரசியல் கொள்கை அவருடைய முழு சித்தாந்தத்தோடு கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. மார்க்ஸினுடைய தத்துவம் மெட்டீரியலிசம், அதாவது பஞ்

சேந்திரியங்களுக்கு எட்டிய பிரகிருதிப்பொருள்களே உண்மையென சாதிக்கும் தத்துவமாகும். ஆகையால் 18-வது நூற்றாண்டில் தோன்றிய Encyclopediasts என்னசக்ளே பீடியஸ்ட்ஸ், Feurback பூர்பாக் இவர்களுடைய சித்தாந்தத்தைவிட மார்க்சினுடைய சித்தாந்தம் மேலானது. எப்படியெனில் அதுசரித்திர ஆராய்ச்சியிலும் சமூக அமைப்பு ஆராய்ச்சியிலும் கலந்திருக்கிறது. "நாம் மதத்தை எதிர்க்கவேண்டும்" என்பதே பிரகிருதிவாதத்தின் முதல் படியாகும். ஆகையால் இதுவே மார்க்ஸ் தத்துவத்தினுடைய முதற்படியாகும். ஆனல் மார்க்ஸ் தத்துவம் மற்ற பிரகிருதிவாதிகளைப்போல முதல் படியிலேயே நின்று விடுவதில்லை. மேல்படிகளுக்கும் அது ஏறிச்சென்று கொண்டிருக்கும். அது சொல்லுவதாவது:— நாம் உண்மையில் மதத்தை எதிர்க்கவேண்டுமாளுல் நம்முடைய பிரகிருதி வாதமுறையில் இருந்து மக்களிடத்தில் மதம் பரவியிருப்பதற்கும், மதத்தினிடம் மக்கள் நம்பிக்கை வைத்திருப்பதற்கும் காரணம் என்னவென்பதைக் கண்டுபிடித்து வெளியிடவேண்டும்.

மதயுத்தம் எப்படியிருக்க வேண்டும்?

மதத்தோடு தொடங்கும் யுத்தம் வெரும் வாக்குவாதமாகவும், பிரசாரமேடையுத்தமாகவும் ஆகிவிடும்படி விட்டுவிடக்கூடாது. இந்த யுத்தமானது செயலில் நடைபெறும் தொழிலாளர் இயக்கத்தோடு இணைக்கப்பட்டு மதத்திற்கு உயிர் கொடுப்பதாய்—மதத்திற்கு வேர்களாய் இருக்கும் சமூக அமைப்புகளை வெட்டி எறிவதே இந்த யுத்தத்தின் நோக்கங்களாக இருக்கவேண்டும். பட்டண வாசிகளான தொழிலாளர்களில் அறிவற்ற பிற்போக்காளர்களும், நடுத்தர வேலைக்

காரர்களும் தோட்டத்தொழிலாளர்களும் பெருவாரியாக என் மதத்தில் கட்டுப்பட்டிருக்கிறார்கள்? என்பதற்குக் காரணம் பொது மக்களின் அறியாமையே என்று முதலாளி கூட்டத்தில் முற்போக்கானவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களும், சீர்திருத்தவாதிகளும், முதலாளிகளில் பிரகிருதவாதிகளும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆகையால் "மதத்தை ஒழிக்கவேண்டும்" "நாஸ்திகம் நிலைக்கவேண்டும்" "நாஸ்திகப் பிரசாரமே நமது முக்கிய வேலை" என்றெல்லாம் அவர்கள் பறைசாற்றுகிறார்கள். இதற்கு மார்க்ஸ் கொள்கையைப் பின்பற்றுகின்றவர்களின் பதிலாவது:— "நீங்கள் சொல்வது உண்மையல்ல. இந்தப்படி சொல்வதும் நினைப்பதும் மேற்போக்கான முதலாளி நிலையின் குறைபாட்டையும் குறுகிய நோக்கத்தையுமே காட்டுகிறது. உங்கள் குறுகிய நோக்கம் மதத்தினுடைய பிரகிருத காரணங்களைக்கண்டுபிடிக்க உங்களை விடாமல் பாரமார்த்திக வாதிகளின் பாதைக்கு உங்களைக் கொண்டுபோய் விட்டது" என்பதேயாகும்.

மதத்தின் அடிப்படை.

தற்காலம் முதலாளிகளின் ஆதிக்கத்திற்கு அடங்கிய தேசங்களில் மதத்திற்கு அடிப்படை சமூக அமைப்பாகவே இருந்து வருகிறது. தற்காலத்திய மதவேர்கள் தொழிலாளர்களை அழுத்திவைக்கும் சமூகக்கொடுமையில் ஊன்றி நிற்கின்றன. மகா யுத்தங்கள், பூகம்பங்கள் முதலியவற்றைவிட தொழிலாளிகளை ஆயிரமடங்கு அதிகமாக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணி நேரமும் வாட்டி வதக்கிவரும் முதலாளித்தனத்தில் குருட்டு ஆட்சியில் தொழிலாளர்களுக்கு ஏற்படும் அதைரியத்திலேயே மதத்தின் வேர்கள் வலிமை

பெருகின்றன. "பயத்திலிருந்து தெய்வங்கள் உதித்தன" என்பது பழமொழி. முதல் (Capital) என்னும் குருட்டு சக்தியைக் கண்டு தொழிலாளர்களும் சில்லரை வியாபாரிகளும் பயப்படுகிறார்கள். ஏனென்றால் முதல் என்பது அவரவர்கள் கண்களுக்கு ஓர் நிலையுள்ளதாகப் புலப்படவில்லை. அதனுடைய மாறுதல்களைக் கணக்கிட்டு எதிர்பார்க்க முடியவில்லை. "திடீரென்றும்" "எதிர்பாராமலும்" "தற்செயலாயும்" ஏற்படும் முதலினுடைய மாறுபாடுகளால் மக்களுக்கு ஆபத்தும், அறிவும் ஏற்பட்டு, பிச்சை எடுக்கவும், வறுமையுறவும், மானத்தை விற்கவும் (விபசாரம்) பசியால் இறக்கவும் நேரிடுகின்றது. இந்த நிலையே மதத்திற்கு ஆணிவேர் என்பதை நமது பிரகிருதிவாதிகள் மனதில் இருத்தாவிட்டால் பிரகிருதவாதம் என்னும் அறிவிலிப்பள்ளிக்கூடத்தைத் தாண்டிப்போகவே அவர்களுக்கு சக்திஇருக்காது.

வெறும் பிரசுரங்கள் மாத்திரம் போதாது.

அறிவைப் புகட்டும் பிரசுரங்கள் எத்தனை படித்தபோதிலும் பொது ஜனங்கள் மதத்தின் ஆட்சியிலிருந்து விடுபடமாட்டார்கள். முதலாளித்தனத்தின் ஆட்சியில் அடிபட்டு, நசுக்கப்பட்டு முதலாளித்தனத்தின் குருட்டுச்சக்தியால் அழிவுறும் மக்கள் மதத்தை உண்டாக்கி, உருவகப்படுத்தி, ஒற்றுமைப்படுத்தி வெளியிடும் சமூக அமைப்புகளை தாங்களாகவே எதிர்த்து யுத்தம் செய்ய முன்வந்தாலொழிய மதத்தின் ஆதிக்கம் ஒழியாது. முதலாளிகளின் ஆட்சி எந்தெந்த ரூபமாக அமுலில் இருக்கிறதோ அந்தந்த ரூபங்களை எல்லாம் எதிர்த்து அழிக்க தொழிலாளர்கள் முன்வரவேண்டும்.

இதற்கு அர்த்தம் மதத்திற்கு விரோதமாக அறிவை வளர்க்கும் புஸ்தகங்களை வெளியிடுவது கெடுதியென்றோ—அல்

வசியமென்றே கருதக்கூடாது. இதற்கு அர்த்தம் என்ன வென்றால் சோஷியலிஸ்ட் ஜனநாயகக்கட்சியின் முக்கிய-முதலாவதான வேலை கொடுமைப்படுத்தப்பட்ட பொதுமக்களைத் திரட்டிக் கொடுமைப்படுத்தும் கூட்டத்தாரை எதிர்ப்பது தான் என்பதும், நாஸ்திகப்பிரசாரமானது அடுத்தபடியான இரண்டாந்தர நோக்கமே ஒழிய முதன்மையானது அல்ல என்பதேயாகும்.

டையலேட்டிகல் மெட்டீரியலிசம் Dialetical Materialism தர்க்க ரீதியான பிரகிருதி வாதம் என்னும் மார்க்ஸ், ஏஞ்சல்ஸ் தத்துவத்தை ஆராய்ச்சி செய்து அதனுடைய அஸ்திவாரம் என்ன என்பதைக் கண்டுபிடிக்க முடியாதவர்கள் மேற்கண்ட உண்மையை உணரமுடியாது. அவர்கள் மக்களின் மனதில் எற்பட்ட அழுக்காறுகளை நீக்கி உண்மையை உணர்த்தும் பிரசாரத்தை இரண்டாம் பட்சமானது என்று அவமதிப்பதா என்பதாக ஆச்சரியப்படுவார்கள்.

மதப்போரின் கருத்து.

மதத்திற்கு விரோதமாகப் போர்தொடுப்பது ஆயிரக்கணக்கான வருஷங்களாக அறிவு வளர்ச்சிக்கும் வாழ்க்கை முற்போக்குக்கும் ஏற்பட்டிருக்கும் விரோதியை எதிர்ப்பதல்லவா? இந்த முக்கியமான விஷயத்தை விட்டுவிட்டு சமீப காலத்திய அனுபவத்தில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார அரசியல் எதிர்ப்புகளை முதன்மையாகக் கருதுவதா என்று கேட்பார்கள்.

தற்காலம் மார்க்சினுடைய கொள்கைக்கு ஏற்பட்டிருக்கும் இம்மாதிரியான ஆக்ஷேபணைகள் மார்க்சினுடைய கொள்கைகளைச்சரிவர உணராததால் ஏற்பட்டவைகளேயாகும். இந்த ஆக்ஷேபணைகளைக் கிளப்புகிறவர்கள் கண்களுக்குத் தோ

ன்றும் முறண்பாடுகளை எல்லாம் மனித வாழ்க்கையில் ஏற்படும் முறண்பாடுகளேயாகும். இவை தத்துவ முறண்பாடுகளே ஒழிய வெறும் சொல்லளவில் மாத்திரம் ஏற்பட்ட முறண்பாடுகளல்ல. எவராலும் புதிதாக உற்பத்தி செய்யப்பட்டவைகளுமல்ல. நாஸ்திகப் பிரசாரம் செய்யும் கொள்கையைப் பற்றிய வேலைக்கும் அதாவது தொழிலாளர் கூட்டத்தில் சில பகுதியில் ஏற்பட்டிருக்கும் மதப்பற்றுதல்களை உடைக்கும் வேலைக்கும், அப்படிப்பட்ட வேலையின் பயனாக ஏற்படும் தொழிலாளர் இயக்கப்போராட்ட அபிவிர்த்திக்கும் ஏதோ பெரிய வித்தியாசமிருப்பதாக வரையறுப்பது தர்க்கரீதிக்குஅடங்காத வாதமாகும். அதாவது அடிக்கடி மாற்றப்பட்டும், சமயோசிதம் போல் உண்டாக்கப்பட்டுமுள்ள ஒரு எல்லையை நிரந்தரமானதாக ஆக்குவதாகும். வாஸ்தவத்தில் பிரிக்க முடியாமல் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டிருக்கும் அம்சங்களை பலாத்காரத்தினால் கிழித்துத்தனிமைப் படுத்துவதாகும்,

வேலை நிறுத்தமும், நாஸ்திகப்பிரசாரமும்.

உதாரணமாக எதாவது ஒரு நாட்டில் ஏற்பட்டிருக்கும் ஒரு தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களை இரண்டு பாகமாகப் பிரிப்பதாக வைத்துக்கொள்ளுவோம். ஒரு பாகத்திலுள்ளவர் தமது நிலையைப் பூரணமாக உணர்ந்த சோஷியலிஸ்ட் ஜனநாயகக்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். இவர்கள் நாஸ்திகர்களாகவே இருப்பாகள் என்பது வெளிப்படை. மற்ற இரண்டாவது பகுதியிலுள்ளவர்கள் பிற்போக்குடையவர்களாகவும், நாட்டுப்புறங்களிலும் குடியானவர்களிடமும் இன்னும் சம்பந்தம் வைத்திருப்பவர்களாகவும், இன்னும் கடவுளிடத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர்களாகவும், கோவிலுக்குப் போகிறவர்களாகவும், குருக்கள்மார்களுடைய ஆதிக்கத்திற்கு அடங்கி நடப்பவர்களாகவும்

இருப்பதாக வைத்துக்கொள்ளுவோம், இந்த இரண்டு பகுதியாரும் சேர்ந்து கிறிஸ்தவ தொழிலாளர் சங்கம் ஏற்படுத்திக்கொண்டதாக வைத்துக்கொள்ளுவோம். இந்நாட்டில் பொருளாதாரப் போராட்டம் ஒன்று ஏற்பட்டு வேலை நிறுத்தம் தொடங்கப்பட்டதாகவும் வைத்துக்கொள்ளுவோம். இப்படிப்பட்ட தருணத்தில் மார்க்சினுடைய கொள்கையைப் பின்பற்றுகிற ஒருவன் வேலை நிறுத்தம் ஜயமடையவேண்டும் என்பதையே மற்றெல்லாவற்றையும்விட முக்கியமானதாகக்கருதி, இந்த யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களை நாஸ்திகர்கள் என்றும், கிறிஸ்தவர்கள் என்றும் பிரித்துக் கூறுவதை—எதிர்த்துக்கூறுவதை எதிர்த்து அம்மாதிரியான பிளவுகள் உண்டாக்கப்படுவதையும் கண்டித்து, போராட்டத்தில் ஒற்றுமையாய் முனைந்து நிற்கவேண்டியது அவசியமாகும். இம்மாதிரியான சமயங்களில் நாஸ்திகப்பிரசாரம் செய்வது அனவசியமும் கெடுதிவிளைவிப்பதுமாகும். இப்படிச் சொல்லுவது பிற்போக்கான பகுதியைப் பயமுறுத்தி நம்மை விட்டு வெறுட்டாமல் இருக்கவேண்டும் என்ற குறுகிய நோக்கத்தாலல்ல. தேர்தல்களில் நம். கட்சியாருக்கு ஓட்டுக்கிடைக்காமல் போய்விடும் என்ற பயத்தாலும் அல்ல. ஆனல் தொழிலாளர் இயக்கத்தினுடைய உண்மை முன்னேற்றத்தைக் கருதியும் தற்காலம் முதலாளிகளின் ஆட்சிக்கு அடங்கிய சமூகத்தில் கிறிஸ்தவத் தொழிலாளர்களை சோஷியலிஸ்ட்டு ஜனநாயகக்கட்சிக்கும், நாஸ்திக நம்பிக்கைக்கும், வெறும் நாஸ்திகப் பிரசாரம் செய்வதால் மாற்றுவதைவிட நூறு மடங்கு அதிக வேகமாக மாற்றுவதற்கே யாகும். இம்மாதிரியான சந்தர்ப்பத்திலும் நிலைமையிலும் நாஸ்திகப்பிரசாரம் செய்வது என்பது, கோவிலுக்கும் குருக்களுக்கும் உடந்தையாயிருந்து

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளிகளிடத்தில் மதத்தைப்பற்றிய வித்தியாசங்கள் தோன்றவேண்டும் என்று நம் எதிரிகள் ஆசைப்படுவதை நாம் நிறைவேற்றிக்கொடுப்பதேயாகும்.

மார்க்ஸை பின்பற்றுகிறவர்கள்.

எதேச்சை வாதிகள் எது எப்படியிருந்தாலும் கடவுளோடு யுத்தம் செய்தாகவேண்டும் என்று சொல்லுவது பிராமணர்களுக்கும், முதலாளிகளுக்கும், உடந்தையாக இருப்பதாகும். அநேக விஷயங்களில் எதேச்சை வாதிகளுடைய செயல்கள் முதலாளிகள் கூட்டத்திற்கு உடந்தையாய் இருப்பதை நாம் கண்டிக்கிறோம். மார்க்ஸ் கொள்கையை பின்பற்றுகிறவர்கள் பிரகிருதவாதியாய் இருக்கவேண்டும். ஆனால் அவர்களுடைய பிரகிருதவாதம் தர்க்கரீதியாய் இருக்க வேண்டும். அவர்கள் மதத்தோடு போர்புரியும்போது காரியத்தில், அனுஷ்டானத்தில் இல்லாமல் வெறும் மனச்சண்டையாகவோ, சாலநேசவர்த்தமானத்திற்கு ஏற்றதாயும், இடம்பொருள் ஏவலுக்கு ஒத்ததாயும் இல்லாமல் ஆகாயத்தில் நடைபெறும் யுத்தமாகவோ இருக்கக்கூடாது. அன்றியும் அப்போரானது செய்கையில், அனுஷ்டானத்தில் நடைபெறுவதாகவும் நமது கண்முன் வளர்ந்து வரும் முதலாளி, தொழிலாழி போருக்குத்தலைகொடுப்பதாகவும், அந்தப்போரின் மூலம் பொது மக்களுக்கு தானாகவே அறிவுவளர்ச்சியும், உணர்ச்சியும் ஏற்படக்கூடியதாகவும் இருக்கவேண்டும்.

மார்க்ஸ் கோள்கையில் ஈடுபடுகிறவர்கள்.

மார்க்ஸ் கொள்கையில் ஈடுபடுகின்றவர்கள் ஒவ்வொரு நிலையிலும் அவ்வப்போதைய அந்தரங்க உணர்ச்சி எப்படிப்பட்டது, அதன் உண்மை என்ன என்பதைக் கண்டுபிடி-

OFFICE OF THE ... BOOKS
21 JUN 1933
MADRAS

க்க சக்தி உள்ளவர்களாகவே இருக்கவேண்டும். எதேச்சை வாதத்திற்கும் சமயோசித வாதத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன என்பதைக் கண்டுபிடிக்க சக்தி உள்ளவனாக இருக்கவேண்டும். இந்த வித்தியாசங்கள் எப்போதும் ஒரு நிலையில் இல்லாமல், அடிக்கடி மாறிக்கொண்டுவந்த போதிலும் என்றும் இருந்தேதான் தீரும். மார்க்ஸை பின்பற்றுகிறவன் ஒரு பக்கத்தில் வெறும் வார்த்தை அளவில் பெரும் புரட்சியை உண்டாக்கப்போவதாக வாய்ப்பந்தல்போடும் வேஷக்காரரான எதேச்சை வாதிகளுடன் சேராமலும், மற்றொரு பக்கத்தில் சுயநலமே பெரிதெனக்கொண்டு சமயத்திற்கு தகுந்தபடியெல்லாம் நடித்து மதத்தோடு யுத்தம் செய்யத்தயங்கி, தன்னுடைய கடமைகளை மறந்து, கடவுள் நம்பிக்கைக்கும் இடம் கொடுத்து, தொழிலாளிகளுடைய உண்மை விடுதலைத்தன்மையை மறந்து, பிறருக்கும் வருத்தம் கொடுக்காமலும், பிறர் தன்னைவிட்டு ஓடிப்போகாமல் இருக்கவேண்டும் என்று ஆசைப்பட்டும் அவரவர்கள் இஷ்டப்படி அவரவர்களை நடக்க இடம் கொடுத்துக்கொண்டிருக்கும் சமயோசிதவாதியுடனும் சேரக்கூடாது.

சமதர்ம கட்சியில் பாதிரிகளை சேர்த்துக்கொள்ளலாமா?

இந்த நோக்கத்தைக்கொண்டுதான் நம்முடைய கட்சியார் மதத்தைப்பற்றி எவ்வித திட்டம் போடுவது என்பதைப் பற்றி யோசிக்கவேண்டும்.

உதாரணமாக சோஷியலிஸ்ட் ஜனநாயகக் கட்சியில் ஒரு பாதிரியை (பிராமணனை) சேர்த்துக்கொள்ளலாமா என்கின்ற பிரச்னை அடிக்கடி கிளப்பப்படுகின்றது. வழக்கத்தில் எவ்வித ஆட்சேபணையும் இல்லாமல் அவர்களை சேர்த்துக்கொள்ளலாம் என்று தீர்மானிக்கப்பட்டும், அதற்கு ஆதாரமாக

மற்ற தேசங்களில் உள்ள சமதர்ம ஜனநாயக (சோஷியல் டெமாக்கிரேட்) கட்சிகளில் சேர்த்துக்கொண்டு வரப்படுவதாக எடுத்துக் காட்டப்பட்டும் வருகின்றது. ஆனால் இந்த அனுபவத்தைக் கவனமாய் பரிசீலனை செய்து பார்த்தால் இதன் காரணம் மார்க்கினுடைய தத்துவத்தை தொழிலாளர் இயக்கம் பின்பற்றியதின் பயனாக இயற்கையாய் ஏற்பட்ட முடிவு அல்ல என்பதும், மேற்கு ஐரோப்பிய தேசங்களில் சரித்திர பூர்வமாய் ஏற்பட்டிருக்கும் நிலைமையை ஒட்டி ஏற்பட்ட முடிவு என்பதும் தெளிவாய் விளங்கும். இந்தமாதிரி நிலைமை ருஷிய தேசத்தில் சரித்திர பூர்வமாக ஏற்படவில்லை. ஆகையால் பாதிரிகளை (பிராமணர்களை) தடையில்லாமல் கட்சியில் சேர்த்துக்கொள்ளலாம் என்பது ருஷிய தேசத்து நிலைமைக்கு பொருந்தாததாகும். நாம் ஒரே அடியாக எந்தக்காலத்திலும் எந்த சந்தர்ப்பத்திலும் பாதிரிகளை நம்மோடு சேர்த்துக்கொள்ளலாம் என்பதாக ஒப்புக்கொள்ள முடியாது. ஒரு பாதிரி நம்முடைய நோக்கங்களிலும், வேலைகளிலும் நம்மோடு ஒத்துழைக்கும் நோக்கத்துடன் வருவாரானால், நமது கட்சியின் வேலைத்திட்டங்களை மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டும் காரியத்தில் அனுஷ்டித்துக்காட்டுவதுடன் நமது வேலைகளுக்கு எந்த சந்தர்ப்பத்திலும் எவ்விதத்தடங்கலும் செய்யாமல் இருக்கக்கூடியவராய் இருத்தல்வேண்டும்.

இப்படிப்பட்டவரை நாம் சேர்த்துக்கொள்வதில் ஆட்சேபிக்கவேண்டியதில்லை. ஏனென்றால் நம்முடைய கட்சியின் கொள்கைகளும் திட்டங்களும், நமது தத்துவங்களும், லட்சியங்களும் அந்தப்பாதிரியினுடைய மதக்கோட்பாடுகளுக்கு விரோதமாய் இருந்தபோதிலும், அவ்விரோதம், அந்தப்பாதிரியின் வாழ்க்கையில் மாத்திரம் ஏற்பட்டு அவர் மாத்திரம் பாதிக்கப்படுகிறாரேயொழிய அது நம்முடைய கட்சியைப்பாதிக்கிற

தில்லை. அரசியல் வேலையில் ஈடுபடும் ஒரு கட்சியானது அதன் அங்கத்தினர்களின் வாழ்க்கையின் தத்துவங்களுக்கும் கட்சியின் திட்டங்களுக்கும் ஏதாவது முறண்பாடுகள் இருக்கின்றனவா என்று ஆராய்ச்சிசெய்துகொண்டிருக்க முடியாது. அப்படிப்பட்ட ஆராய்ச்சியின்மேல் ஐரோப்பிய தேசங்களில் ய்யப்படுவதில்லை. அதிலும் ருஷியதேசத்தில் ஏற்பட அவசியமே இல்லை. ஆனால் உதாரணமாக ஒரு பாதிரி (சோஷியலிஸ்ட் டெமாக்கிரேட்) சமதர்ம ஜனநாயகக்கட்சியில் சேர்த்துக்கொண்டு அந்தப்படி தன்னை சொல்லிக்கொண்டு அதற்கேற்ற யாதொரு காரியத்தையும் செய்யாமல் வெறும் மதப்பிரசாரத்தை மாத்திரம் செய்துகொண்டு இருப்பாரானால் அப்படிப்பட்டவரை கட்சியில் இருந்து நீக்கிவிடுவது அவசியமாகும்.

சமதர்ம ஜனநாயகக் கட்சியில் ஆஸ்திகத் தொழிலாளியைச் சேர்த்துக்கொள்ளலாம்.

சோஷியலிஸ்ட் ஜனநாயகக்கட்சியில் கடவுளிடம் நம்பிக்கை வைத்திருக்கும் தொழிலாளியை நாம் சேர்த்துக்கொள்ள சம்மதிப்பதோடு மாத்திரம் அல்லாமல் அப்படிப்பட்ட தொழிலாளிகள் யாவரையும் நம்மோடு சேர்த்துக்கொள்ள நாம் பாடுபடவேண்டும். அதற்காக தனிப்பட்ட முயற்சிகளும் செய்யவேண்டும். மற்றும் அப்படிப்பட்ட தொழிலாளிகளின் மத நம்பிக்கைகளை அவமதிப்பதையும் நாம் தடுக்கவேண்டும். அவர்களை நம்முடைய கட்சியில் சேர்த்துக்கொள்வதின் நோக்கம் நம்முடைய திட்டத்தின் அந்தரங்கத்தை அவர்கள் உணருமாறு செய்வதற்கேயல்லாமல் அவர்களைச் சேர்த்துக்கொள்ளுவதின் மூலம் அவர்களிடம் நமது மதச்சண்டைகளை பெருக்கிக்கொள்வதற்காகவல்ல. நம்முடைய கட்சியின்

அங்கத்தினர்களுக்கு மத விஷயத்தில் அபிப்பிராய பேதமிருப்பதற்கு நாம் தாராளமாய் இடம்கொடுக்கவேண்டும். ஆனால் நம்முடைய கட்சியின் பெருவாரியான அங்கத்தினர்களின் அபிப்பிராயத்திற்கு விரோதமான பிரசாரத்தைச் செய்பவர்களை நாம் சேர்த்துக்கொள்ளக்கூடாது. அந்தப்படி பிரசாரம் செய்ய இடம் கொடுக்கவும்கூடாது.

பேச்சுக்கும், எழுத்துக்கும் உள்ள வித்தியாசம்.

மற்றொரு உதாரணம் எடுத்துக்கொள்ளுவோம். நமது அங்கத்தினர்களில் சிலர் "சோஷியலிஷமே என்னுடைய மதம்" என்று வெளிப்படையாகக் கூறுவதை நாம் எப்பொழுதும் சரி என்று ஒப்புக்கொள்ளுகின்றோமா? என்கின்ற கேள்வி பிறக்கின்றது. இம்மாதிரி கூறுகின்றவர்கள் மார்க்சினுடைய தத்துவத்தில் இருந்து அதாவது சமதர்மத்தில் இருந்து மாறுபட்டவர்கள் என்பது வெளிப்படை. ஆனால் அவர்களிடம் ஏற்பட்டிருக்கும் மாறான அபிப்பிராயத்தின் அளவு சமயத்திற்கு தக்கவாறு குறைந்தோ கூடியோ இருக்கும்.

மேடை மேல் ஏறி, முற்போக்கடையாத தொழிலாளிகளின் முன் பிரசங்கம் செய்யும் காலத்தில் பிரசங்கியானவர் தன்னுடைய பிரசங்கத்தை கேட்டுக்கொண்டிருக்கும் படிப்பில்லாத பாமர ஜனங்கள் தனது எண்ணத்தைசரியானபடி உணரும் பொருட்டு அவர்களது புத்திக்கு எட்டும்படியான நிலையில் தனது பாஷையில் மதம் என்றவார்த்தையை உபயோகித்து தனது எண்ணத்தை விளக்குவாரேயானல் அந்த மதம் என்னும் வார்த்தை அவ்வளவு பெரிய குற்றமாய்விடாது.

ஆனல் ஒருவன் புஸ்தகம்எழுதும் போது கடவுளுடைய சிருஷ்டியைப்பற்றிச் சொல்லி கடவுள் சோஷியலிஷத்தை

(சமதர்மத்தை) சிருஷ்டித்தார் என்று நமது லூனசார்ஸ்கி கூறுகிற மாதிரி எழுதுவானே யானால் அது வேறு விஷயமாகும். முதலில் பேசிய பிரசங்கியைக் குற்றம் சொல்லுவது வீண் வேலையாகும். பிரசாரகர்களுக்கு பிரசங்கம் கேட்டுக்கொண்டிருக்கிறவர்களின் மனோ நிலைக்குத்தக்கவாறு வார்த்தைகளை உபயோகிக்க உரிமை இருக்கவேண்டும். ஆனால் இரண்டாவதவரான நூலாசிரியரை கூறிபால் கண்டிக்கவேண்டியது அவசியமான கடமையாகும். ஏனென்றால் முன்னவர் ஜனங்களை அவர்கள் மத்தியில் இருந்து பேசி சோஷியலிஷத்திற்கு இழுத்துச்செல்லுகிறார். பின்னவர் மக்களை சோஷியலிஷத்திலிருந்து மதத்திற்கு இழுத்துச் செல்லுகிறார்.

மதம் சொந்த விஷயம் என்பதற்கு ஏன் பல அர்த்தம்.

மதம் என்பது அவரவர்கள் சொந்த விஷயம் என்னும் கொள்கையை மேற்கு தேசங்களில்சமயோசிதம் போல் அர்த்தம் செய்ய நேர்ந்ததைப்பற்றி ஆராய்ச்சி செய்வோம். சமயோசித வாதத்திற்கு ஏற்படும் பொதுக்காரணங்களே இந்த விஷயத்திலும் ஏற்பட்டிருக்கின்றன. உதாரணமாக தொழிலாளர் இயக்கத்தின் உண்மை முன்னேற்றத்தைப் பறிகொடுத்து தற்காலீகமானசில சௌகரியங்களை உண்டாக்கிக்கொள்வது போலாகும். தொழிலாளர் கட்சியின் கோரிக்கை கையான்து அரசாங்கத்தார் மதத்தை அவரவர்கள் சொந்த விஷயமாகக்கருதவேண்டுமென்பதேயொழிய, பொது ஜனங்களுக்குபோதை தரும் வஸ்துவாக ஏற்பட்டிருக்கும் மதத்தினுடைய மூடக்கொள்கையை எதிர்த்து நிற்கும் போராட்டத்தை எவருடைய சொந்த வேலையாகவும் நமது கட்சி கருதவில்லை.

ஆனால் சமயோஜிதவாதிகள் நமது கொள்கையைத் திரித்துக்கூறி, சோஷியலிஸ்ட் ஜனநாயகக்கட்சியானது மதத்தை

அவரவர்கள் சொந்த விஷயமாக பாவிக்கிறது என்று கட்டுக் கட்டிவிட்டார்கள். சமயோசித வாதிகள் திரித்துக்கூறுவது மாத்திரமல்லாமல் தற்காலத்திய ஐரோப்பிய சோஷியலிஸ்ட் ஜனநாயகக்கட்சியில் சேர்ந்தவர்களிடம் மத விஷயமாய் புத்திதோன்றி இருப்பதற்கு சரித்திரபூர்வமான சிலகாரணங் கள் உண்டு, இந்தக்காரணங்கள் இரண்டு வகைப்படும்.

முதலாளி பிரபுப்புரட்சி.

முதலாவது சரித்திர பூர்வமாய் பார்த்தோமானுல் மதத் தின்பேரில் தொடுக்கும் யுத்தமானதுமேற்கு தேசங்களில் புரட்சியைஏற்படுத்திய முதலாளி புரட்சிக்கட்சி ஆரம்பித் ததாகும். மத்தியகாலத்தில் ஆட்சி பெற்றிருந்த பிரபுத்த னத்தை எதிர்ப்பதற்காகக் கிளம்பிய முதலாளி புரட்சிக் கட் சிகளே மதத்தின் பேரிலும்யுத்தம் தொடங்கின. பிரான்ஸ், ஜர்மனிமுதலிய தேசங்களில் என்சைக்ளோபீடிஸ்ட் Encyclopediasts, பூர்பாக் Feurback முதலியவர்கள் மூலம் சோஷியலிஷம் (சமதர்மம்) ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னமே யே முதலாளிக்கூட்டங்கள் மதத்தோடு யுத்தம் தொடங்கின. ருஷிய தேசத்தில் நமது புரட்சி இயக்கம் ஏற்பட்ட நிலைமை யில் மதத்தோடு யுத்தம்செய்துதீரவேண்டியதாய் ஏற்பட்டு விட்டது. நமது முதலாளி ஜனநாயக இயக்கங்கள் இவ்விஷ யத்தில் மேற்கு ஐரோப்பியதேசங்களில் நடந்த அளவு முற் போக்கடையவில்லை.

ஆனுல் முதலாளிக் கூட்டம் மதத்தின் பேரில் யுத்தம் தொடங்கியதின் பயனுக இப்போதுமேற்கு ஐரோப்பிய தேசங்களில் மதத்தைப்பற்றிய விஷயங்களில்ஏதேச்சைவாதி களுடைய முறண்பாடுகளுக்கு இடம் ஏற்பட்டிருக்கிறது. எவ் வளவுதான் இந்த ஏதேச்சைவாதிகள் முதலாளி கூட்டத்தா

ரின் பேரில் வாயளவில் அவதூறாய் சொன்னபோதிலுங்கூட எதேச்சை வாதிகளுடைய நோக்கம் எல்லா விஷயங்களிலும் முதலாளிகளின் நோக்கங்களைப்போலவே இருந்திருக்கிறது. இதை மார்க்ஸ் கட்சிக்காரர்கள் ஏற்கனவே விளக்கிக்காட்டி இருக்கிறார்கள்.

லேட்டின் (Latin) தேசங்களில் எதேச்சைவாதிகளும், பிளாங்விஸ்ட்டு (Blanquists) களும், ஜர்மனியில் டூரிங் Dhuring கினுடைய மாணாக்கனான ஜோகன்மோஸ்ட் Johan Most முதலியவர்களும், ஆஸ்ட்டிரிய தேசத்தில் 1880ம் வருஷத்திற்குப் பிறகு விளங்கின எதேச்சைவாதிகளும் மதத்தின் பேரில் தொடங்கின யுத்தத்தை சொல்லளவில் மாத்திரமே மிகவும் அமிதமாகக் கொண்டு செலுத்தினார்கள். இந்தக் காரணத்தினால் தான் மேற்கு ஐரோப்பிய சோஷயலிஸ்ட் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்கள் மதவிஷயத்தில் எதேச்சைவாதிகளைப் போலவும், அவர்களுக்கும் ஒரு படி அதிகமாகவும் மாறுபடும்படி நேர்ந்தது, என்றாலும் இது இயற்கையேயாகும். ஓரளவில் நாம் இதை மன்னிக்கவும் கூடும். ஆனால் நாம் நமது ருஷிய சோஷியலிஸ்ட் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்கள் மேற்கு தேசங்களில் ஏற்பட்ட இந்த சரித்திர பூர்வமான விஷயங்களை மறந்து விடக்கூடாது.

முதலாளி அரசாங்கத்தின் சூக்ஷி.

இரண்டாவதாக மேற்குத் தேசங்களில், தேசிய முதலாளி புரட்சிகள் முடிவடைந்த பிறகு அவரவர்கள் மனச் சாக்ஷிப்படி நடந்து கொள்ளுவதற்கு ஓரளவில் சுதந்திரம் கிடைத்ததால், முதலாளி ஜனநாயகக் கட்சிக்கும் சோஷியலிஸ்ட் கட்சிக்கும் யுத்தம் ஏற்பட்டு, மதத்தின்பேரில் முத

லாளிக் கூட்டத்தார் தொடங்கிய யுத்தம் பின்னடைந்து மறைந்து போயிற்று. ஆகையினுல் இப்பொழுது முதலாளி கூட்டத்தைச் சேர்ந்த அரசாங்கத்தார் பொது ஜனங்களை சோஷியலிஸ்ட் சமதர்மச் சண்டையில் இருந்து இழுப்பதற்கு ஆகவேண்டி மறுபடியும் தங்கள் மதப்போராட்டத்தைக் கிளப்பி இருக்கிருர்கள். இந்தமாதிரி தந்திரமாக ஆரம்பிக்கப் பட்ட யுத்தங்களே ஜர்மனியில் குல்ட்டூர் கேம்ப் Kultur-Kampf என்பதும், பிராஞ்சு தேசத்தில் முதலாளி குடி அரசு (bourgeois republicans) கட்சியார் பாதிரிகள் பேரில் தொடங்கிய யுத்தமும் ஆகும். இந்தப்படி முதலாளி கூட்டத்தார் பொது மக்களே சோஷியலிஸ்ட் சமதர்ம யுத்தத்தில் சேராமல் இருக்கும்படி தடுப்பதற்காகவே பாதிரிகள் பேரில் தங்கள் போலி யுத்தத்தை ஆரம்பித்தார்கள். இந்தப் போலி யுத்தம் பலிதமாகாமல் போன பிறகு தான் தற்காலத்திய மேற்கு தேசத்திய சோஷியலிஸ்ட் ஜனுயகக் கட்சியார் மத விஷயத்தைப்பற்றி பராமுகமாய் இருக்கிருர்கள். இதை நாம் மனப்பூர்வமாக அறிந்து ஒத்துக் கொள்ள வேண்டும். ஏனென்ருல் இந்த சோஷயலிஸ்ட் ஜனுயகக் கட்சியார் முதலாளிகூட்டத்தாரும் பிஸ்மார்க்குப் போன்றவர்களும் தந்திரமாக சோஷியலிஸ்ட் சமதர்ம யுத்தத்தை அடக்கி மத யுத்தத்தை கிளப்பிவிடச் செய்த சூட்சியை எதிர்த்து நிற்க வேண்டிவந்தது.

ருஷிய நிலைமை.

ஆனுல் ருஷிய தேசிய நிலைமை இதிலிருந்து மாறுபட்டிருக்கிறது. முதல் முதல் ஏற்பட்டிருக்கும் ஜனுயகப் புரட்சியிலேயே தலைமை ஸ்தானம் தொழிலாளிகளுக்கு கிடைத்து விட்டது. ஆகையால் தொழிலாளி கட்சியே பழைய மூடப்

பழக்க வழக்கங்களுக்கும், பழைய அரசியல் மதஸ்தாபனங்க ளுக்கும் விரோதமாய் யுத்தம் தொடங்கவும் இவைகளை புதுப் பிக்க வென்றே வெவ்வேறு பெயர்களால் ஸ்தாபிக்கும் முயற் சிகளை எதிற்கவும் முன்னணியில் நிற்க வேண்டும். ஆகையால் ஜர்மனி தேசத்து சோஷியலிஸ்ட் ஜனநாயகக் கட்சியார், அர சாங்கம் சம்மந்தப்பட்ட வரையில் மதம் அவரவர்கள் சொந்த விஷயம் என்னும்படியான தங்கள் கொள்கையைக் கைவிட்டு விட்டுத் தங்கள் கட்சி சம்மந்தப்பட்ட வரையில் கூட மதம் அவரவர்கள் சொந்த விஷயம் என்று கூறியகாலத்தில் அவர் களை எஞ்சல்ஸ் மிதமாகக் கண்டித்த போதிலும் கூட, அதே தவறுதலைச் செய்யும் ருஷியதேசத்து சமயோசித வாதிகளை எஞ்சல்ஸ் உயிருடன் இருந்திருந்தால் இன்று அதைவிட நூறு மடங்கு அழுத்தமாகக் கண்டிப்பார். டூமா Duma என்னும் ருஷிய அரசாங்க சபையில் நமது கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் மதம் பொது ஜனங்களுக்கு போதை கொடுத்து வருகின்றது என்ற உண்மையை விளக்கிக்காட்டின வர்களாவார்கள். இந்த வழியைத் தான் மற்ற சோஷியலிஸ்ட் ஜனநாயகக் கட்சியாரும் மத விஷயத்தைப் பற்றி தாங்கள் பேசும் காலத்தில் பின் பற்ற வேண்டும்.

நாஸ்திகப் பிரசாரமே முக்கியமானதா?

அவர்கள் இன்னும் ஒருபடி அதிகமாகச் சென்று நாஸ்தி கப்பிரசாரத்தை பெருக்கவேண்டுமா என்ற கேள்விக்கு கூடாது என்றே பதில் சொல்லுவோம். ஏனென்றால் அந்தப்படி செய் வதால் தொழிலாளர்கள் நாம் மத யுத்தத்தையே முக்கியமா கக் கருதி, அதிலேயே ஈடுபடுவதாய் தப்பு எண்ணம் கற்பிக் கப்படுவதோடு மதவிஷயத்தில் முதலாளிகளுக்கும் சோஷிய லிஸ்ட்டு (சமதர்மக்கட்சி) க்கும் உள்ள வித்தியாசத்தை மறந்த வர்களுமாக ஆவோம். டூமா சபையில் நமது கட்சியைச் சேர்

ந்த அங்கத்தினர்கள்செய்த முதல் வேலையில் தங்கள் கடமையை உணர்ந்தே நடந்துகொண்டார்கள் என்று அவர்களை கௌரவிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

இரண்டாவதாக நம்முடைய சோஷியலிஸ்ட் ஜனநாயக நோக்கத்தோடு நாம் முக்கியமாய்ச் செய்யவேண்டிய வேலை என்னவென்றால் கோவில்களும் பாதிரிகளும், அரசாங்கத்திற்கும் முதலாளிகளுக்கும் பக்கபலமாயிருந்து தொழிலாளர்களோடு அவர்கள் செய்யும் யுத்தத்தில் இவர்களும் பங்கு எடுத்துக்கொள்ளுகிறார்கள் என்பதை தொழிலாளிகளுக்கு விளக்கிக் காட்டுவதேயாகும்.

மூன்றாவதாக மதம் அவரவர்களுடைய சொந்தவிஷயம் என்பதாக தீர்மானிக்க வேண்டும் என்று ஜர்மனி தேசத்து சமயோசிதவாதிகள் கூறுவதின் உண்மை அர்த்தம் என்னவென்பதை நமது பிரதிநிதிகள் விளக்கிக்காட்டினார்கள்.

——0——

அத்தியாயம் 3.

தீவிர பிரகிருதிவாதத்தின் அந்தரங்கம்.

——:0:——

"Under the Banner of Marxian."

"மார்க்ஸ் கோடியின் கீழ்"

என்ற பத்திரிக்கை ஆசிரியரின் அறிக்கையைப்பற்றிய அபிப்பிராயம்.

அண்டர் தி பேனர் ஆப் மார்க்சின் (Under the Banner of Marxian) என்ற பத்திரிக்கையை ஆதரிப்பவர்களில் எல்லோருமே கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களாக இல்லாவிட்டாலும் எல்லோருமே உண்மை பிரகிருதி (உலகாயிதமத) வாதிகளாகவே இருக்கிறார்கள் என்று ஏற்படுகிறது. என்னுடைய அபிப்பிராயத்தில் இம்மாதிரி கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்தவர்களுக்கும் அதில் சேராதவர்களுக்கும் கூட்டுறவு ஏற்படவேண்டியது அவசியமாகும். இந்த வேலையே இப்பத்திரிகையின் சரியான வேலையாகும்.

கம்யூனிஸ்ட்டுகள் கடமை.

கம்யூனிஸ்ட்டுகளும் மற்றும் பொதுவாக ஒரு பெரிய புரட்சியை வெற்றியுடன் துவக்கிய எல்லா புரட்சியாளர்களும் செய்யும் பெரிய ஆபத்தான பிசகு என்னவென்றால் ஒரு புரட்சியை புரட்சியாளர்கள் மாத்திரம் தனித்து நின்று நடத்தி முடிக்க முடியுமென்று நினைப்பதேயாகும். ஆனால் முக்கியமான புரட்சிவேலை வெற்றிபெற வேண்டுமானல் நம்முடைய மனதில் பதியவைத்து நடக்கவேண்டிய உண்மை ஒன்று

உண்டு. அதாவது உண்மையில் தீவிரமும் முற்போக்கும் கொண்ட எல்லா வகுப்பின் முன்னணியிலும் தாங்கள் நின்று அவைகளை நடத்திக்கொண்டுபோக வேண்டுமென்பதுதான். இப்படி முன்னணியாக விளங்கும் புரட்சியாளர்கள் தங்களுடைய வேலையைச் சரிவர செய்யவேண்டுமானல் தாங்கள் தலைமைகொண்டு நடத்தும் பொது மக்களோடு நெருங்கிய சம்பந்தம் வைத்துக்கொண்டு, அவர்களை சிதரிப்போகாமல் கட்டுப்பாடாக முன்னுக்கு நடத்திக்கொண்டும் போகவேண்டும். ஆகையால் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேராதவர்களுடனும் பல துறைகளிலும் கலந்து கூட்டுறவு ஏற்படுத்திக்கொள்ளாதவரை கம்யூனிஸ்ட்டுகளால் ஆக்க வேலைகள் எதுவும் செய்யமுடியாமல் போய்விடும்.

பிரகிருதிவாதத்தையும், மார்க்ஸ் சித்தாந்தையும் பாதுகாக்கும் வேலையை இப்பத்திரிகை மேற்கொண்டிருப்பதிலும் இதே கொள்கையைத்தான் அனுஷ்டிக்கவேண்டிவருகிறது.

ரஷிய தேசத்தில் முற்போக்கான சமுதாயக்கொள்கைகளில் ஈடுபட்டவர்களெல்லாம் நல்ல வேளையாக பிரகிருதிவாதத்திலேயே நெடு நாளாக பற்றுகொண்டவர்களாய் இருக்கிருர்கள். பேர் சொல்லவெண்டுமானல் G. V. Plekhanov ஐத்தவிர Chernishevsky யை குறிப்பிடலாம். இவருடைய கொள்கைகளை ஒத்துக்கொண்ட பிறகே தற்காலத்திய [Narodniks] நரோட்நிக்கட்சியார் சமயோசிதம்போல் தங்கள் கொள்கைகளை மாற்றிக்கொள்ள ஆரம்பித்து, ஐரோப்பிய விஞ்ஞான அறிவின் நவீன முடிவுகள் என்ற மோகத்தில் ஈடுபட்டு, பிற்போக்கான கொள்கைகளில் பற்றுக்கொண்டு,பணக்கார ஆதிக்கத்தின் கீழ்பலவிதப்பட்ட அடிமைத்தனத்திற்கும், கோணல்களுக்கும் இரையானர்கள்.

எது எப்படி இருந்தபோதிலும் ருஷிய தேசத்தில் கம்யூனிஸ்ட் கட்சியைச்சேர்ந்த கூட்டத்தில் அனேக பிரகிருதி வாதிகள் இன்றும் இருக்கிறார்கள். அவர்கள் இன்னும் நெடு நாளைக்கு இருந்தே தீருவார்கள். ஆகையால் நாம் தத்துவ அறிவை பிற்போக்கான வழியில் செல்ல விடாமலும் படித்த வகுப்பாரின் கோணல் புத்திக்கு இரையாகாமலுமிருக்கச் செய்யும் யுத்தத்தில் நிரந்தரமாக தீவிர பிரகிருதி வாதத்தை அனுஷ்டிப்பவர்களின் ஒத்துழைப்பை நாடவேண்டியது நம்முடைய முக்கிய கடமையாகும்.

படித்த கூட்டத்தார் பாதிரிகளின் கூலிகளே.

Dietzgen டிக்டேசனைப்பற்றி ஒருவார்த்தை. Dietzgen என்ற பெயரோடு தகப்பன் மகன் ஆகிய இருவருண்டு. மகன் டாம்பீகத்தில் தகப்பனைவிட இளைத்தவனல்லாவிட்டாலும் அறிவில் சூன்னியமானவன். இவ்விடத்தில் தகப்பனைப் பற்றியே குறிப்பிடுகிறேன். பணக்கார வகுப்பின் ஆதிக்கங்களுக்கு உட்பட்ட தேசங்களில் செல்வாக்குப்பெற்று தத்துவ ஞானிகளுடையவும், பிரசாரகர்களுடையவும் மனதைக்கவர்ந்து வரும் தத்துவ அறிவுக்கொள்கைகளைப்பற்றி மார்க்ஸ் கொள்கையாளரின் அடிப்படையான மனப்பான்மை எப்படி இருக்கவேண்டுமென்று Dietzgen தெளிவாக விளங்கும்படி எடுத்துக்கூறி இருக்கிறார். தற்கால சமூக அமைப்பில் தத்துவ ஞானத்தை போதிக்கும் ஆசிரியர் "சன்னது பெற்ற பாதிரிகளின் கூலிகள்" அவர்கள் என்பது Dietzgen டிக்டேசன் அபிப்பிராயம்.

மற்ற தேசத்திலுள்ளவர்களைப்போலவே ருஷியதேசத்திலுள்ள படித்த கூட்டத்தார் தங்களை முற்போக்காளர்கள் என்று கருதிக்கொண்டு Dietzgen உடைய மேல்கண்ட

அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள். அவர்கள் அப்படி மறுப்பதற்கு காரணம் அவர்கள் உண்மையை வெறுப்பதேயாகும். தற்காலத்தில் படித்த கூட்டத்தார் அரசியல் துறையிலும், பொருளாதார சமூக விஷயங்களிலும் அதிகாரம் வகித்து ஆதிக்கம் செலுத்தும் பணக்காரர்களிடம் எப்படி அடங்கிக்கிடக்க நேரிடுகின்றது என்பதை சற்று சிந்தித்துப் பார்த்தால் Dietzgen வெடுக்கென்று கூறிய இந்த வார்த்தைகள் உண்மை என்று புலப்படும். ஐரோப்பிய தேசங்களில் அடிக்கடி கிளம்பும் நவீன தத்துவ ஆராய்ச்சிக்கொள்கைகளில் பெரும்பான்மையானவைகளை சிந்தித்துப்பார்த்தால் பணக்கார வகுப்பின் சுய நலமும் அவ்வகுப்பின் ஆதிக்கமும் எவ்வளவுதூரம் எல்லாவிதமான மதக் கோட்பாடுகளுக்கும் நவீன தத்துவஞானக் கொள்கைகளுக்கும் இடம் கொடுத்து காப்பாற்றி வருகின்றது என்பது விளங்கும். இந்த உண்மை (Radium) ரேடியம் கண்டுபிடிக்கப்பட்டபோது கிளம்பிய தத்துவஞான ஆராய்ச்சிகளிலும், தற்சமயம் Enstein ஈன்ஸ்டியன் மூலம் ஏற்பட்டிருக்கும் தத்துவ ஞானக்கொள்கைகளிலும் விளங்குகின்றது.

கூலிகளை வெளிப்படுத்தியேயாக வேண்டும்.

இது வரையில் நாம் எழுதியதிலிருந்து ஒன்று தெளிவாக புலப்படும். அதாவது தீவிர பிரகிருதிவாதியாக இருக்கவிரும்பும் ஒரு பத்திரிகையானது "சன்னது பெற்ற பாதிரிகளின் கூலிகளாய்" விளங்குகிறவர்கள் விஞ்ஞான சாஸ்திரங்களின் அதிகாரத்தோடு பேசினாலும், அல்லது அவர்கள் தனித்தனியாக தங்களை ஜனநாயகத்தில் பற்றுக் கொண்ட தீவிர வாதிகள் எனக்கூறிக் கொண்டாலும், அல்லது தங்களை சமதர்ம (சோஷியலிஸ்ட்) கொள்கைகளில் பற்றுக்கொண்ட பொது

ஜன சேவகர்கள் என்று கூறிக் கொண்டாலும் அவர்கள் நடத்தையை இடைவிடாமல் கண்டிப்பாய் வெளிப்படுத்தியே ஆக வேண்டும்.

நாஸ்திகப் பிரசாரம் செய்தாகவேண்டும்.

இரண்டாவதாக இம்மாதிரி பத்திரிகை தீவிர நாஸ்திகத்தையே பிரசாரம் செய்து வரவேண்டும். நமது ருஷிய தேசத்தில் (புரட்சிக்குப் பின்) இந்த வேலையைச் செய்ய நமக்கு தனி டிபார்ட்மெண்டுகளும், சர்க்கார் ஸ்தாபனங்களும் இருந்து வருகின்றன. என்றாலும் இவ்வேலை மிகவும் மெதுவாகவும் திருப்தியற்ற மாதிரியிலும் தான் நடைபெற்று வருகிறது. இதற்கு காரணம் என்னவென்றால் பழய அதிகார வர்க்க பழக்க வழக்கங்கள் புதிய சோவியத் ஸ்தாபனங்களிலும் புகுத்தியிருப்பதாய் இருக்கலாம். இந்த நிலையில் தீவிர பிரகிருதி வாதத்தை நிலைநாட்ட உத்தேசிக்கும் பத்திரிகையானது சளைக்காமல் நாஸ்திகப் பிரசாரம் செய்து போர்தொடுத்து நாஸ்திகத்தைப் பரப்புவதாயிருந்தாலும் கூட அந்த நூதன வேலைக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் கவர்மெண்ட் ஸ்தாபனங்களை சீர்திருத்தியும், அதிகவேலை செய்யும்படி தூண்டியும், அவர்கள் விட்டு விட்ட வேலையைதொடர்ந்து தானேசெய்து முடித்தும், கவர்ன்மெண்டார் வேலைக்குப் பக்கபலமாகவும் விளங்க வேண்டி வரும். இவ்விஷயத்தைப் பற்றி பல பாஷைகளிலும் வெளி வந்துள்ள நூல்களை யெல்லாம் வெகு கவனமாக ஆராய்ந்து அவைகளில் கொஞ்சமாவது உபயோகப்படக் கூடிய பாகங்களை எல்லாம் மொழி பெயர்க்கவோ, அல்லது அவைகளைப்பற்றி மதிப்புரை எழுதவோ வேண்டும்.

பதினெட்டாவது நூற்றாண்டின் கடைசியில் வெளிப்பட்ட தீவிர நாஸ்திகப் பிரசுரங்களை மொழி பெயர்த்து தற்காலம் பொதுமக்களிடம் வினியோகிக்க வேண்டுமென்று வெகு

நாளைக்கு முன் எஞ்சல்ஸ் தொழிலாளர் தலைவர்களுக்கு உபதேசம் செய்தார். இதுவரை அவர்கள்சொற்படி நடவாதது நமக்கு பெரிய வெட்கக் கேடான காரியமாகும். புரட்சிக் காலங்களில் அதிகாரத்தை கைப்பற்றுவது சுலபமென்றும், பிறகு அந்த அதிகாரத்தைசரிவர உபயோகப் படுத்துவது கடினமென்றும் சொல்லப்படுவதற்கு இதுவே ஒரு தக்க சான்றாகும்.

போலி சமாதானம்.

இந்தவிஷயத்தில் நாம் மிதமாகவும் சோம்பலாகவும் ஒன்றும் செய்ய முடியாமலுமிருந்ததற்கும் சால்சுவாப்புகள் வெகு ஜம்பமாக சொல்லிக் கொள்ளப் படுகின்றன. உதாரணமாகப் "பதினெட்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட பழைய நாஸ்திக நூற்கள் விஞ்ஞான வளர்ச்சி அடைந்த இந்தக் காலத்திற்குப் பொருந்தா" தென்றும், "புதிய விஞ்ஞான அறிவுக்கு அவைகள் ஒத்து வராதவைகள்" என்றும் சொல்லப் படுகின்றன. இம்மாதிரியாக விஞ்ஞானம் (Science) என்ற பெயரால் செய்யும் மோசடியை விடமோசமானகாரியம் உலகத்தில் வேறு ஒன்றுமே இல்லை என்று சொல்லுவேன். இந்தபோலி (Science) சைன்ஸ் வேஷம் போடுகிறவர்கள் ஒன்று கற்றறி மூடர்களாய் இருக்கவேண்டும், அல்லது மார்க்ஸ்கொள்கைகள் என்ன என்பதை கொஞ்சமும் அறியாதவர்களாய் இருக்கவேண்டும். பதினெட்டாவது நூற்றாண்டில் விளங்கிய புரட்சிக்கார நாஸ்திகர்கள் எழுதிய நூற்களில் பல பாகங்களில் விஞ்ஞானஅறிவுக்கு ஒத்துவராத கொச்சை பேச்சுகள் அனேகம் அடங்கிஇருக்கின்றன என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் அந்த நூற்களை வெளியிடுகின்றவர்கள் தற்கால அறிவுக்கு ஒத்துவராதவைகளை நீக்கியும், பதி

னெட்டாம் நூற்றுண்டிற்குப்பிறகு மதத்தைக் கண்டிக்கும் வழியில் (Science) சைன்சு இன்ன இன்ன வழியில் முன்னேறிச் சென்றிருக்கின்றது என்பதை விளக்கியும் அதற்குத் தகுந்த மாதிரியில் நவீன முறையில் சுட்டிக் காட்டும் குறிப்புகளைச் சேர்த்தும் நூல்கள் வெளியிடுவதை யாரும் வேண்டாம் என்று சொல்ல வரவில்லை. கோடிக்கணக்கான மக்கள் (முக்கியமாய் விவசாயிகளும் வேளாளர்களும்) சில்லரைக் கைத்தொழிலாளிகளும் தற்கால சமூக அமைப்பில் எழுதப் படிக்கக்கூடத் தெரியாமல் மூடப் பழக்க வழக்கங்களுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறார்கள். இவர்கள் இந்த அறியாமையில் இருந்து தப்பவேண்டுமானுல் மார்க்ஸ் வகுத்தமாதிரிதான் படித்தாகவேண்டுமென்று நினைப்பதானது மார்க்ஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் செய்யக்கூடிய பிசகுகளில் ஒன்றுகும். பொதுமக்களுக்கு நாஸ்திகப் பிரசாரத்தில் உள்ள பல் வேறுவிதமான இரகசியத் தத்துவங்களையெல்லாம் அவர்கள் அறியும்படி செய்யவேண்டும். பொதுஜனங்கள் நம் கொள்கையில் பற்றுக்கொள்ளவும், அவர்கள் அழுந்திக்கிடக்கும் மதம் என்னும் மயக்கத்திலிருந்து தெளிந்து எழுந்திருக்கவும், அவர்களின் சகல உறுப்புகளுக்கும் பலம் ஏற்பட்டு தாங்களாக நிலைநின்று நடக்கவும் செய்ய எந்த எந்த வழிகளில் அவர்களை அணுகமுடியுமோ அந்தந்த வழிகளில் எல்லாம் நாம் அவர்களை அணுக முயலவேண்டும்.

பழய நாஸ்த்திக ஆதாரங்கள்.

பதினெட்டாவது நூற்றுண்டில் பழைய நாஸ்திகர்களால் ஆக்கப்பட்ட நூற்களானது ருசிகரமாகவும் கெட்டிக்காரத்தனமாகவும் எழுதப்பட்டு இருப்பதுடன் அந்தக் காலத்துப் பாதிரிகளின் சுயநலச் செய்கைகளை வெகு சாதுரியமாகவும்

வெளிப்படை யாகவும் தாக்குகின்றன. தற்காலத்தில் நம்மு டைய கட்சியார் எழுதுகின்ற நூற்களில் மார்க்சினுடைய வார்த்தைகளையே திருப்பித் திருப்பி பலமாதிரியாக அடுக்கி ருசியும் வேகமும் இல்லாமல் இருப்பதோடு உண்மைகளை விளக்க நல்ல திருஷ்டாந்தங்கள்கூட எடுத்துக் காட்ட முடி யாத மாதிரியில் எழுதப்பட்டிருக்கின்றன. இம்மாதிரி நூற் களே தற்காலத்தில் பெரிதும் ஏற்பட்டு அவைகளின் மூலம் மார்க்சினுடைய கொள்கைகள்சிதறுண்டு போகின்றன. ஆகை யால் இந்த நவீன நூற்களை விட பழைய நூற்களே பொது ஜனங்களை மதம் என்னும் நித்திரையிலிருந்து எழுப்புவதற்கு ஆயிர மடங்கு உபயோக முள்ளவைகளாகும். மார்க்ஸ் ஏஞ் சல்ஸ்இவர்கள் எழுதிய முக்கிய நூற்களை எல்லாம் மொழி பெயர்த்துவிட்டோம். (இது ரஷியாவைப் பொறுத்துச்சொன் னது. மொ-ர்) பழய நாஸ்திகத்திலும் பழய பிரகிருதி வாதத்தி லும் மார்க்ஸ் ஏஞ்சல்ஸ் உண்டாக்கிய மாறுதல்கள் வெளிப் படுத்தப் படாமல் போய் விடுமோ என்று யாரும் பயப்பட வேண்டியதில்லை. 'மார்க்ஸ்சைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சிக் காரர்கள் என்ற பெயரால் மார்க்ஸ் கொள்கைகளை சிதைத்து வருகிறகூட்டத்தார் அடிக்கடி மறந்து போகும் முக்கிய காரி யம் என்னவென்றால் முன்னுக்கு வராத பொது மக்களை கிளப்பி மதம் என்னும் விஷயத்தில் தங்கள் அறிவைச் செலுத்தி ஆராய்ச்சி செய்யத் தூண்ட வேண்டிய காரியத் தைச் செய்து விடுகிறார்கள்.

இனி நவீன விஞ்ஞான அறிவாளிகளின் பிரதிநிதிக ளாய் மத ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறவர்களின் செய்கைக ளைச் சற்று கவனிப்போம். படித்த முதலாளி களுக்கு முத லாளிகளாய் விளங்கும் இந்தக் கூட்டத்தார், மதப் பழக்கங் களை கண்டிக்கும்போது கூடவேதங்கள்சொந்த சரக்குகளை

கொஞ்சம் சேர்த்து விடுகிறார்கள். இதிலிருந்து அவர்கள் பணக்கார வகுப்புக்கு அடிமைப் பட்ட அபிப்பிராயங்கள் கொண்டவர்கள் என்பதும் அவர் "சன்னது பெற்ற பாதிரிகள் கூலிகளாய்" விளங்குகிறார்கள் என்பதும், உடனே புலப்படுகின்றன.

இரண்டு உதாரணங்கள்.

ஒன்று:—1918-ம் வருஷத்தில் R. J. Wipper என்பவர் "கிறிஸ்து மத எழுச்சி" என்று ஒரு புஸ்தகம் வெளியிட்டார். இது மாஸ்கோவில் பாரோஸ் கம்பெனியாரால் வெளிப்படுத்தப் பட்டது. இந்த புஸ்தகத்தில் நவீன விஞ்ஞான முன்னேற்றத்தை சுருக்கிக் கூறிய புஸ்தகாசிரியர் கோவில் (Church) ஒரு அரசியல் ஸ்தாபனமாக இருந்துகொண்டு பொது மக்களிடம் மூடக் கொள்கைகளையும் குருட்டு நம்பிக்கைகளையும் பெருக்கி வருவதை பலமாய் கண்டிக்காமல், அவைகளை யெல்லாம் மழுப்பி விட்டு, தான் பிரகிருதி வாதம், ஆத்ம வாதம் என்னும் இரண்டு அபிதவாதங்களிலும் ஈடுபடவில்லை என்று சொல்லிக் கொண்டு பரிகசிக்கத்தக்க வண்ணம் பிற்போக்காளர்கள் போல் பெருமை பாராட்டிக் கொள்ளுகிறார். இப்படிச்சொல்வதால் இவரது செய்கையின் அர்த்தம் என்னவென்றால் தொழிலாளர்களை கொள்ளையடித்து லாபத்தை திரட்டி, கோடிக் கணக்கான பொருளை மத அபிவிருத்திக்கென செலவழிக்கும் பணக்கார வர்க்கத்திற்கு தான் அடிமை என்பதை இந்த நூலாசிரியர் காட்டிக் கொண்டதேயாகும்.

கிறிஸ்த்து இருந்ததில்லை.

மற்றொன்று:— ஜர்மனியில் பிரசித்தி பெற்ற ஆர்தர் டுரூவ்ஸ் (Arther Drews) என்னும் ஆசிரியர் "கிறிஸ்து கட்டுக்கதை" என்னும் நூலில் மதக் கொள்கைகளையும் மத கட்

டுக் கதைகளையும் எதிர்த்து வாதித்து, சரித்திர ஆராய்ச்சிப் படிகிறிஸ்து என்று ஒருவரும் இருந்ததில்லை என்று நன்றாய் ஸ்தாபிக்கிறார். ஆனால் புஸ்தகக் கடைசியிலோ மதம் இருக்க வேண்டுமென்று சொல்லுகிறார். என்றாலும், பழய மதம் அப்படியே இருக்க வேண்டும் என்று மாத்திரம் சொல்லவில்லை. அதனுடைய குற்றங்களைக் களைந்து, பரிசுத்தப் படுத்தி அற்குப் புத்துயிர் அளித்து "நாளுக்கு நாள் பெருகிவரும் விஞ்ஞான அறிவை எதிர்த்து" சமாளிக்கக் கூடிய மதமாக ஆக்கவேண்டும் என்று சொல்லுகிறார். (இது 1910ம் வருஷத்திய 4வதுஜர்மன் பதிப்பு 238வது பக்கம்) இதன் அர்த்தம் என்னவென்றால் இவர் நேரிடையாக வேண்டுமென்று கொள்ளைக்காரருக்கு உதவி செய்து பழய அழுகிப் போன மதக் கொள்கைகளை—புதுமாதிரியில் மோசடியான வெறுக்கத்தக்க வழியில் மதக் கொள்கைகளை புகுத்த வெளிப்படையாக உதவியாய் இருக்கிறார் என்பதாகும். இதனால் Drews டுருவ்ஸ் எழுதிய புஸ்தகத்தை மொழி பெயர்த்திருக்கக்கூடாது என்று நாம் சொல்ல வரவில்லை. ஆனால் பின் என்ன இதன் அர்த்தம் என்றால், கம்யூனிஸ்ட் கக்ஷியைச் சேர்ந்தவர்களும் நிரந்தர பிரகிருதி வாதிகளும் பணக்கார வகுப்பில் முற்போக்காளர்களா யுள்ள பகுதியோடு ஓரளவு ஒத்துழைத்தபோதிலும் அந்தப் பகுதியார் பிற்போக்காளர்களாய் மாறுகிற காலங்களில் அவர்களை தாட்சண்யமில்லாமலும், இடைவிடாமலும் பொது மக்களுக்கு வெளிப்படுத்திக்காட்டி விடவேண்டும் என்பதுதான். மேலும் நாம் சொல்லுவதின் கருத்து என்னவென்றால் பதினெட்டாவது நூற்றாண்டில் உண்மையில் புரட்சிவேகம் கொண்டிருந்த பணக்காரவகுப்பின் தற்காலத்திய பிரதிநிதிகளோடு ஒத்துழைக்க மறுப்பதும் தயங்குவதும், மார்க்ஸ் உடைய கொள்கைகளையும் பிரகிருதிவாதக் கொள்கைகளையும்

காட்டிக்கொடுத்ததாகும். ஏனென்றால் தற்காலம் மதத்தின் பெயரால் வியாபித்திருக்கும் அந்தகாரத்தோடு நாம் தொடங்கியிருக்கும் யுத்தத்தில் Drews டுரீவ்சைப் போன்றவர்களின் கூட்டுறவு ஏதாவது ஒருவழியில் நமக்கு வேண்டியிருக்கிறது.

பத்திரிகைகள் நாஸ்த்திகத்திற்கு இடம்தரவேண்டும்.

"மார்க்ஸ் கொடியின் கீழ்" என்ற இப்பத்திரிகை நாஸ்திகப் பிரசாரத்திற்கு அதிக இடம்தரவேண்டும். நாஸ்திக நூற்களைப் பற்றிய குறிப்புகள் ஏராளமாக வெளியிடவேண்டும். இவ்விஷயத்தில் நம் கவர்ன்மெண்ட் வேலையில் ஏற்பட்டிருக்கும் குறைவுகளை இப்பத்திரிகை நிவர்த்திக்கவேண்டும்.

தற்கால பணக்கார வகுப்பின் சுயநலம், பணக்கார வகுப்பின் ஸ்தாபனங்கள் ஆகியவற்றிற்கும் தற்காலத்திய மதக் கூட்டங்கள், மதப்பிரசார சபைகள் ஆகியவற்றிற்தும் உள்ள ஒரு நெருங்கிய சம்மந்தத்தையும், ஒற்றுமையையும் நேரில் காணக்கூடியவண்ணம் திருஷ்டாந்தங்கள், உவமானங்கள் ஆகியவைகளுடன் விளங்கும் புஸ்தகங்களையும், சில்லரை வெளியீடுகளையும் வெளியிட்டு உபயோகப்படுத்தவேண்டியது முக்கியமாகும்.

அமெரிக்காவில் உள்ள ஐக்கிய நாடுகளைப்பற்றிய விஷயங்கள் மிகவும் முக்கியமானவை. ஆனால் அவைகளின் மூலம் சர்க்கார் அதிகார தோரணையாக மதத்திற்கும், முதலாளிகளுக்கும் ஏற்படுத்திஇருக்கும் சம்மந்தம் வெளிப்படாது என்றாலும் அவைகளில் இருந்து மென்ஸ்விக் கட்சியாரும், சோஷியலிஸ்ட் புரட்சிக்கட்சியாரும், (Anarchist — அனார்க்கிஸ்ட்) எதேச்சைவாதிகளும்மண்டி இட்டுவணங்கும் "தெய்வ"மாகிய நவீனஜனநாயகம் என்பது பணக்காரர்களுக்கு எது நன்

மையைத்தருமோ அதைக் கோவில் மேடையிலிருந்து பிரசங்கம் செய்யும் உரிமை தவிர வேறில்லை என்பதுவிளங்குகிறது. பணக்காரர்களுக்கு எப்படிப்பட்ட பிரசங்கங்கள் நன்மை பயக்குமென்றால் மதப்பற்றையும், அஞ்ஞானத்தையும், மூடநம்பிக்கையையும் அதிகப் படுத்தத்தக்கதும் பாட்டாளிகளை (ஏழைகளை) கொள்ளையடிப்பவர்களை முதலாளிகள் ஆதரிக்கக் கூடியதான பிற்போக்கான எண்ணங்களைப்பரப்பத் தக்கதுமான பிரசங்கங்களேயாகும்.

தீவிர பிரகிருதிவாத பிரசாரம்செய்ய எண்ணும் இப்பத்திரிகை நாஸ்திகப் பிரசுரங்களைப்பற்றிய மதிப்புரைகளை வாசகர்களுக்கு வழங்குவதோடு, அந்தந்த வாசகர் கூட்டங்களின் சக்திக்கும், அறிவுக்கும் தக்கபடி,யார் யார் எந்தெந்த புஸ்தகங்களை, எப்படி எப்படி படிக்கவேண்டும் என்பதையும் குறிப்பிடுமென்று நம்புகிறோம். இப்பத்திரிகை இவ்விஷயத்தைப் பற்றி என்ன என்ன புஸ்தகங்கள்வெளியிடப்பட்டிருக்கின்றனவென்றும், இன்னும் வெளியிடப்பட வேண்டியவை என்ன என்ன பாக்கியிருக்கின்றனவென்றும், குறிப்பிடுவதோடு, மொழிபெயர்ப்புகளில் அசம்பாவிதமானவற்றை நீக்கி கூடியவரை சரியானவற்றை மாத்திரம் சிபார்சுசெய்யும் எனவும் நம்புகிறோம்.

தீவிர பிரகிருதிவாதிகளின் கடமை.

கம்யூனிஸ்ட் கட்சியைச்சேர்ந்த பிரகிருதிவாதிகளுடன் ஒத்துழைப்பதோடு நமது தீவிர பிரகிருதி வாதிகளுடைய கடமைநின்றுவிடவில்லை. இதை விட முக்கிய கடமை என்னவென்றால் தற்கால விஞ்ஞான அறிவுஆராய்ச்சியாளரின் பிரதிநிதிகளில் பிரகிருதிவாதத்தின் சார்பிலிருந்துகொண்டும், படித்தகூட்டத்தார்களென்று சொல்லிக்கொள்பவர்க

ளில் நவீனதத்துவவாதிகளின் ஆத்மார்த்த வாதத்திற்கும், சந்தேக வாதத்திற்கும் எதிரிடையாக பிரகிருதிவர்தக்கொள்கைகளை ஸ்தாபிக்கத்தயங்காமல் இருப்பவர்களோடு பூரணமாக ஒத்துழைப்பதாகும்.

"மார்க்ஸ் கொடியின் கீழ்" என்ற பத்திரிகையின் ஒன்று இரண்டு இதழ்களில் Enstein இன்ஸ்டீன் உடைய Relatirity ரிலேடிரிட்டி என்ற கொள்கையைப்பற்றி, டிமிரியாசாவோ Timiryasav எழுதி இருக்கும் கட்டுரையில் இருந்து மேலே நாம் இரண்டாவ தாகக்கூறி இருக்கும் ஒத்துழைப்புகூட இப் பத்திரிகையின் மூலம் ஏற்பட்டுவிடும் என்று நம்பவும் இடமிருக்கிறது. இதைப்பற்றி நாம் அதிக கவலை எடுத்துக்கொள்ளவேண்டும். தற்காலம் விஞ்ஞான சாஸ்திரத்தில் ஏற்படும் முக்கிய மாறுதல்களின் பயனாகதத்துவ ஞானத்தில் பல பிற்போக்கான கொள்கைகளும் போக்குகளும் தலைஎடுத்து இருக்கின்றன என்னும் விஷயத்தையும் நாம் மனதில் இருத்த வேண்டும். ஆகையால் விஞ்ஞான அறிவில் கடைசியாக ஏற்பட்டிருக்கும் புரட்சியினால் முன்னுக்கு வந்திருக்கும் விஷயங்களை நாம் சோதித்து அறிவதோடு, இந்த தத்துவ ஞானப்பத்திரிகையின் மூலமாக இவ்வேலையைச் செய்யும்படி விஞ்ஞான அறிவாளிகளைநாம் தூண்ட வேண்டியது மிகவும் முக்கியமான கடமையாகும். இப்படி நாம்செய்யாவிட்டால் நமது தீவிர பிரகிருதிவாதமானது தீவிரமாகவும் இருக்காது. "மார்க்ஸ் கொடியின் கீழ்" என்னும் பத்திரிகையின் முதல் இதழிலேயே டிமிரிசாயாவோ Timiriyasv எல்லா தேசங்களிலும் பணக்கார படித்த கூட்டத்தின் பிரதிநிதிகளில் பெரும்பாலோர் Enstein இன் உடைய கொள்கையையே நம்பி இருப்பதாகவும் ஆனால் அவரை (Enstein) பொருத்தமட்டில் அவர் பிரகிருதி

L—4.

வாதத்தை நேரிடையாகத்தாக்க வில்லை என்றும் எடுத்துக் காட்டி இருக்கிறார். இந்தஉண்மை, அவரை (Enstein ஐ) பற்றி மாத்திரமல்லாமல் பத்தொன்பதாவது நூற்றாண்டு கடைசியில் இருந்து நாளதுவரையில் கிளம்பிவிஞ்ஞான அறிவை சீர்திருத்தம் செய்த பெரியார்களில் பெரும் பாலானவர்களைப் பற்றியும் புலப்பட்டிருக்கிறது.

கவனிக்க வேண்டும்.

ஆனால் இவ்விதமான ஆபத்துக்களில் இருந்து புத்திசாலித்தனமாகத் தப்ப வேண்டுமானால் நாம் ஒரு விஷயத்தை உணர வேண்டும், அதாவது பணக்காரத் தன்மையின் ஆதிக்கத்தை எதிர்க்கவும், பணக்காரத்தத்துவக்கொள்கைகளை மறுபடியும் ஸ்தாபிக்க முயலுவதைத்தடுக்கவும், போரிடத்தக்க விஞ்ஞான அறிவும் பிரகிருதிவாதமும் கொண்டவர்கள் தங்களுக்கென ஒரு தத்துவஞான அடிப்படையை ஏற்படுத்திக் கொண்டாலொழிய சமாளிக்க முடியாது. இந்தப் போரில் இறங்கி வேலை செய்து வெற்றிபெற முயலுபவர் விஞ்ஞான ஆராய்ச்சியான நவீன பிரகிருதி வாதியாய் இருந்தாக வேண்டும்.

மார்க்சை பிரதிநிதியாகக் கொண்ட பிரகிருதிவாதக் கூட்டத்தில் நிதானத்துடன் சேர்ந்திருக்க வேண்டும். அதாவது தத்துவப் பிரகிருதிவாதியாய் (Dialectical Materialists) விளங்க வேண்டும். இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு "மார்க்ஸ் கொடியின் கீழ்" என்றபத்திரிகைக் காரியாலயத்தைச் சேர்ந்தவர்கள் யாவரும் (Hegal) ஹெகல் எழுதிய தத்துவஞான நூற்களைப் பிரகிருதி வாதியினுடைய நிலையில் இருந்து கொண்டு ஒழுங்காகப் படித்துவர வேண்டும். அதாவது மார்க்ஸ் (Capital) கேபிடல் என்ற புஸ்தகத்தில் எந்த தத்துவ ஞானத்தை அனுபோகத்தில், உபயோகத்தால் இன்

N33
TAMIL NADU ARCHIVES LIBRARY No. 113094

றையதினம் கிழக்கு தேசங்களில், அதாவது ஜப்பான், சீனா, இந்தியா முதலிய பல நூற்றுக்கணக்கான கோடி மக்கள்-உலக ஜனத்தொகையிலேயே பெரும்பகுதியாக இருந்தும் இது வரையில் சற்றும் சலனமில்லாமல் சரித்திரபூர்வமாகவே தூங்கிக்கொண்டிருந்து, அந்தத்தூக்கத்தின் காரணமாக ஐரோப்பாவில் முன்னணியிலுள்ள பல தேசங்களின் அரசாங்கங்களின் முற்போக்குகள் தடைப்பட்டு அழுகவும், மற்றும் இந்த கீழ் தேசத்தில் புதிய புதிய வகுப்பு மக்கள் உயிர்பெற்று போருக்குக் கிளம்பவுமாயிருப்பதைக் காணும் இந்த சந்தர்ப்பத்தில் நாம் தினந்தோறும் எந்த மார்க்ஸ் உடைய கொள்கைகளை சரியென நிதரிசனமாகக் காண்கிறோமோ அந்த தத்துவ ஞானத்தையே படித்து வரவேண்டும். Hegal ஹெகல் உடைய தத்துவ ஞானத்தை இவ்விதமாகப் படித்துக் கிரகிப்பதும் பிரசாரம் செய்வதும் நிச்சயமாகவே மிகவும் கஷ்டமான காரியம் என்பதை ஒத்துக் கொள்ள வேண்டும்.

சும்மா இருப்பவன்தான் பிசகு செய்ய மாட்டான்.

ஆரம்பத்தில் பிசகுகள் ஏற்பட்டுத்தான் தீரும். ஆனால் ஒரு காரியமும் செய்யாமல் சும்மா இருப்பவர்கள் தான் பிசகு செய்யாமல் இருக்கமுடியும். ஹெக்கில்உடைய தத்துவஞானத்திலுள்ளபிரகிருதிவாதத்தை மார்க்ஸ்எப்படி எடுத்துக்கையாண்டாரோ அப்படியே அதை அஸ்திவாரமாக வைத்துக்கொண்டு இந்ததத்துவத்தின் நாலா பாகங்களை நாலா பக்கங்களில் இருந்தும் நாம் மேல் கட்டடம் கட்ட வேண்டும். இந்தப்பத்திரிகை ஹெக்கிலினுடைய முக்கிய நூல்களிலிருந்து சிறு பாகங்களை வெளியிட்டு அவற்றில் அடங்கிக்கிடக்கும் பிரகிருதிவாதத்தின் அர்த்தங்களை விளக்கிக் காட்டுவதோடு ஹெக்கலினுடைய தத்துவத்தை மார்க்ஸ் எப்படி எடுத்துக்கொண்டார் என்பதையும்

ஹெக்கலுடைய தத்துவம் பொருளாதார அரசியல் துறைகளில் எப்படி வியாபிக்கின்றது என்பதைஅனேக அனுபோக திருஷ்டாந்தங்கள் மூலமாக எடுத்துக் காட்ட வேண்டும். தற்கால சரித்திரத்திலிருந்தும் அதிலும் முக்கியமாக தற்கால ஏகாதிபத்திய யுத்தங்கள் புரட்சிகள் ஆகிய இவைகளில் இருந்தும் இம்மாதிரியான உதாரணங்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. "மார்க்ஸ் கொடியின் கீழ்" என்ற பத்திரிகையின் ஆசிரியர்களும் மற்றும் காரியஸ்தர்களும் "ஹெக்கலினுடையதத்துவஞானத்தை ஆதரிக்கும் பிரகிருதிவாதிகள் சங்க"மாக விளங்க வேண்டு மென்பது எனது அபிப்பிராயம். தற்காலத்திய விஞ்ஞான வாதிகள் விரும்பவும், நாமும் அவர்கள் விருப்பப்படி அவர்களுக்கு உதவி செய்யவும் கற்றுக் கொண்டோமானல் விஞ்ஞான அறிவில் ஏற்பட்ட புரட்சியின் காரணமாக முன்னுக்கு வந்திருக்கும் பல தத்துவவினுக்களுக்கு ஹெக்கலுடைய தத்துவ ஞானத்திற்குப் பிரகிருதிவாதிகள் சொல்லும் உரையில் அனேக விடைகள் காணலாம். இந்த வினுக்களே பணக்கார நவீனங்களைக் கண்டு மோகிக்கும்சில அறிவாளிகளேயும் பிற்போக்காளர்கள் கூட்டத்திற்கு மெதுவாகக் கொண்டு போய் சேர்த்து விடுகின்றன.

நாம் இந்த வேலையை மேற்போட்டுக் கொண்டு ஸ்திரமாகச் செய்து முடிக்கா விட்டால் பிரகிருதிவாத மென்பது ஒரு நாளும் தீவிர பிரகிருதிவாதமாக மாறாது என்பதோடு Schedrin ஷிட்ரின் சொன்னமாதிரி எதிரியை மேல் விழுந்து தாக்காமல் தன்னைத்தாக்க எதிரிக்கு இடம் விட்டு விட்டதாகும். அன்றியும் நாம் இவ்வேலையைச் செய்யா விட்டால் விஞ்ஞான ஆராய்ச்சி யாளர்கள் தங்கள் தத்துவத்தில் விதிவிலக்குகள் ஏற்படுத்துவதில் முன்னையைப் போலவே ஆதரவு

அற்றவர்களாகி விடுவார்கள். ஏனென்றால் விஞ்ஞான அறிவு வெகு வேகமாக முற்போக்கடைந்து அதனுடைய எல்லா பாகங்களிலும் பெரும் புரட்சியான மாறுதல்கள் ஏற்பட்டிருப்பதால் இதற்கு ஏற்றாப்போல்தத்துவக் கொள்கைகள் ஏற்படுத்திக் கொள்வது அவசியமாகிறது.

4-ம் அத்தியாயம்.

மதம் எதற்குப் பிரயோஜனம்

——-O:——

மனச் சாக்ஷி

Stakhovich ஸ்டாகோவிச்என்ற ஓர்யோல் மாகாணப் பிரபுக்களின் தலைவர் ஒருவர் ஒரு பாதிரிகளின் மகாநாட்டில் "ஒவ்வொரு மனிதனுக்கும் சட்ட பூர்வமாக மனச்சாட்சி உரிமை ஏற்படுத்த வேண்டும்" என்று பேசியவுடன் அதனால் ஏற்பட்ட ஓர் பெரும் பரபரப்பு வாசகர்களுக்கு ஞாபகமிருக்க லாம். கன்சர்வட்டிவ் கட்சிப் பத்திரிகைகள் Maskvskiye மகஸ்கோவிஸ்கயா பத்திரிகையைப் பின்பற்றி Stakhovich க்கு எதிராக உக்கிரமான பிரசங்கம் செய்து வருகின்றன. திட்டுவதற்குப் போதிய வார்த்தைகள் கூட அவைகளுக்கு அகப்படவில்லை. ஓர்யோல் மாகாணத்துப் பிரபுக்கள் ஸ்டா கோவிச்சை மறுபடியும் தங்கள் தலைவராகத் தேர்ந்தெடுத்த தற்காக அவர்கள் அனைவரும் ராஜத்துரோகம் செய்த குற்றம் சாட்டப்பட வேண்டியது அவசியம் என்று சொல்லும் வரை யில் வந்து விட்டன. இந்த மறு தேர்தல் மிகவும் முக்கியமா னது. இதன் மூலம் போலீசாருடைய எதேச்சாதிகாரத்திற் கும் அக்கிரமத்திற்கும் விரோதமாக ஆர்பாட்டம் செய்ய பிர புக்களுக்கு ஓரளவு இடம் கிடைத்தது. Moskoviskye Vyedosti "மாஸ்கோவிஸ்கியா வைடோஸ்டி" என்ற பத்தி ரிகை பின்வருமாறு எழுதுகிறது. அதாவது:—

"ஸ்டாகோவிச்சினுடைய பெயர் விளம்பரமாகி எங்கும் பிரஸ்தாபப்பட்டதற்கு காரணம் அவர் "பிரபுக்கள் தலைவர்" என்ற காரணத்தால் அல்ல. மற்றெதனாலென்றால் சந்தோஷ கேளிக்கையிலேயே எப்போதும் ஈடுபட்ட ஸ்டாகோவிச்

பொழுது போக்குவதற்கு நல்ல சிநேகிதர்—வேடிக்கையாகப் பேசக்கூடியவர் என்ற காரணங்களுக்காகத் தான்” (என்று 1901 டிசம்பர் 18 தேதி அந்தப் பத்திரிகையில் “ஸ்டாகோவிச்சுக்கு யார் ஜவாப்தாரி” என்ற தலைப்பெயரின் கீழ் எழுதப்பட்டிருந்தது.)

இப்பத்திரிகை சொல்லுவது வாஸ்தவமானால், அதிகாரிகளையே ஆதரித்து வரும் கூட்டத்தாருக்கு கெட்ட காலம் பிறந்து விட்டது என்பது உறுதி. ஏனென்றால் சந்தோஷம் அநுபவிப்பதிலேயே பொழுது போக்கும் நிலச்சுவான்தார்கள் கூட மனச்சாட்சியின் உரிமையைப்பற்றிப் பேச ஆரம்பித்து விட்டார்களானல் பாதிரிகள் போலீசார்கள் ஆகியவர்களின் செயல்கள் எல்லை கடந்து போயிருக்க வேண்டும் அல்லவா ?

நிற்க, மேலும் அப்பத்திரிகை கூறுவதாவது: —

“தங்களைப் படித்தவர்களாகச் சொல்லிக் கொள்ளும் வீணர்கள் அடங்கிய கூட்டத்தார்களே ஸ்டாகோவிச் போன்றவர்களைத்தூண்டி விட்டு அவரை கைகொட்டி ஆதரிக்கிறார்கள். இக்கூட்டத்தாருக்கும் நமது பரிசுத்தமான வைதீக மதத்தின் நன்மைக்கும்—நமக்கு வெகு நாளாக ஏற்பட்டிருக்கும் மனப்பான்மைக்கும் யாதொருவித சம்பந்தமும் இல்லை” என்று எழுதுகிறது.

இந்த வார்த்தைகளிலிருந்தும் எதாச்சாதிகாரத்தையும், வைதீக மதத்தையும், தேசீயத்தையும் ஆதரிக்கும் கூட்டத்திற்கு கேடுகாலம் பிறந்து விட்டதென்பது புலப்பட்டு விட்டது. போலீஸ் ஆட்சி மிகுந்த நம் ஏதேச்சாதிகாரத்தின் யோக்கியதைமதத்தைக்கூட ஜெயில் வாழ்க்கையாகச்செய்து விட்டது.

எதற்காக மதம்.

மேலும் தங்களுக்கென மதக்கொள்கைகள் எதுவுமின்றி சுயநலத்தை உத்தேசித்து மதத்தைக்காப்பாற்ற முன்வரும்

ஸ்டாகோவிச் போன்றவர்களை இந்த நாடற்ந்தேசிய மதத்தைப்பற்றி வேண்டா வெறுப்பாயிருக்கவும் செய்து விட்டது.

மேலும் இப்பத்திரிகை கூறுவதாவது:—

"இந்த மாய்கையின் (மதத்தின்) காரணத்தால் தான் நாம் பாபத்தைக்கண்டு பயந்து நீக்குகிறோம். நம்முடைய கடமைகள் எவ்வளவு கடினமாயிருந்தாலும் மனம் நோகாமல் செய்து முடிக்கிறோம். மற்றும் நமது துக்கத்தையும் வறுமையையும் சந்தோஷமாய் அனுபவிக்கவும், வெற்றியும் அதிர்ஷ்டமும் நேரிட்டாலும் நாம் மமதை கொள்ளாமல் இருக்கவும் வேண்டிய பலமும் தைரியமும் (மதத்தின் மூலமாய்) நமக்குக் கிடைத்திருக்கிறது" என்பதாகும்.

இந்த வாக்கியத்திலும் மத உண்மை வெளிப்பட்டு விட்டது. வைதீக மதத்தை இவர்கள் விரும்புவதன் காரணம் துரதிஷ்டம், அதாவது கஷ்டங்கள்வரும் பொழுது நோகாமல் பொறுத்துக்கொள்ள மக்களுக்கு மதம் கற்றுக்கொடுக்கிறது என்பதற்காகத்தான்- ஆகவே ஆட்சி செலுத்தும் வகுப்பாருக்கும் மற்றவர்களைத் துன்புறுத்துபவருக்கும் இந்த மதக் கோட்பாடு எவ்வளவு அனுகூலமான— லாபகரமானதாய் இருக்கிறது என்பதை யோசித்துப்பாருங்கள். மிகச்சிறு கூட்டத்தார் செல்வத்தையும் அதிகாரத்தையும் உயர்நிலையையும் அனுபவிக்கும்படியும் பெருவாரியான மக்கள் எப்பொழுதும் வறுமையினாலும், சரீரப் பிரயாசத்தினாலும் கஷ்டப்படும்படியாகவும் அமைக்கப்பட்டிருக்கும் ஒரு சமூக வாழ்க்கைத் திட்டத்தில் "லாப மனுபவிக்கும் கூட்டத்தாருக்கு சாதகமாக இருந்துகொண்டு இவ்வுலகத்தில் நரகவேதனை அனுபவிக்கும் மக்களைப்பற்றி எவ்வித புகாரும் செய்யாமலிருந்தால் மேலுலகத்தில் மேன்மையான சொற்கபதவி அளிக்கப்படும்"

என்ற கருத்தை போதனை செய்யும் மதத்தினிடம் அந்த லாப மனுபவிக்கும் கூட்டத்தாருக்கு பற்றுதல் இருப்பது சகஜமே யாம். மாஸ்கோவியட்ஸ் கியா பத்திரிகை தனக்கு ஏற்பட்ட ஆத்திரத்தில் அதிகப்பிரசங்கித்தனம் செய்து தன்னை அறியா மலேயே (எதற்காக மதம் என்ற) உண்மையைக்கக்கிவிட்டது. மேற்கொண்டு அப்பத்திரிகை கூறுவது:—

"இந்த மாய்கையின் (மதத்தின்) காரணத்தாலேயேதான் தாங்கள் வேண்டிய மட்டும் சாப்பிடவும், சஞ்சலமின்றித் தூங் கவும், சந்தோஷத்தோடு ஜீவிக்கவும் முடிகிறது என்பதை இந்த ஸ்டாகோவிச் கூட்டத்தார் உணரவில்லை" என்று கூறு கின்றது.

இதுதான் கடைந்தெடுத்த உண்மையாகும். அனுபோ கத்திலும் அப்படித்தான் இருக்கிறது. இம்மாதிரி மதப்பைத் தியங்கள் பொதுஜனங்களிடையே ஏற்படுவதால்தான் ஸ்டா கோவிச் அப்போமாவ் (இந்த பெயர்கள் கொண்ட கதைகளின் கதாநாயகர்கள் முழுச்சோம்பேரிகள்) போன்றவர்களை சஞ்சல மின்றித் தூங்கவும் நமது முதலாளிகள் எல்லாம் பொது மக் கள் உழைப்பில் ஜீவிக்கவும் முடிகின்றது. இதே உண்மை யைத்தான் "மாஸ்கோவிஸ் கியாவியடோ மோஸ்ட்டி" பத் திரிகைக்கும் பொருத்தலாம். எவ்வளவுக்கு எவ்வளவு மதப் பிடிவாத குணங்கள் மாறி சோஷியலிஸ்ட் (சமதர்ம) அறிவுக்கு இடம் ஏற்படுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு தொ ழிலாளர்களுடைய வெற்றியும் விடுதலையும் சமீபித்துக்கொ ண்டுவர இடம் ஏற்படுகிறது. அந்த ஜெயத்திலிருந்துதான் தற்கால சமூக வாழ்வில் தாழ்த்தப்பட்ட மக்கள் முதலாளி கூட்டத்தாரால் அடிமைப்படுத்தப்பட்ட மக்கள் ஆகியவர்கள் விடுதலை பெருவார்கள்.

5-ம் அத்தியாயம்.

லியோ டால்ஸ்ட்டாய்.

——:0:——

லியோ டால்ஸ்ட்டாய் ருஷிய புரட்சிக்கு ஒரு கண்ணாடி போன்றவர். இந்த சிறந்த ஆசிரியரை அவர் புரிந்து கொள்ளாததும், சற்றும் கலந்துகொள்ளாமல் விலகி நின்றதுமான ஒரு புரட்சியோடு சம்மந்தப்படுத்துவது அதிசயமாகவும் புதிதாய் இட்டுக்கட்டி கர்ப்பித்த ஒரு ஜோடிப்பு போலவும் தோன்றலாம். உள்ளது உள்ள மாதிரியே பிரதிபிம்பிக்காத எதையும் கண்ணாடி என்று சொல்லுவது தகாது. ஆனால் நமது புரட்சி வெகு சிக்கலான விஷயமாகும். இந்தப்புரட்சியில் நேரில் ஈடுபட்டு பங்கெடுத்துக்கொண்டவர்களில் சில வகுப்பார்கள் என்ன நடக்கிறது என்பதையே தங்கள் மனதுக்கு புரிந்துகொள்ளாமல் அனுபவத்தில் சரித்திர பூர்வமாக தங்களுக்கு ஏற்பட்ட கடமைகளையும் செய்யாமல் கை நழுவ விட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் ஒரு சிறந்த ஆசிரியர் எழுதிவந்த நூற்களில் மேற்படி புரட்சியின் சில முக்கிய அம்சங்களாவது பிரதிபிம்பித்துத்தீரும். சட்டத்திற்கு அடங்கி வெளியிடப்படும் ருஷியப் பத்திரிக்கைகளில் டால்ஸ்ட்டாய் பிறந்த 80 வது வருஷ கொண்டாட்டத்தை யொட்டி பல கட்டுரைகளும் கடிதங்களும் குறிப்புகளுமாய் நிறைந்து கிடக்கின்றன.

டால்ஸ்ட்டாய் விளம்பரம்.

ஆனால் அவைகளில் ருஷியப் புரட்சியின் குணங்கள், அதைக்கொண்டு செலுத்தும் சக்திகள் ஆகிய இவைகளின் நிலையில் இருந்து டால்ஸ்ட்டாயின் நூற்கள் எவைகளையும்

சோதித்துப் பார்த்து எழுதப்படவில்லை. இந்தப் பத்திரிகைகளில் எல்லாம் சகிக்க முடியாத வெளி வேஷப்பிரசாரங்களே நிரம்பிக்கிடக்கின்றன. இந்த வேஷங்கள் இரண்டு விதப்படும். முதலாவது "உத்தியோக தோரணையில்" வெளிவருவது. இரண்டாவது "தாராள நோக்கத்துடன்" என்று வெளி வருவது. முதலாவது கூட்டம் வேஷம் போடுவது, அதாவது சமயத்துக்குத் தகுந்தபடி பண ஆசை கொண்டு கூலிக்கு எழுதுகிறவர்களால் எழுதப்படுவது. நேற்றைய தினம் இவர்களுக்கு டால்ஸ்ட்டாயைக் கண்டிக்கும்படி உத்திரவு இடப்பட்டது. இன்றையதினம் டால்ஸ்ட்டாய் ஒரு தேசபக்தரென்றும், மகான் என்றும் ஐரோப்பியர் முன்னிலையில் அவருக்கு மரியாதை செலுத்த வேண்டும் என்றும் உத்திரவிட்டது. ஆனால் இவர்களைப்பற்றியும் இதற்காக இவர்களுக்கு எவ்வளவு கூலி கிடைக்குமென்பதுபற்றியும் பொது ஜனங்கள் ஒவ்வொருவருக்கும் தெரியுமாதலால் இவர்கள் பேச்சையும் எழுத்தையும் கேட்டு யாரும் ஏமாந்துபோகமாட்டார்கள்.

ஆனால் இரண்டாவதான "தாராள நோக்கத்தோடு" என்பதாக எழுதுகிறவர்கள் போடும் வேஷமானது இன்னும் சுணுபிதமான முறையில் அதாவது தேசியம் ஆத்மார்த்தம் என்னும் தலைப்பில் போடப்படுவதால் அது சற்று அதிகமான கெடுதலையும் ஆபத்தையும் விளைவிக்கக்கூடியதாய் இருக்கிறது. ரீச் Rech கூட்டத்தைச்சேர்ந்த Cadet Bala leikins கேடட் பாலாலிகின்ஸ் ஐக்கேட்டோமானுல் இவர்களுக்கு டால்ஸ்டாய் இடம் இருக்கும் அன்பு ஆர்வத்துடன் நிறம்பி இருக்கிறதா என்பது வெளிப்படும். உண்மையில் அவர்கள் வேண்டுமென்று போடும் கூச்சலும் "கடவுளைத் தேடும் பெரியார்" (மகாத்மா) என்றெல்லாம் பெருமையான

ஆடம்பர வார்த்தைகளை அடுக்குவதும் எல்லாம் வெறும் வேஷமேயாகும். ஏனென்றால் ருஷிய தாராளக்கட்சியைச் சேர்ந்தவர்கள் டால்ஸ்டாயின் கடவுளை (கொள்கைகளை) நம்புகின்றவர்களுமல்ல. தற்கால சமூக அமைப்பைப்பற்றி டால்ஸ்டாய் கூறுகிற குறைகளையும் அதை நிவர்த்திப்பதையும் ஒத்துக்கொள்ளுகிறவர்களுமல்ல. இவர்கள் டால்ஸ்டாய் போன்ற பிரக்கியாதி பெற்றவர்களோடு சேர்ந்துகொள்வதெல்லாம் தங்களுடைய அரசியல் செல்வாக்கை அதிகப்படுத்திக்கொள்ளவும், தேசீய எதிர்க்கட்சியின் தலைமை ஸ்தானத்தில் தாங்கள் இடம் பெறவும்தானே யொழியவேறில்லை. டால்ஸ்ட்டாய் கொள்கைகள் ஒன்று விடாமல் முன்னுக்குப்பின் முரணானதற்கு என்ன காரணம் என்ற நேரடியான கேள்விக்கு இவர்கள் பதில் சொல்லாமல் வீண் கூச்சலிட்டும் ஆடம்பர வார்த்தைகளை அடுக்கியும் மக்களை ஏமாற்றி வருகிறார்கள். டால்ஸ்ட்டாயின் கொள்கையில் நம்முடைய புரட்சி கொள்கைகளில் எது குற்றமாக கருதப்படுகின்றது?

டால்ஸ்ட்டாய் முரண்பாடுகள்.

டால்ஸ்ட்டாயைச் சேர்ந்தவர்களுடைய நூற்களிலும், நோக்கங்களிலும், போதனைகளிலும்உள்ள முரண்பாடுகள் மிகவும் வெளிப்படையானவை. ஒரு பக்கத்தில் பார்க்கப்போனால் டால்ஸ்ட்டாய் ஒருபெரிய நூலாசிரியர், ருஷிய வாழ்க்கை நிலையை வருணிப்பதில் இணையற்றவர் உலகம் மெச்சும் முதல்தரமான புஸ்தகம் எழுதவல்லவர். மற்றொரு பக்கம் பார்க்கப்போனால் இவர் ஒரு நிலச்சுவான்தார். கிறிஸ்துவின் பெயரால் தன்னுடைய வாழ்க்கையை தத்தம் செய்தவர்.

ஒரு பக்கத்தில் சமூக அமைப்பிலிருக்கும் பித்தலாட்டங்களையும் கபடங்களையும் அழுத்தமாக, நேரடியாக, மனப்பூர்வ

மாக கண்டிக்கிறார். மற்றொரு பக்கத்தில் டால்ஸ்ட்டாயும் அவரைச் சேர்ந்தவர்களும் வெறி பிடித்தவர்கள் மாதிரி ஆடிக்களைத்து ருஷியாவில்படித்த கூட்டத்தார் செய்வது மாதிரி தங்களைப் பாவிகள் என்று கூறிக்கொண்டு எல்லோருமறிய மாரடித்துக் கொண்டு "நான் கெட்டேன், நான் பாவி, என்னுடைய ஆத்மாவை பரிசுத்தம் செய்து கொள்ள முயற்சிக்கிறேன்" நான் மாமிசம் சாப்பிடுவதில்லை, அரிசி சோறுதான் தின்கின்றேன் என்று கத்திக்கொண்டு திரிகிறார்கள்.

ஒரு பக்கம் பணக்காரர்கள் கொள்ளை அடிப்பதைத் தாக்ஷண்ணியமில்லாமல் கண்டித்தும், அரசாங்கத்தின் முரட்டுச் செயல்களை வெளிப்படுத்தியும், நியாயம் வழங்குவதென்பது வெறும் கேலிக்கூத்தென்று நிரூபித்தும், அரசாங்க ஊழல்களை வெளியாக்கியும் ஒரு சிலருக்கு செல்வம் பெருகி நாகரீகம் வளர்ந்து வரும் பொழுது வேலை செய்யும் பொது ஜனங்களுக்கு வறுமை மிகுந்து மிருகப்பிராயமும் துன்பங்களும் பெருகி வருவதான பரிதாபகரமான காட்சியை விளக்கிக்காட்டியும் டால்ஸ்ட்டாய் கூட்டத்தார் உழைத்து வருகிறார்கள்.

ஆனால் மற்றொரு பக்கத்தில் இவர்கள் அக்கிரமத்தை எதிர்த்து போராடக்கூடாதென்னும் பிற்போக்கான சத்தியாக்கிரகக்கொள்கையை பிரசாரம் செய்துவருகிறார்கள்.

ஒரு பக்கம் உண்மையைக் கடைப்பிடித்து வெளிவேஷங்களை உடைத்தெரிகிறார்கள். மற்றொரு பக்கம் இவர்கள் உலகத்திலேயே மிகவும் கேடுகெட்ட கபடமாகிய மதத்தை ஆதரித்து சர்க்கார் நியமித்த பாதிரிகளை நீக்கிவிட்டு "மனப் பூர்த்தியாக நல்லொழுக்கத்தை" ஒப்புக்கொண்ட பாதிரிகளை ஏற்படுத்தவேண்டுமென்று சொல்லுகிறார்கள். இவர்கள் மிகவும் தந்திரமாக நடந்துகொள்ளக்கூடியவர்களான வெறுக்கத்தக்க

பாதிரித்தனத்தை ஏற்படுத்தப்பார்க்கிறார்கள். நவோராஸ்டாவ் "ருஷியாவில் வாழ்வது யார்" என்ற கவியில் ருஷியாவில் ஒரு பகுதி சுகம் அநுபவிப்பதையும் மற்றொரு பகுதி துன்பம் அநுபவிப்பதையும்பற்றி

"நீ வறுமைப் பட்டாய்!
நீ செல்வம் பெருக்கினாய்!!
நீ வலிமைபெற்றாய்!!!
நீ ஆதர வற்றாய்!!!!"

என்று கூறியதில் உண்மை இருக்கின்றது. இம்மாதிரி முரண்பாடுகளுக்கிடையில் அகப்பட்ட டால்ஸ்டாய்க்கு தொழிலாளர் இயக்கத்தையாவது சோஷியலிசத்திற்காக ஏற்பட்ட தொழிலாளர் போராட்டத்தில் தொழிலாளர் இயக்க வேலையையாவது, ருஷிய புரட்சியையாவது, மனதில் அர்த்தம் செய்து கொள்ள முடியவில்லை. ஆனால், இம்மாதிரியான டால்ஸ்டாய் நோக்கங்களிலும் போதனைகளிலும் ஏற்பட்ட முரண்பாடுகள் தற்செயலாய் ஏற்பட்டவையல்ல. இவைகள் ருஷிய வாழ்க்கையின் பத்தொன்பதாவது நூற்றாண்டின் கடைசி முப்பது வருஷங்களில் ஏற்பட்ட முரண்பாடுகளின் தோற்றங்களாகும். அந்தக் காலத்தில் பழய நாட்டாண்மை ஆட்சியில் இருந்து வந்த கிராமங்களில் அப்பொழுதுதான் சுவந்தை முறை (அடிமை முறிப்பத்திரம்) நீக்கப்பட்டது. உடனே முதலாளிகளும் அரசாங்கமும் அக்கிராமங்களில் புகுந்து பல வந்தம் செய்யவும், கொள்ளை அடிக்கவும் ஆரம்பித்து விட்டார்கள்? இதற்கு முன் பல நூற்றாண்டுகளாக அநுஷ்டானத்தில் இருந்து வந்த குடியானவர்களது பொருளாதாரமும் குடியானவர்களின் வாழ்க்கையும் அஸ்திவாரமற்று வெகு விரைவில்வீழ்ச்சியடைந்தன.

டால்ஸ்டாயினுடைய நோக்கங்களில் உள்ள முரண்பாடுகளையெல்லாம் தற்காலம் தொழிலாளர் இயக்கம் சோஷியலிசம் என்னும் நிலைகளில் நின்று குறை கூறுவது தகாது (என்பதோடு, அவரது நிலையில் இருந்து பரிசோதிப்பது அவசியம் என்று நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் அத்துடன் நின்றுவிடக்கூடாது) ஆனால் பழய நாட்டாண்மை கட்டுப்பாட்டிலிருந்த கிராமங்களை முதலாளித்தனம் தாக்கியதால் பொது மக்கள் நாசமடைந்து அவரவர்கள் பூமியை விட்டு துரத்தப்பட்ட பொழுது அவர்களிடமிருந்து கிளம்பிய அழுகைக்குரல்களே டால்ஸ்டாயினுடைய கொள்கைகளில் எதிரொலிக்கின்றன. மனித வர்க்கத்தினுடைய விடுதலைக்கு புதிய வழிகள் கண்டு பிடித்த மகாத்மாவாக டால்ஸ்டாய் போடுகிற வேஷமெல்லாம் நகைப்புக்கு இடமாய் இருக்கின்றன. ருஷியாவிலும் வெளி தேசங்களிலும் தங்களை டால்ஸ்டாய் வாதிகள் எனக்கூறிக் கொண்டு டால்ஸ்டாய் கொள்கைகளில் ஏற்பட்ட இந்தக் குற்றங்களை மேலும் மேலும் மிகை படுத்தி அதை ஒரு மதமாகச் செய்ய எத்தனிப்பவர்கள் முழுதும் வெறுக்கத் தக்கவர்கள் ஆவார்கள்.

ருஷிய முதலாளிக் கூட்டத்தில் ஏற்பட்ட புரட்சிப் பெருக்கினால் கோடிக்கணக்கான ருஷியக் குடியானவர்கள் மனதில் உதித்த எண்ணங்களையும் குணங்களையும் வெளியிடுவதில் டால்ஸ்டாய்க்கு தனிப்பட்ட மகிமை உண்டு. ஏனென்றால் அவருடைய கொள்கைகள் மொத்தத்தில் கெடுதி விளைவிப்பனவாய் இருந்தாலும் அவைகளை ஒருங்கே ஆராய்ந்து பார்த்தால் நம்முடைய புரட்சியின் முக்கிய முதன்மையாகிய குடியான பணக்காரரும் சேர்ந்து உழைத்து புரட்சி உண்டாக்கிய விதம் வெளியாகும்.

இவ்விதமாக பொருள் படுத்திக் கொண்டோமேயானல் டால்ஸ்டாயின் அபிப்பிராயங்களில் உள்ள முரண்பாடுகள் எல்லாம் நம்முடைய புரட்சிக்கு பாடுபட்ட குடியானவர்களுடைய உழைப்பில் சரித்திர பூர்வமாக எழுதப்பட்ட நிர்ப்பந்தங்களின் எதிரொலிகள் என்பது ஏற்படும்.

ஒருபக்கத்தில் பல நூற்றுண்டுகளாகக் குடியானவர்களை கொடுமைப்படுத்தி வந்ததும், பிறகு சீர்திருத்தம் செய்வதாக பாசாங்கு செய்துகொண்டு பல வருஷங்களாக நாசம் விளைவித்ததும் காரணமாக ஜனங்களின் கோபமும் ஆத்திரமும் மலைபோல் வளர்ந்து வந்தது.

அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப் பட்ட கோவில்களையும், நிலச்சுவான்தார்களையும், நிலச்சுவான்தார அரசாங்கத்தையும் ஒழிக்கவும், நில சொந்தக்காரர்களுக்கு ஏற்பட்ட பாத்தியதைகளையும் முறைகளையும் அழிக்கவும், நிலத்திற்கு விடுதலை அளிக்கவும், போலீஸ் அதிகாரவர்க்கத்தால் உண்டாக்கப்பட்ட அரசாங்கத்திற்கு பதிலாக சுயேச்சையும் சமத்துவமும் அனுபவிக்கும் சிறு குடியானவர்கள் கொண்ட ஒரு சமூகம் சிருஷ்டி செய்யவும், ஆன இந்த எண்ணங்கள் எல்லாம் நமது புரட்சியில் வந்து சேர்ந்து அபூர்வமான ஒவ்வொரு முயற்சியிலும் ஊசி கோர்த்த மாதிரி வரிசையாகத் தோன்றுகின்றன. மேலும் நிச்சயமாக ஏற்படும் உண்மை என்னவென்றால் டால்ஸ்ட்டாயினுடைய நூற்களில் பதிந்து கிடக்கும் கொள்கைகள் நாம் மேலே கூறிய குடியானவர்களுடைய போராட்டத்தைச்சார்ந்தனவே யொழிய பின்வந்தவர்கள் அவருடைய கொள்கைகளிலிருந்து அந்தரத்தில் கட்ட எத்தனிக்கும் "கிறிஸ்தவ எதேச்சை வாதத்தை" சேர்ந்திருக்கவில்லை.

இதற்கு மாருக அந்த குடியானவர்கள் புதியவிதமான சமூக வாழ்க்கையை சிருஷ்டிக்க முயற்சித்தபோது அவர்கள்

மனதில் ஒரு உறுதியும் ஏற்படாமல் பழைய மதம் இவை களைக் கொண்டே சமூக வாழ்க்கையை அமைக்கவும், சுதந்திர யுத்தம் நடத்தவும், அந்த யுத்தத்திற்குத் தக்கதலைவர்களை ஏற் படுத்திக் கொள்ளவும், இந்த குடியானவர்கள் புரட்சியில் பணக் கார வகுப்பாரும் அவர்களைச் சேர்ந்த படித்த வகுப்பாரும் என்னவிதமாய் கலந்து கொள்வார்கள் என்பதைப்பற்றியும் பெரிய நிலச்சுவான்தாரர்கள் ஒழிக்கப்பட வேண்டுமானல் ஏன், சாருடைய ஆட்சியைப் பலவந்தமாய் வீழ்த்தவேண்டும் என்பதைப்பற்றியும் அது எப்படி முக்கியமான வேலை என்ப தைப்பற்றியும் எண்ணியிருந்தார்கள். குடியானவர்களுடைய பழைய அனுபோகத்தைக்கொண்டு நில சொந்தக்காரர்களையும் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களையும் வெறுக்கக் கற்றுக் கொண்டார்கள். ஆனல் மேலே குறிப்பிட்ட கேள்விகளுக்கு பதில் எங்கே என்று சொல்லிக்கொடுக்கப்பழைய அனுபோ கம் மாத்திரம் போதாது. நமது புரட்சியின் போது குடியா னவர்களில் ஒரு சிறுபகுதியார் மாத்திரம் தான் யுத்தத்திலும் புரட்சி ஸ்தாபனங்களுடனும் கலந்து கொண்டார்கள். அதி லும் சிறிய பாகம் தான் தங்கள் எதிரிகளைக் கொல்லவென்று ஆயுதமெடுத்து சாருடைய கூலிகளையும் நிலச்சுவான்தார்களை யும் அவர்களை ஆதரிப்பவர்களையும் ஒழிக்க முற்பட்டார்கள். குடியானவர்களில் பெரும்பாலரெல்லாம் தங்களுக்கு டால்ஸ்டாய் சொல்லிக்கொடுத்த மாதிரியே தொழுது கொண் டும், பிரார்த்தனைகள் நடத்திக்கொண்டும், ஒழுக்கத்தைப்பற்றி பிரசங்கங்கள் செய்து கொண்டும், ஆகாயக்கோட்டைகள் கட்டிக் கொண்டும், மனு எழுதிக்கொண்டும், மனுதாரர்களை அனுப் பிக்கொண்டும் பகல் கனவு கண்டு கொண்டும் இருந்தார்கள்.

இம்மாதிரி மற்ற சந்தர்ப்பங்களில் சாதாரணமாய் நடப் பதுமாதிரியே அரசியலில் கலக்க வேண்டாம் என்றும், அரசி

யலை உதரித்தள்ளவேண்டுமென்றும், அரசியலைப்பற்றிக் கவனம் செலுத்தாமல் இருக்கவும் அரசியலைப்பற்றி தப்பிதமாய் கற்பிப்பதுமாகிய இவ்விதமான டால்ஸ்ட்டாய் கொள்கைகளால் இக்கூட்டத்தில் ஒரு சிறு பாகமே மனப்பூர்வமாக புரட்சியில் இரங்கியிருக்கும் தொழிலாளர்களோடு சேரமுடிந்தது. மற்ற பெருவாரியானவர்கள் காடெட் என்று சொல்லப்பட்ட கொள்கையற்ற கூலிகளான பணக்கார படித்த கூட்டத்தாருடன் சேர நேரிட்டது. இந்த காடெட் கட்சியார் Trudoviks ட்ருடோவிக் கூட்டத்தில் இருந்து ஓடிப் போய் பிறகு மறுபடியும் அவர்களுடன் ராஜியாகி கட்சியில் நமது சிப்பாய்களின் செருப்பால் அடிக்கப்பட்டு துரத்தப்பட்டார்கள்.

டால்ஸ்ட்டாயின் எண்ணங்களில் கண்ணாடியில் பிரதிபிம்பம்போல் நமது குடியானவர்களின் எழுச்சியின் பலவீனங்களுடையவும் குறைகளுடையவும், சாயல்கள் தெரிகின்றது. அந்தச் சாயலில் நாட்டாண்மைக் கட்டுப்பாட்டிலிருந்த கிராமங்களின் வலுக் குறைவும், சிக்கன வாழ்வு நடத்தும் குடியானவன் வாழ்க்கையில் பதிந்திருக்கும் கோழைத்தனமும் வெளியாகின்றது.

1905, 1906 வருஷங்களில் நடந்த சிப்பாய் கலகத்தைக் கவனிப்போம். இந்தக் கலகத்தில் புரட்சி யுத்தத்தில் சேர்ந்தவர்கள் குடியானவர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே உள்ள வகுப்பைச் சேர்ந்தவர்கள். ராணுவத்தில் தொழிலாளர்களின் தொகை மிகவும் சிறுபாகமாகையால் ருஷியாவின் மற்ற பாகங்களில் ஏற்பட்ட அளவு ஒற்றுமை ராணுவத்தில் கிளம்பிய இயக்கத்திற்கு கிடைக்கவில்லை. மேலும்தொழிலாளர் சமூகம் முழுவதும் திடீரென சோஷியல் டிமாக்கரிட் கக்ஷியை சேர்ந்தபொழுது ஏற்பட்ட கக்ஷிவகுப்பு உணர்ச்சி

யும் ராணுவக்கலகத்தில் ஏற்படவில்லை. ஆனால் இந்தக் கலகங்கள் வெற்றி பெறாததற்குக்காரணம் ராணுவ உத்தியோகஸ்தர்கள் கலகத்தில் தலைமை வகிக்கவில்லை என்று நினைப்பது தவறாகும். நரோத்னயவோலயா காலத்திறகுப்பிறகு நமது புரட்சியில் ஏற்பட்ட தீவிர முற்போக்கைக் கவனித்தோமானால் இந்த முற்போக்குக்குக் காரணம் பழய தாராள நிலச்சுவான்தாரர்களும், "தாராள" உத்தியோகஸ்தர்களும் யாரை "அறிவற்ற மாடுகள்" என்று கூறி அவர்களுடைய சுதந்திரத்தைக் கண்டு பயந்தார்களோ அவர்களே இப்பொழுது அந்த உத்தியோகங்களுக்கு விரோதமாக ஆயுதமெடுத்ததும்சிப்பாய்க்குக் குடியானவனிடம் அனுதாபம்உண்டாயிற்று. நிலம் என்று சொன்னமாத்திரத்தில் சிப்பாய்களுடைய கண்ணில் ஒளிவீசிற்று.

ராணுவத்தில் அனேக சமயங்களில் சிப்பாய்கள் இஷ்டப்படி நடத்த சமயங்கள் வாய்த்தன. ஆனால் அந்தச் சமயங்களைத் திடமாக உபயோகப்படுத்தவில்லை. சிப்பாய்கள் மனது திடம்படாமல் அலைந்துகொண்டிருந்தது. வெறுக்கப்பட்ட ஒரு சேனாதிபதியைக் கொன்றபிறகு சில நாளில், சில சமயத்தில், சில மணி நேரத்தில் சிப்பாய்களுக்குப் புத்தி மயங்கிவிடும். மற்ற சேனாதிபதிகளையெல்லாம் விடுதலை செய்வார்கள். அதிகாரிகளுடன் ராஜி பேசுவார்கள். பிரகு அதிகாரிகளால் தண்டிக்கப்படும்பொழுது சுடப்படுவதாய் இருந்தாலும் பேசாமல் உட்படுவார்கள். சவுக்கடிபடுவதாய் இருந்தாலும் உடம்பைவளைத்து, வளைத்துக் கொடுப்பார்கள். மாடுகள் மாதிரி பழயபாரத்தைச் சுமந்து கொண்டே டால்ஸ்டாய் சொல்லிக் கொடுத்தமாதிரி சிறிதும் தவராமல் நடந்தார்கள்.

ஜனங்களிடம் வெகு நாளாய்வளர்ந்து வந்த வெறுப்பும் வாழ்க்கையை மேன்மைப்படுத்தவேண்டும் என்கின்ற பழுத்த

ஆவலும், பழைய குப்பைகளை எறிந்துவிட விருப்பமும் இவை எல்லாம் டால்ஸ்டாயில் எதிரொலிக்கின்றன. இதோடுகூட ஜனங்கள் இன்னும் விஷுத்தெரியாமல் இருப்பதும், கனவு காண்பதுபோன்ற வீண் யோசனைகளில் ஆழ்ந்திருப்பதும், அரசியல் அனுபோகமற்றிருப்பதும், கிராம வாழ்க்கையில் புரட்சிக்கு வேண்டிய வலுவில்லாமல் இருப்பதும் இவை எல்லாம் டால்ஸ்டாயில் எதிரொலிக்கின்றன. பொது மக்களிடம் புரட்சி யுத்தம் கிளம்பித்தான் ஆகவேண்டுமென்பதற்கு சரித்திர பொருளாதார நிலைமைகளே போதிய காரணங்களாகும். இந்தக்காரணங்களே பொதுமக்கள் ஏன் யுத்தத்திற்கு தயாராய் இல்லை என்பதையும் புரட்சியுத்த ஆரம்பத்தில் ஏற்பட்ட தோல்விகளுக்கு முக்கிய காரணமாகிய "கெடுதலை எதிர்க்காதே" என்னும் டால்ஸ்டாயின் கொள்கையையும் விளக்கிக் காண்பிக்கும்.

தோல்வியடைந்த சேனைகள் ஒரு நல்லபாடம் கற்றுக் கொள்ளும் என்பதாக ஒரு பழமொழிஉண்டு. சாதாரண சேனைகளோடு ஒரு புரட்சி வகுப்பு சேனையை ஒத்திட்டுப்பார்ப்பது சில அம்சங்களில் தான் பொருந்தும், முதலாளித் தனத்தின் வீழ்ச்சி மணிக்குமணி மாறிமாறி வருகிறது. இதன் காரணமாய் நிலச்சுவான் தாரர்களாகிய பிரபுக்களையும்அவர்கள் அரசாங்கத்தையும் கோடிக்கணக்கானகுடியானவர்கள் வெறுத்ததினால் குடியானவர்களுக்கு ஏற்பட்ட ஒற்றுமையின் பலத்தால் ஒரு ஜனநாயக புரட்சி யுத்தம் நடத்தத்தூண்டிய நிலைமை இன்னும் வரவர நெருக்கடியாகி வருகிறது. குடியானவர்கள் நிலைமையிலேயே பண்டமாற்று, மார்க்கட்டுக்குத் தகுந்தாப் போல் செல்வாக்கு, பணத்தினுடைய ஆதிக்கம் முதலியவைகளின் கிருத்தியால் பழைய துருப்புப்பிடித்த நாட்டாண்மைத்

தனமும் அதற்குத்தகுந்தபடி ஏற்பட்ட தத்துவ எண்ணங்க ளும் வரவர மறைந்து வருகின்றன. ஆனால் புரட்சியின் ஆரம் பகாலத்தில் பொதுஜனப் புரட்சியில் கிடைத்த முதல் தோ ல்வியின் மூலம் ஒரு காரியம் நிறைவேறிற்று. பொது மக்கள் ஒரு காலத்தில் இளகிய மனதுடையவர்களாகவும், உறுதியற்ற வர்களாகவும் இருந்ததெல்லாம் ஒரே தடவையாய் அடிபட்டுப் போயிற்று. வேலி வரம்புகள் எல்லாம் ஒழுங்கு படுத்தப் பட்டிருக்கின்றன. வகுப்புகளுக்கும், கட்சிகளுக்கும் மத்தி யில் உள்ள எல்லைகளை நிர்த்தாரணஞ் செய்தாகி விட்டது. புரட்சி வாதிகளான சோஷியல் டிமாக்கரிட் கட்சியின் ஒழு ங்கு தவராத நிரந்தரமான பிரசாரத்தின் மூலம் Stolaypin ஸ்டோலிப்பின் உடைய படிப்பினை என்னும் சம்மட்டியின் உதவியினால் சோஷியலிஸ்ட் தொழிலாளர்களிடமிருந்து மாத் திரமல்லாமல் குடியான பொது மக்களிடமிருந்தும் டால்ஸ்ட் டாய் வாதமென்று நமது சரித்திர பூர்வமாக ஏற்பட்ட ஆப த்திற்கு இரையாக்காமல் மேலும் மேலும் வலுவடைந்த வீர ர்கள் கட்டாயம் வெளிக்கிளம்புவார்கள்.

6-ம் அத்தியாயம்.

A. M. Gorky கார்கிக்கு (லெனினுல் எழுதப்பட்ட) இரண்டு கடிதங்கள்.

——:O:——

1-வது கடிதம்.

(இதில் கடவுளைப்பற்றிய தத்துவார்த்தங்களுக்குச் சமாதானம் இருக்கிறது.)

——:0:——

அன்புள்ள Alexei-Maximovich அவர்களே!

தாங்கள் என்ன காரியம் செய்துகொண்டிருக்கிறீர்கள்? இது மிகவும் மோசமான காரியமாகும். நீங்கள் இவ்வளவுக்கு போய்விடுவீர்கள் என்று நான் நினைக்கவில்லை. நேற்றைய தினம் Ryech பத்திரிகையைநான் பார்த்தேன். அதில் டோஸ்ட்டேட்டாயிவ்ஸ்க்கி Dostoyevsky ஐப்பற்றிய கூக்குரலுக்கு தாங்கள் அளித்த பதிலைப்பற்றி சந்தோஷப்பட ஆரம்பித்தேன். ஆனால் இன்றையத்தினம் ஒரு தீவிரப்பத்திரிகையைப் பார்த்தேன். அதில் தங்களுடைய கட்டுரையில் "Ryech" "ரியச்" பத்திரிகையில் பிரசுரிக்காத பாகம் ஒன்று காணப்பட்டது. அதுபின்வருமாறு:—

"கடவுளைத்தேடும் வேலையைத் தற்காலிகமாய் விட்டுவிட வேண்டும். அது பிரயோஜனமற்ற வேலையாகும், மறைத்து வைக்கப்படாத பொருளைத்தேடிப் பயனில்லை. விதை விதைக்காமல் அருப்பு அருக்க முடியாது. உங்களிடம் கடவுள்

இல்லாததற்குக் காரணம் நீங்கள் அதை இன்னும் சிருஷ்டித்துக்கொள்ளவில்லை. தெய்வத்தைத் தேடிப்பிடிக்கமுடியாது. நீங்கள் அவரை சிருஷ்டித்துக்கொள்ளவேண்டும். ஜீவனிடம் கடவுளைக்கண்டுபிடிக்கும் குணமில்லை" என்று காணப்பட்டது உண்டாக்கும் குணமே இருக்கிறது.

இதிலிருந்து விளங்குகின்றதென்னவென்றால், தாங்கள் கடவுளைத்தேடும்வேலையை ஆட்சேபிப்பதெல்லாம் தற்காலிகமாகத்தான் என்று தெரிகிறது. பின்னும் புலப்படுகின்றதென்னவென்றால் நீங்கள் கடவுளைத்தேடும் வேலைக்குச்சொல்லும் ஆட்சேபம் கடவுளைத்தேடும் வேலைக்குப் பதிலாகக் கடவுளைச்சிருஷ்டிக்கும் வேலையை மேற்போட்டுக்கொள்ளுவதற்காக என்கிறீர்கள்.

இது ஒழுங்கான யோசனைகளாகுமா? ஐயோ! இப்பொழுது! நீங்கள் இந்த வழியில் அறிவைச் செலுத்துவதை நினைக்க நினைக்க என்மனம் பதராதா? கடவுளைத்தேடுவதற்கும், கடவுளை அமைப்பதற்கும், கடவுளை சிருஷ்டிப்பதற்கும், கடவுளை உற்பத்தி செய்வதற்கும் ஆகிய இவற்றில் ஒன்றுக்கொன்று எவ்வளவு வித்தியாசமிருக்கிறதென்றால், ஒரு மஞ்சள் பிசாசுக்கும், ஒரு நீலவர்ண பிசாசுக்கும் உள்ள வித்தியாசம் எவ்வளவோ அவ்வளவுதான். எல்லா கடவுள்களையும், எல்லா பிசாசுகளையுமொழித்து ஜீவனற்ற பிணங்களின் வணக்கம் என்ற எண்ணத்தையே மாற்றிவிட முயற்சிக்காமல் கடவுளைத் தேடுவதெனப் பேசிக்கொண்டு மஞ்சள் பேய் நல்லதா? நீலப் பேய் நல்லதா? என்று வாதிப்பது ஒன்றும் பேசாமல் சும்மா இருப்பதைவிட நூறுமடங்கு மோசமான காரியமாகும். கடவுள் என்பது அந்தக் கடவுளை எவ்வளவு பரிசுத்த குணங்கள் உள்ளதாகவும், மேன்மை உள்ளதாகவும், நாம் கண்

இடிக்காமல் சிருஷ்டித்துக்கொண்டதாகவும் இருந்தாலும் கூட அநுபிரேத வணக்கமேயாகும்.

ஜனநாயகம் — பொதுமக்கள் — பொதுஜன அபிப்பிராயம் — விஞ்ஞானம் ஆகியவைகளுக்கு சற்றும் மதிப்பு கொடுக்காததும், மிகவும் சுதந்திரம் பெற்றுவிட்டதாகக் கருதப்படுவதுமான அமரிக்கா, சுவட்ஜர்லாண்ட் போன்ற நாடுகளில் பொது மக்கள் தொழிலாளர் ஆகியவர்களுடைய மனத்தில் இம்மாதிரி பரிசுத்தமான் ஆத்மார்த்திகமாய் கருதப்பட்ட சிறு கடவுளைப்பற்றிய எண்ணங்களைக்கற்பித்துத் தொழிலாளர்களுடையநன்மைக்கு விரோதமாக தொழிலாளர்களையே கடக்கும்படி செய்துவிடுகிறார்கள். அதனால்தான் மதத்தைப் பற்றிய சகல எண்ணங்களும், கடவுளைப்பற்றிய சகல எண்ணங்களும் இந்த எண்ணங்களோடு பட்டும்படாத சம்மந்தம் வைத்திருக்கும் மற்ற எல்லாக்காரியங்களும் வாயால் சொல்ல முடியாத, மிக கேவலமான, வெறுக்கத்தக்க காரியமாயிருக்கிறது என்று சொல்லுகிறேன். இம்மாதிரி எண்ணங்களை நாம் இப்படி தொத்து வியாதிகளைப்போல் வெறுப்பதால்தான் பணக்கார வகுப்பார்கூட இவற்றை பொருத்துக்கொள்வதோடு, சிலசமயம் இந்த அபிப்பிராயங்களை விருப்பமாயும் வரவேற்கிறார்கள்.

பாமர மக்களுடைய கண்களுக்கு வெளிப்படையான ஸ்தூலமான குற்றங்களும், ஏமாற்றங்களும், பலவந்தங்களும் தொத்து நோய்களும் தெரிகின்றனவே ஒழிய சுஷுபிதமான ஆத்மார்த்தமான கடவுள் தோற்றமும், அழகிய எண்ணங்களால் அலங்கரிக்கப் பட்டிருக்கும் கடவுள் தோற்றமும் தெரிவதில்லையே. நான் சமீபத்தில் ஜெர்மனி பத்திரிகை ஒன்றில் ஒருகத்தோலிக்கபாதிரி சிறு பெண்களை கற்பழித்ததாகப்பார்த்

தேன். இம்மாதிரி பெயர் வழிகளால் ஜனநாயகத்திற்கு ஏற்படும் ஆபத்தைவிட பாதிரி உடை தரிக்காமலும், பாதிரிகள் போல்வைதீகமதத்தை ஆதரிக்காமலும், எண்ணத்தில் ஜனநாயகப் பாதிரிகளாய் விளங்கி, கடவுள்களை உண்டாக்க வேண்டுமென்றும், சிருஷ்டிக்க வேண்டுமென்றும் பிரசாரம் செய்பவர்களால் ஏற்படும் ஆபத்தே பெரிதானது. எப்படியெனில் முதலில் குறிப்பிட்ட கற்பழித்த பாதிரியைசுலபமாக வெளிப்படுத்தி தண்டித்துத் துரத்தி விடலாம். ஆனால் இரண்டாவது குறிப்பிட்ட கடவுளை சிருஷ்டிக்கும் பாதிரியை அவ்வளவு சுலபமாக துரத்திவிட முடியாது. இவர்களை வெளிப்படுத்துவது முதலாவதவர்களை வெளிப்படுத்துவதைவிட ஆயிரமடங்கு அதிகமான கஷ்டமான காரியம். தான் பாபி என்றும், பலவீனனென்றும் சொல்லித் திரியும் சபலக்கூட்டத்தார் எவரும் இவர்களைக் குற்றம் கூற முன்வரமாட்டார்கள்.

இப்போது தங்களைப் பாபிகள் என்றும் பலவீனர்கள் என்றும் முறையிடுவதில் கைதேர்ந்த ருஷியர்களின் சகல ஆன்மாக்களைப்பற்றித் தெரிந்திருந்தும் (ருஷியர்கள் மாத்திரம் ஏன்? இத்தாலியர்கள் இவ்விஷயத்தில் பின்னடைந்தவர்கள் அல்ல) இந்த ஆன்மாக்களின் முன்நிலையில் அவர்கள் ஆசைப்படும் திரு தின்பண்டத்தை தாங்கள் ஆடம்பரமாக அலங்கரித்து வைத்து அவர்களை மயக்குகிறீர்கள். இந்த தின்பண்டத்தின் மேலிருக்கும் சக்கரைப் பூச்சை நீக்கிப் பார்த்தால் உள்ளுக்குள் பேராபத்தை விளைவிக்கும் விஷம் இருப்பது தென்படுகிறது. ஆ! இது மிகவும் கஷ்டமான நிலை; நாம் மாரடித்துக்கொண்டு அழுத காலமெல்லாம் தாண்டி விட்டது, நம்மிடத்தில் குற்றமிருப்பின் அதை நிதான ஆராய்ச்சி செய்து சீர்திருத்தம்செய்யும் காலம் இது.

கடவுளை அமைத்துக் கொள்வது நம்மையே நொந்து கொண்டு மாரடித்துக்கொள்ளுவதைவிட மிகவும் மோசமான காரியமல்லவா? கடவுளைச் செப்பனிடும் வேலையிலும், அல்லது கடவுளைச் செப்பனிடுவதைப் பற்றிச் சிந்திப்பதிலும் கருத்தைச் செலவழிக்கும் ஒவ்வொருவரும் மிகவும் மோசமானவிதமாய் மாரடித்துக் கொள்ளுகிறார்கள். ஏனென்றால் அவர்கள் ஒரு உருப்படியான வேலையில் ஈடுபடுவதை விட்டுவிட்டு தன்னைப் பற்றிய யோசனையிலேயே ஆழ்ந்து தன்னையே பெரிதெனஎண்ணிக் கொண்டு தன்னுடைய குணங்களில் எவை மிகவும் அசுத்தமாகவும், முட்டாள்தனமாகவும் அடிமைத்தனமாகவும் உள்ளனவோ அவைகளைக் கடவுள் குணமெனச் செப்பனிட்டுக்கொண்டு அவற்றைப் பற்றிய யோசனையிலாழ்ந்து விடுகிறார்கள்.

தனிப்பட்டவர்களைக் குறிக்காமல் பொது ஜனசமூகத்தைப் பற்றிய அளவில் யோசிப்போமானால் கடவுளைச் செப்பனிடுவது என்பதெல்லாம் ஒரு புத்தி மழுங்கிய-பலமற்ற-சுயநலப் பிரியமான, தானே பெரிதென்ற எண்ணத்தினால் மூழ்கி இருப்பதேயாகும். ஒரு சுயநலப் பிரியனான சொல்பபணக்காரன் அப்படிப்பட்ட எண்ணத்தில் ஆழ்ந்திருக்கும் போது தன் குற்றங்களை மிகைப் படுத்திமனோதைரிய மற்றும் களைப்புற்றும் வீண்கனுக்காணும் நிலைமையை அடைகிறான்.

இவ்விஷயங்களைத் தாங்கள் ஆன்மாவைப்பற்றி எழுதியதில் உண்மையாக விளக்கி இருக்கிறீர்கள். ஆனால் அவ்விடத்தில் தாங்கள், ருஷ்யர்கள் ஆத்மாவைப் பற்றிப் பேசாமல் பொதுவாக சொல்ப பணக்காரர்களைப்பற்றி குறிப்பிட்டிருக்க வேண்டும். ஏனென்றால் யூதர், இதாலியர், இங்கிலீஷ் வகுப்பைச் சேர்ந்த சொல்பப் பணம் படைத்தவர்கள் எல்லாம்

ஒரே மாதிரியாகவே நடக்கிறார்கள். அழுகிப்போன சுயநலத்தைக் காணுவதென்பது எப்பொழுதும் சகிக்கமுடியாத காரியம்தான். ஆனால், இந்தமாதிரி ஜனநாயக சுயநலம் என்று பெயர் வைத்துக்கொண்டு பிரேதவணக்க எண்ணங்களிலேயே ஈடுபட்டிருக்கும் கக்ஷியைக் காணுவது கொஞ்சங்கூட சகிக்க முடியாததாகும்.

தங்களுடைய கட்டுரையைக் கவனமாய்ப் படித்துப் பார்த்து இம்மாதிரி தாங்கள் தவறிவிட்டதற்குக் காரணம் என்ன என்று என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். அது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. தாங்களாகவே ஏற்கனவே கண்டிக்கப்பட்டிருக்கிற "பாப மன்னிப்பு" வின்மிகுதியோ, அல்லது அதின் எதிரொலியோ? அல்லது ஒருவேளை தொழிலாள நோக்கத்தை விட்டு விட்டு பொதுவான "ஜனநாயக நோக்கத்திற்கு" ஆளாக முயற்சித்து முடியாமல்போனதோ, அல்லது ஒருவேளை "பொதுவான ஜனநாயகத்தோடு" வார்த்தையாடும்பொழுது குழந்தைகளோடு பேசுவது மாதிரி கொச்சைப்பேச்சுப் பேசுவீர்களோ? அல்லது சிறுபாணம் படைத்த வகுப்பாருடன் அவர்களுக்குப் புரிந்தபாஷையில் பேசுவதற்காக அவர்கள் மனப்பான்மையிலுள்ள குற்றங்களுக்கு சற்று சலுகைகாட்ட வேண்டுமென்று எண்ணினீர்களோ?

எப்படி இருந்தாலும் இந்தப்படி தாங்கள் நடப்பது எவ்விதத்திலும் எந்தப் பொருளிலும் தவறல்லவா?

ஜனநாயக ஆக்ஷி ஏற்பட்டிருக்கும் தேசங்களில் தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்த ஆசிரியர்கள் ஜனநாயகப் பொது மக்களுள்பொதுஜன அபிப்பிராயம், விஞ்ஞானம், இவற்றின் பெயரால் பிரசாரம் செய்வது அசம்பாவிதமென நான் முதலி

லேயே கூறியிருக்கிறேன். ஆனால் ருஷியாவைப்பற்றி என்ன என்ற கேள்வி பிறக்கலாம். ருஷியாவில்கூட அம்மாதிரியான பிரச்சாரம் தகுதி அற்றது என்றே நினைக்கிறேன். ஏனென்றால் அந்தப் பிரசாரம் ருஷியாவிலும் அற்பப் பணக்காரர்களைப்புகழ் வதுமாதிரி தோன்றும்(Russkaya Mysl)ருஷிய அறிவு,என்ற மாதப் பத்திரிகை (இது ருஷிய முதலாளிகளுடைய ஏகாதிபத்தியத்தைஆதரித்துவந்ததாகும்.) யைச்சேர்ந்த (Izzoyer) இஸ்சோயிர் என்பவரும் இம்மாதிரி பொதுவான அர்த்தமற்ற அறிக்கைகளில் கையொப்பமிடுவார். இம்மாதிரி அறிக்கைகளுக்கும் Izzoyer உடயகொள்கைகளுக்கும் வித்தியாசம் கண்டு பிடிப்பது தங்களுக்குச் சுலபமாயிருக்கலாம். ஆனால் அந்த அறிக்கையை வாசிப்பவர்களுக்கு அந்தவித்தியாசத்தை கண்டு பிடிக்க முடியாத நிலையில் அந்த அறிக்கைகளை வெளியிடுவதில் என்ன பயன்? ஜனநாயகம் என்ற ஏதோஒரு கலப்படத்தை வாசகர்களுக்குக் கொடுப்பதை விட்டு விட்டு, அற்ப பணக்கார வகுப்பார்பலவீனத்தோடும் பரிதாபகரமாகவும், திடமில்லாமல் சலனப்பட்ட மனதுடனும், பலனற்றும் களைத்துப்போய் அதைரியப்பட்டு கடவுள் சிந்தனையிலும், தன்னைப்பற்றிய, சிந்தனையிலும் ஆழ்ந்து கடவுளை செப்பனிட்டு கடவுளை உற்பத்தி செய்து தன்னையே நொந்துகொண்டு ஒரு உதவியும் கிட்டாமல், ஒரு ஏற்பாட்டிலும் அடங்காமல் பரிதவிப்பதை ஒரு பக்கமும், தொழிலாளர வகுப்பார் புத்திசாலித்தனமாக வார்த்தைகளுக்கு அடிமைப்படாமல், விஞ்ஞானம், பொதுஜன அபிப்பிராயம் இவைகளில் பணக்கார நன்மைக்கெனஉற்பத்தி செய்யப்பட்டவை எவை? தங்களுக்கு ஏற்பட்டவை எவை? எனக் கண்டறியும் சக்தியுடன் பணக்கார ஜனநாயகத்தையும் தொழிலாளர் ஜனநாயகத்தையும் கண்டுபிடிக்கும் ஆற்றலுடன் மற்றொரு பக்கம் விளங்குவதையும் என் வாசகர்களுக்கு விளக்

கப்படக்கூடாது. இதை விட்டு தாங்கள் ஏன் இப்படிச் செய்தீர்கள்?

என் மனம் மிகவும் பதருகிறது.

இப்படிக்குத் தங்கள்.

V. U.

குறிப்பு:—ரதைப்புஸ்தகம் ரிஜிஸ்டர் தபாலில் அனுப்பினேன். அது தங்களுக்குக் கிடைத்ததா? தங்கள் தேக சௌக்கியத்திற்குத் தகுந்த வைத்தியர்களைக்கொண்டு மருந்து சாப்பிடவும். இதை நான் வற்புறுத்திச் சொல்லுகிறேன். உடம்பை குணப்படுத்திக்கொண்டால் தான் பனி காலத்தில் சளிப்புப் (Cold) பிடிக்காமல் பிரயாணம்செய்யலாம். இல்லாதவரை பனி காலத்தில் பிரயாணம் செய்வது ஆபத்தானது.

இப்படிக்குத் தங்கள்,

Vladimir Ulyanov

இக்கடிதம் 1913 நவம்பர் மத்தியில் லெனினால் எழுதப்பட்டு 1924ல் லெனின் திரட்டு முதல் வால்யத்தில் வெளியிடப்பட்டது.

இரண்டாவது கடிதம்.

அன்புள்ள Aliexi-Maximovich அவர்களே!

கடவுள், தெய்வீகம் முதலிய பிரச்சினைகளைப்பற்றி தாங்கள் முன்னுக்குப் பின் விரோதமாய்ச் சொல்லுகிறீர்கள். இதே முரண்பாட்டைப்பற்றி கேப்பிரி (Capri) யில் நாம் இருவரும் சென்ற தடவை சந்தித்த போது நாம் பேசிக்கொண்டதில் சுட்டிக் காட்டினேன். Vperyodists விப்பிரியோடிஸ்செயிஸ் என்ற தீவிர போல்ஷ்விக் கட்சியினின்றும்

அதன் கொள்கைகளின் அந்தரங்கத்தைத்தெரிந்து கொள்ளாமலேயே தாங்கள் பிரிந்து விட்டீர்கள். (அல்லது பிரிந்து விட்டதாகக் காணப்படுகிறீர்கள்) அதே சங்கதி இவ்விஷயத்திலும் உண்மையாய் விளங்குகிறது. ஆனால் தங்கள் பதிலில் தங்கள் மனம்புண்படுகிறதாகவும் தங்கள் கட்டுரையில், தற்காலிகமாக என்ற பதம் எப்படிப்புகுந்து விட்டது என்பது புரியவில்லை” என்றும் எழுதி இருக்கிறீர்கள். இருந்த போதிலும் கூட கடவுள் எண்ணத்தையும் கடவுளை நிர்மாணிப்பதையும் தாங்கள் ஆதரிக்கிறீர்கள். தாங்கள் எழுதுவதாவது:—

“கடவுள் என்னும் எண்ணம் பல கூட்டங்களும் பல தேசத்தாரும் மனிதவர்க்கம் முழுவதும் ஒன்று சேர்ந்து உற்பத்தி செய்த நினைவுகளை எல்லாம் திரட்டி மனிதர்களுடைய சமூக உணர்ச்சியை எழுப்பி வியாபிக்கச் செய்து சமூகத்தையும் ஒவ்வொரு தனி நபரையும் ஒன்று சேர்த்து இணைத்து மனிதருக்குள் இருக்கும் மிருகத்தனமாகிய சுயநலத்தை அடக்கி வருகிறது.”

என்று எழுதி யிருக்கிறீர்கள். இந்த கொள்கைக்கும் Bogdanov போக்டானவ் Lunacharsky லூனாசார்ஸ்கி இவர்களுடைய கொள்கை அல்லது அபிப்பிராயங்களுக்கும் சம்மந்தப்பட்டது என்பதில் ஆக்ஷேபணையில்லை. இதனுடைய குற்றமும் பிற்போக்கும் வெளிப்படையாகவே தெரிகின்றன. கிறிஸ்தவசோஷியலிஸ்ட் எனப்படுகிறவர்களைப்போல் சோஷியலிஸ்ட்டுகளுக்குள் மோசமானவர்களும் சோஷியலிசத்தைக் கெடுத்தவர்களும் வேறு கிடையாது. அவர்களைப்போலவே தாங்களும் (ஏதோ நல்ல எண்ணத்துடன் தான் செய்கிறீர்கள் என்றாலும்) இந்தப்பத்திரிகைகள் மாதிரி தந்திரம் செய்கிறீர்கள். தங்கள் எத்தனத்தின் நோக்கம் என்னவென்றால்

வாஸ்தவத்தில் சரித்திர பூர்வமாக சமூக அமைப்பில் கடவுளு டன் இணைக்கப்பட்டிருந்த எண்ணங்களாகிய சைத்தான் பிடிப்பது—அறிவற்ற மனக்கசப்பு—அறியாமையும் கேவல நிலைமையையும் பெருமைப்படுத்திக்கொள்ளுதல் ஆகிய இவைகள் ஒரு புறமும், மற்றொருபுறம் நிலச்சுவான் தாரர்களுக்கு அடிமைப்பட்டுவரும் அரசனை ஆதரிப்பதும் ஆகிய இவைகளை எடுத்து விட்டு இவ்வித சரித்திர சமூகஉண்மைகளுக்கு பதிலாக "மனிதர்களுடைய சமூக உணர்ச்சியை எழுப்பி வியாபிக்கச் செய்யும்" கடவுள் என்ற ஒரு கற்பனையை அற்ப முதலாளிகளின் நன்மைக்குத் தகுந்தபடி கட்டுக்கட்டி இருக்கிறீர்கள். இந்த கற்பனைக்கு அழகு-ஒழுக்கம்-உண்மை ஞாயம் என்பதாக எல்லாம் அர்த்தம் சொல்லுகிறீர்கள். ஆனால் இவ்வித அர்த்தங்கள் கொண்ட தங்களுடைய எண்ணங்களெல்லாம் வெளியே கிளம்பாமல் தங்களுடைய மனதிலேயே தங்கி விடுகின்றன- ஆனால் தாங்கள் எழுதிய வாசகங்கள் பொது மக்களிடம் சேர்ந்து அவற்றிற்கு அர்த்தம் சமூக நிலைமைக்குத் தக்கவாறும் வகுப்புப்போரில் ஏற்படும் அனுபோகத்திற்குத் தக்கவாறும் சொல்லப் பட்டனவே ஒழிய, மற்றபடி தாங்கள் மனதில் என்ன எண்ணங்களைக் கொண்டு எழுதினீர்கள் என்பதைப் பொருத்துச் சொல்லப்படவில்லை. மற்றவர்களும் அக்தப்படி அருத்தம் கொள்ள அதில் இடமுமில்லை. தாங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் சமூக அமைப்பில் வகுப்புப் போர் ஏற்பட்டு விட்டபடியால் தங்களுடைய செய்கையின் பயனாக பாதிரிகள் இரண்டாவது சார்நிக்கலாஸ், Purishkevich புஷக்கவிச் Struve ஸ்டார்வ் முதலியவர்களின் எண்ணங்களுக்கு ருசியும் அழகும் கொடுக்கப்படுகின்றன. ஏனென்றால் அனுபோகத்தில் கடவுள் என்ற எண்ணத்தைக்கொண்டு அவர்கள் போது மக்

களை அடிமைப்படுத்தி வருகிறார்கள். கடவுள் என்ற நினைப்புக்கு தத்துவார்த்த அழகு கொடுப்பதினால் ஒன்றுமறியாத தொழிலாளர்களையும் குடியானவர்களையும் கட்டி இருக்கும் அவ்விலங்கை பழுதுபார்த்து கெட்டியாக்குகிறீர்கள். Parson பார்சன் முதலிய கூட்டத்தார் நாளையதினம் எழுந்து நின்று "பார்த்தீர்களா கடவுள் என்பது எவ்வளவு அழகிய மேன்மைபெற்ற நினைப்பு பாருங்கள், உங்களுடைய ஜனநாயக கர்த்தாக்களும் உங்களுடைய தலைவர்களுமே இதை ஒப்புக்கொள்ளுகிறார்கள், இந்த காரியத்தை செய்து வைப்பதுதான் எங்கள் கடமை என்று சொல்லுவார்கள்.

"மனிதர்களுடைய சமூக உணர்ச்சியை எழுப்பி வியாபிக்கச்செய்யும் எண்ணங்களின் தொகுதி தான் கடவுள் என்று சொல்லுவது உண்மையல்ல. Bogdanovian போகடனோவியன் ஆன்மவாதமாகும். இதன் மூலம் நினைவுகளை உற்பத்தி செய்வதால் பிரகிருதிப்பொருள்கள் என்னும் உண்மை மறைக்கப்படுகிறது. சரித்திர பூர்வமாகவும் ஆராய்ந்தோமானால் கடவுள் என்பது மனித வர்க்கத்தின் அறியாமையினாலும் மனிதர்கள் முதலில் இயற்கை சக்திக்கும், பிறகு வகுப்பு கோடுமைக்கும் அடிமைப்பட்டதாலும் உண்டான நினைப்புகளின் சேர்க்கை என்பது விளங்கும் இந்த நினைப்புகளே அறியாமையை மேலும் மேலும் வளர்த்து வகுப்பு போராட்டத்திற்கு தடைகளாய் இருக்கின்றன. சரித்திரத்தில் ஒரு காலத்தில் கடவுள் என்ற எண்ணத்தின் அர்த்தமும் ஆரம்பமும் நாம் மேலே சொன்னபடி இருந்தாலும் ஜன நாயக தொழிலாளர்களின் யுத்தங்கள் ஒரு மதம் மற்றொரு மதத்தோடு சண்டையிடுவது என்ற மாதிரியில் தோன்றின. ஆனால் அந்தக் காலம் மலை ஏறி வெகு நாள் ஆகிவிட்டது.

இப்பொழுது ஐரோப்பாவில், ருஷ்யாவில் இருப்பது போலவேகடவுள் என்ற நினைப்பை நிலைநிறுத்தவோ, உண்மை என்று சொல்லவோ செய்வது தான் முக்கிய முயற்சியாயிருக்கிறது. என்றாலும், அம்முயற்சி எவ்வளவு நாகரீகமாகவும், நல்ல எண்ணத்துடனும் செய்யப்பட்டாலும் அது பிற்போக்கை ஆதரிப்பதாகவே கருதப்படுகிறது.

தங்கள் வியாக்கியானத்தில் கடவுள் என்பதற்கு "மனிதர்களின் சமூக உணர்ச்சியை எழுப்பிப் பரவச்செய்தும், சமூகத்துடன் ஒவ்வொரு நபரையும் ஒன்று சேர்த்தி கட்டுப்படுத்தியும், மனிதனின் இயற்கை மிருகத்தனமாகிய சுயநலத்தைத் ஒழித்தும் வரும் எண்ணங்களின் சேர்க்கை" என்று பொருள் கொடுக்கிறீர்கள். இது மிகவும் பிற்போக்கான செய்கை என்பதோடு முழுவதும் பணக்கார வகுப்பை ஆதரிப்பதேயாகும் என்று சொல்லுகிறேன். இதை ஏன் நான் பிற்போக்கான செய்கை என்று சொல்லுகிறேன் என்றால் "நமது மிருகக் குணமாகிய சுயநலத்தை ஒழிக்கவேண்டும்" என்னும் பாதிரிகளின் அடிமை போதனையை இது புதுப்பிக்கிறது. உண்மை என்ன வென்றால் நமது மிருககுணமாகிய சுயநலத்தை ஒருக்காலும் கடவுளைப்பற்றிய எண்ணம் ஒழித்ததேயில்லை. அது எதனால் ஒழிக்கப்பட்டது என்றால் ஆதிகாலத்து மனிதர்கள் கூட்டங்கூடி வசிக்க ஆரம்பித்ததாலும் கூட்டுவாழ்க்கையை ஏற்படுத்திக்கொண்டதாலுமேதான். கடவுளைப்பற்றிய எண்ணம் சமூக உணர்ச்சியை மங்கவும் அறுகவும் செய்து உயிருடன் இருக்கும் சமூகத்தாரின் நன்மைக்கு பதிலாக இறந்து போனவர்களுடைய நன்மையை பிரதானமாகக்கொண்டுளது.

கடவுளைப்பற்றிய எண்ணத்திற்கு எப்பொழுதும் அடிமைத்தனமே, அதிலும் மிகவும் மோசமான, ஆதரவற்ற அடி

மைத்தனமே அடிப்படையாய் இருந்து வந்திருக்கிறது. கட வுளைப்பற்றிய எண்ணம் ஒருக்காலும் சமூகத்தையும், தனி நபரையும் ஒன்றுபடுத்தி பந்தப்படுத்தியதில்லை. ஒடுக்கப்பட்ட வகுப்பார் தங்களை அடக்கி ஆளும் வகுப்பாருக்கு தாங்களாக வே அடங்கி நடப்பதை தெய்வீகத்தன்மை என்று கடவுளைப் பற்றிய எண்ணம் போதித்து வந்தது. தங்களுடைய வியாக்கி யானம் பணக்கார வகுப்பை ஆதரிப்பதுடன் விஞ்ஞானத்திற் கும், சரித்திரத்திற்கும் முரண்பட்டது. ஏனெனில் அதுபொ துவாக ராபின்சன் குரூசோ எண்ணியமாதிரி உள்ள எண் ணங்களைப்பற்றி கூறுகிறதேயொழிய ஸ்திரமாக சரித்திர பூர்வ கமாக ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஏற்பட்ட வகுப்புகளைப் பற்றிக் கூறவில்லை.

கடவுளைப்பற்றிய எண்ணத்தை (Syrian) சிறியன் முத லிய காட்டுமிராண்டி கூட்டங்களும், காட்டுமிராண்டித்தனத் தில் இருந்து சிறிதளவு முன்னுக்கு வந்த கூட்டங்களும் நினை ப்பது ஒருமாதிரியாகவும் (Struve) ஸ்ட்டர்வேயும் அவரைச் சேர்ந்த கூட்டத்தாரும் நினைப்பது வேறுமாதிரியாகவும் இரு க்கிறது. ஆனால் இரண்டு மாதிரிகளிலும் இந்த எண்ணம் வகுப்பு ஆதிக்கத்தையும், வகுப்பு ஆட்சியையும் விருத்தி செய் யப்படுவதோடு வகுப்பு ஆட்சியால் இந்த எண்ணமும் விரு த்தி ஆக்கப்படுகிறது. பொது மக்கள் சிறு சிறு கடவுள்களைப் பற்றியும், தெய்வீகத்தைப்பற்றியும் கொண்டிருக்கும் எண் ணங்களுக்கு அவர்களுடைய அறியாமையே காரணம். அந்த அறியாமையின் காரணத்தினாலேயே சாரைப்பற்றியும், (அரச னைப்பற்றி) பூதங்களைப்பற்றியும், பெண்களுக்கு பேய்பிடிப் பதைப்பற்றியும் அவர்கள் தப்பெண்ணங்கள் கொண்டிருக்கி றார்கள். பொதுஜனங்கள் கடவுளைப்பற்றி கொண்டிருக்கும் தப்பெண்ணத்தை தாங்கள் எப்படி ஜனநாயகத்தின் குணமா

கக்கருதுகிறீர்கள் என்று என்றால் கண்டுபிடிக்க முடிய வில்லை.

தத்துவஞானிகளுக்குள் ஆத்மவாதிகள்தான் "தனி ஜீவனுடைய நன்மையை எப்பொழுதும் கருதுகிறவர்கள்" என்று சொல்லுவது உண்மையல்ல. (Gassendi) காசண்டியைவிட (Descartes) டெஸ்கார்ட்ஸ் தனி ஜீவனுடைய நன்மையில் அதிக அக்கரைகொண்டிருந்தாரா? அல்லது (Feurbach) பூர்பேக்கைவிட (Fichte) பிகட்டியும் (Hegal) ஹெக்கலும் அதிக அக்கரை எடுத்துக் கொண்டார்களா?

மேலும் தாங்கள் என்ன எழுதுகிறீர்கள் என்றால்,

"கடவுளை சிருஷ்டி செய்வது என்பது சமூகத்திலும், தனி நபரிடத்திலும் ஏற்படும் சமூகக்கொள்கைகளைத் திரட்டி மேலும் மேலும் பரிணமிக்கச் செய்வதாகும்" என்பதாக எழுதுகிறீர்கள். இந்த இடம் மிகமிக மோசமானது! ரஷியாவில் சுயேச்சை இருந்தால் பணக்கார வகுப்பு முழுவதும் தங்களுக்கு மிகவும் பொருத்தமான இந்த சமூகக்கொள்கையையும், மதக்கொள்கைகளையும் ஏற்படுத்திக்கொடுத்ததாக தங்களை மிகவும் வாழ்த்தி இருப்பார்கள். ஆகவே தற்சமயம் இவ்வளவு தூரம் நான் எழுதியதே போதுமானதென நினைக்கிறேன். ஏற்கனவே இக்கடிதம் மிகவும் நீண்டு விட்டது.

மறுபடியும் தங்கள் கையைக்குலுக்கி தாங்கள் தேக சௌக்கியத்தோடு இருக்கவேண்டுமென்று விரும்புகிறேன்.

தங்கள்

V. U.

இது 1913ல் எழுதப்பட்டு 1924-ல் லெனின் திரட்டு முதலாவதில் பிரசுரிக்கப்பட்டது.

7-ம் அத்தியாயம்.

பொதுவுடமைக் கொள்கையும், ஒழுக்கமும்.

——:0:——

லெனின் பேசியது.

——:0:——

(1920ம் வருஷம் அக்டோபர் மாதம் 3ந்தேதி, 3-வது உகில ருஷிய கம்சமால் காங்கிரசில் லெனின் பேசிய பேச்சு.) (கம்சமால் என்பது பொது உடமைக் கொள்கையை ஏற்ற இளைஞர்கள்.)

எனதன்பான இளந்தோழர்களே!

"முதலாவதாக நான் இவ்விடத்தில் பொது உடைமைக் கட்சியார் ஒழுக்கத்தைப்பற்றி கொண்டுள்ள கொள்கையைக் குறிப்பிடுகிறேன்.

தாங்கள் யாவரும் பொது உடமைக்காரராக பழகிக்கொள்ளவேண்டும். இளம் கம்யூனிஸ்ட் சங்கத்தின் வேலை என்னவென்றால் படிப்பதிலும், ஸ்தாபனங்களை அமைப்பதிலும், தங்கள் தங்கள் சங்கத்தை உறுதிப்படுத்துவதிலும், யுத்தம் நடத்துவதிலும் தங்களையும் தங்களைத் தலைவராகக் கருதுகிறவர்களையும் தயார்செய்வதற்கு தங்கள் வேலைத்திட்டத்தை திடப்படுத்திக் கொள்ளவேண்டியதாகும். இந்த வழியில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆள்களைப் பழக்கி சேர்க்கப்படும். தற்காலத்திய இளைஞர்களை பழக்குவதும், அறிவூட்டுவதும் படிப்பிப்பதும் ஆகிய வேலைகளை எல்லாம்பொது உடைமை ஒழுக்

கக்கொள்கைகள் அவர்களுக்குப் படியும் படியான மார்க்கத்தி லேயே செய்து வர வேண்டும்.

ஆனால் பொது உடமை ஒழுக்கக் கொள்கை என்று தனியாக ஒன்று இருக்கிறதா, என்ற கேள்வி பிறக்கலாம். ஒழுக்கத்திலேயே பொது உடமை ஒழுக்கமென்று ஒரு வகை இருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக அப்படி ஒன்று இருக்கின்றது என்று தான் சொல்லுவேன். நமக்கு "ஒழுக் கக்கொள்கைகளே கிடையாது" என்று அடிக்கடி நமது எதிரி களால் சொல்லப்படுகின்றது. எப்படியென்றால் "பொதுவுடை மைக்காரர் ஒழுக்கத்தையே மறுக்கிறார்கள்" என்பதாக பணக் காரவகுப்பார் அடிக்கடி சொல்லிவருகிறார்கள். உண்மையை மறைத்துத் தொழிலாளர் குடியானவர் ஆகியவர்கள் கண்களில் மண்ணைப் போடுவதற்கு பணக்கார வகுப்பார் செய்யும் சூழ்ச்சிகளில் இதுவும் ஒன்று.

நாம் எந்த முறையில் ஒழுக்கக் கொள்கைகளையும், ஒழுக் கத்தையும் மறுக்கிறோம்? என்றால் பணக்கார வகுப்பார் எந்த முறையில் ஒழுக்கங்களை போதிக்கிறார்களோ அதாவது "கடவு ளுடைய ஆக்ஞையின் மூலம் ஒழுக்கங்கள் ஏற்படுவதா"க சொல்லுகிறார்களோ, அந்த முறையில்தான் அதாவது ஒழுக் கங்கள் என்று சொல்லப்படுபவை கடவுளால் ஏற்பட்டதல்ல என்று மறுக்கிறோம். ஏனென்றால் நாம் கடவுளை நம்புவதில்லை என்று நிச்சயமாகச்சொல்லுகிறோம். பாதிரிகளும், நிலச்சுவா ன்தாரர்களும், பணக்கார வகுப்பாரும் ஆகிய இவர்கள் எல் லாம் தங்கள் சுயநன்மையை காப்பாற்றிக் கொள்ளவும், பாடு படுபவர்களைக் கொள்ளை அடிக்கவுமே கடவுள் பேரால் ஒழுக் கம் ஒழுக்கம் என்று பேசுகிறார்கள் என்பதை நாம் நன்றாய் அறிந்திருக்கிறோம். சில சமயம் இவர்கள் தங்கள் ஒழுக்கக்

கொள்கைகள் கடவுள் ஆக்கினையில் இருந்து பிறப்பதாகச் சொல்லுவதை விட்டு விட்டு, ஆன்ம வாதத்தில் முழுதுமோ, பகுதியோ நம்பிக்கை வைத்தவர்களுடைய சொற்களை உபயோககப்படுத்தி அவற்றின் மூலம் தங்களின் நன்மைக்கு வேண்டிய மாதிரி ஒழுக்கத்தை கற்பித்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் இந்த ஆன்ம வாதம் என்ற சொற்களுக்கும், தெய்வீக ஆக்கினை என்பவைகளுக்கும் யாதொரு வித்தியாசமும் இல்லை.

மனித சக்திக்குமீறியதாகக் கருதப்படும் எண்ணங்களில் இருந்தாவது, வகுப்புபேதத்தை (அதாவது முதலாளி தொழிலாளி என்கின்ற பேதத்தை) உணராத எண்ணங்களில் இருந்தாவது பிறக்கும்ஒழுக்கம் என்பதை நாம் ஒப்புக் கொள்வதில்லை என்பதோடு அப்படிப்பட்ட ஒழுக்கம் என்பதெல்லாம் ஏமாற்றமும் மோசடியுமேயாகும் என்றும், இது முதலாளிகள் நிலச்சுவான்தாரர்கள் ஆகிய பணக்கார வகுப்பினர்களுடைய நன்மைக்காக தொழிலாளர்கள், குடியானவர்கள் ஆகியவர்கள் கண்களில் மண்ணைப்போடுவதற்கேற்றதுமாகும் என்றும் கூசாமல் சொல்லுவோம்.

வகுப்புப் போரில், தொழிலாளர்களுடைய நன்மையையே பிரதானமாகக் கருதுவதுதான் நமது ஒழுக்கம் என்று நாம் சொல்லுகிறோம். தொழிலாளர் நடத்தும் வகுப்பு யுத்தத்திற்கு ஏற்படும் நன்மைக்கும் அவசியத்திற்கும் தக்கவாறே நமது ஒழுக்கத்தை நாம் ஏற்படுத்திக்கொள்ளுகிறோம். பழய சமூக ஒழுக்கம் என்பது நிலச்சுவான்தாரனும், பணக்காரனும், தொழிலாளர்களையும் குடியானவர்களையும் அழுத்திவைத்து தலையெடுக்க வொட்டாமல் செய்து வருவதற்கு பயன்பட்டு வந்தது. இவ்வித சமூக ஒழுக்கத்தைத்தான் நாம் அழித்துத் தீரவேண்டியதாயிற்று. மேலும் இந்த மாதிரி நிலச்சுவான்

தாரனையும், பணக்காரனையும் தான் வீழ்த்த வேண்டிய தாயிற்று. இந்த நிலச்சுவான்தாரர்களையும், பணக்காரர்களையும் வீழ்த்த வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. ஆனால் இக்காரியத்தை செய்து முடிக்க சில ஸ்தாபன அமைப்புகள் அவசியமாயிற்று. இந்த அமைப்புகளை கடவுளிடம் சொல்லி சிருஷ்டி செய்து விட முடியவில்லை (இந்த அமைப்புகளை அமைக்க "கடவுளால் ஏற்பட்ட ஒழுக்கம் என்பது இடம் கொடுக்கவுமாட்டாது.)

இப்படிப்பட்ட ஸ்தாபன அமைப்புகள் ஏற்படுத்துவதற்கு தொழிற்சாலைகளும் பட்டரைகளும் அவசியமாயிற்று. தங்கள் பழய தூக்கத்தில் இருந்து விழிப்பு எய்திய பழக்கமடைந்த தொழிலாளிகளும் அவசியமாயிற்று. இந்த வகுப்பு உற்பத்தி ஆனபிறகே இன்றைய தினம் காணப்படும் நிலைமைக்கு வந்து சேர ஒரு பொதுஜன இயக்கம் ஆரம்பமாயிற்று. இதன் மூலம் ஏற்பட்ட புரட்சியின் பயனாய் உலகத்திலே மிகவும் பல ஹீனமான ருஷிய தேசத்திலே தொழிலாளருக்கு வெற்றி ஏற்பட்ட பிறகு, மூன்று வருஷ காலமாக உலகம் முழுதுமுள்ள பணக்கார வகுப்பார் யாவரும் ஒன்ருய் திரண்டு தங்களை எதிர்த்தபோதும்கூட ருஷிய தொழிலாளர் எதிர்த்து நின்று வெற்றிபெற முடிந்தது.

நம் கண்முன்னுல் உலகம் முழுவதும் தொழிலாளர்களின் புரட்சி எப்படிப் பரவுகிறது என்பதை இப்போது கண்டு வருகிறோம்.

நமக்கு ஏற்பட்டிருக்கும் அனுபவத்திலிருந்து இப்பொழுது ஒன்றுகூற முடியும். அதாவது ஏற்கனவே ஒற்றுமையின்றியும், கட்டுப்பாடுகள் இன்றியும் இருந்த எல்லாக் குடியானவர்களையும் ஒன்றுபடுத்தி தன்னுடன் சேர்த்துக்கொண்டு

ஒரு மகத்தான சக்தியை சிருஷ்டித்து அந்த சக்தியின், மூலம் எல்லா கொள்ளைக்கூட்டத்தாரின் தாக்குதல்கள் யாவற்றையும் எதிர்த்து நிற்க முடிந்தது. இது தொழிலாளர் வகுப்பைத் தவிர வேறு எவராலும் சாதித்திருக்க முடியாத காரியமாகும். இவ்வகுப்பார் மாத்திரம் தான் கஷ்டப்படும் மக்களுக்கு ஒற்றுமையின் சக்தியை அறிவித்துத் தாங்கள் யாவரும் ஒன்று சேரவும் பொதுவுடைமை சமூகம் கொண்ட புது உலகம் ஒன்றை உண்டாக்கி பெருக்கிக்கட்டி முடிக்கவும் லாயக்குள்ளவர்கள் ஆவார்கள்.

ஆகவே மனித சமூகத்திற்கு அப்பாலிருந்து உற்பவிக்கப்பட்ட ஒழுக்கம் என்பதாக ஒன்று இருப்பதை நாம் ஒப்புக்கொள்வதில்லை. அப்படிப்பட்ட ஒழுக்கம் ஒன்று இருப்பதாகச் சொல்வது மோசடியேயாகும். நாம் சம்பந்தப்பட்டவரை ஒழுக்கம் என்பது மனித சமூகத்தில் தொழிலாளர்கள் நன்மையைப் பொருத்ததேயாகும்.

113094

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

——:0:——

1. கைவல்யம் அல்லது கலைக்கியானம். 0—8—0
2. இராமாயண ஆராய்ச்சி,
முதற்பாகம் பாலகாண்டம் 0—4—0
இரண்டாம்பாகம் அயோத்தியா காண்டம். 0—8—0
3. ஞான சூரியன். 0—4—0
4. மதநீதி மருமம். 0—2—0
5. இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு 0—2—0
6. சுயமரியாதைத் தாலாட்டு. 0—2—0
7. சோதிடப் புரட்டு. 0—2—0
8. ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த
மகாநாட்டின் சொற்பொழிவு. 0—2—0
9. சுயமரியாதைப்பாடல். 0—2—0
10. தர்ம பரீக்ஷை அல்லது
புராண ஆபாசம் 0—3—0
11. பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.
0—4—0
12. மேயோ கூற்று மெய்யா? பொய்யா? 0—3—0
13. அகத்தியர் ஆராய்ச்சி. 0—2—0
14. கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்? 0—2—0
15. கதர்-மூடநம்பிக்கை [இங்[illegible] 0—2—0
16. கடவுளும் பிரபஞ்சமும். 0—4—0
17. இந்தியாவின் குறைபா[illegible] 0—3—0
18. இராமசாமியின் லங்[illegible]ற்பொழிவு 0—0—6
19. சத்தியாக்கிரகமா? [illegible]தனமா? 0—0—3
20. காந்தியின் உண்மை[illegible]ற்றம். 0—0—3

மானேஜர்,

குடி அரசு புத்தகாலயம், ஈரோ[illegible]